REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜுன் 24 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 92 இல. 149 | Monday 24, June, 2024 | 16 பக்கங்கள் | 50/-

## தெங்கு உற்பத்திகள் ஏற்றுமதி வருமானம் 20 வீதம் அதிகரிப்பு

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 முதல் 05 மாதங்களில் தெங்கு உற்பத்தி சார்ந்த பொருட்களின் ஏற்றுமதி வருமானம், 20 வீதம் அதிகரித்துள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் ரொஷான் பெரேரா தெரிவிக்கையில், 330 மில்லியன் டொலர் வருமானம் தற்போது கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## கைத்தொழில் துறையை மீளக் கட்டியெழுப்பல்:

# சிறு, நடுத்தர கைத்தொழிலாளருக்கு விரைவில் சலுகைக் கடன் திட்டம்

### ரூ. 2,000 கோடி ஒதுக்கீட்டில் 04 கடன் வசதிகள் அறிமுகம்



### கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்த 16 முன்னணி வங்கிகள் தெரிவு; கடனை மீள செலுத்த பத்து வருட கால அவகாசம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வீழ்ச்சியடைந்துள்ள கைத்தொழில் துறையை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில், சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையினருக்கும் தொழில் முயற்சியாலர்களுக்கும் சலுகைக் கடன்களை வழங்குவதற்காக 2,000 கோடி ரூபாவில் நான்கு கடன் வழங்கும் திட்டங்களை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

மிகக் குறைந்த வட்டி வீதத்துடன் இலகுவான நிபந்தனையின் கீழ், இந்த கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சு மற்றும் கைத்தொழில் அமைச்சு ஆகியன இணைந்து நாட்டின் 16 முன்னணி வங்கிகள் ஊடாக இந்த நான்கு கடன் திட்டங்களில் இரண்டை நடைமுறைப்படுத்துவதற்கு

06

## எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு

*TMVP தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உறுதி*



ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே தமது கட்சி ஆதரவளிக்கவுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை

06



## G.C.E.O/L பெறுபேறுகள் 10 நாட்களுக்குள் வெளியீடு

03

## காஸா சிறுவர் நிதியத்துக்கு காத்தான்குடி பள்ளிவாசலிருந்து 10 மில்லியன் ரூபா

### ஜனாதிபதியிடம் காசோலை கையளிப்பு



காஸாவில் இடம்பெற்று வரும் மோதல்கள் தொடர்பில் இலங்கையின் நிலைப்பாடு ஒருபோதும் மாறாதெனவும், 05 வருடங்களுக்குள் பாலஸ்தீன அரசை ஸ்தாபிக்க வேண்டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடாகுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். காஸாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக காத்தான்குடி பெரிய ஜும்ஆ

06

## முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவுகள் 5,000 ரூபா

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படும் 2,500 ரூபா மாதாந்த கொடுப்பனவை 5,000 ரூபாவாக அதிகரிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர், மகளிர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் செயல்படுத்தப்படும் 'குரு அபிமானி' திட்டத்தின் கீழ், இது செயல்படுத்தப்படவுள்ளது.

இதன்படி, இந்தப் புதிய கொடுப்பனவு ஜூன் மாதம் முதல் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் இக்கொடுப்பனவை வழங்குமாறு, சிறுவர் மற்றும் மகளிர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் யமுனா பெரேரா பணிப்புரை விடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வங்குரோத்திலிருந்து விரைவில் வழமைக்கு வந்தது இலங்கை மட்டுமே

### பெருமை, ஜனாதிபதி ரணிலையே சாரும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொருளாதாரத்தில் மிக மோசமான வகையில் வீழ்ச்சியடைந்திருந்த நாடு, மீள இயல்பு நிலைக்குத் திரும்பியமைக்கு முக்கிய காரணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என முன்னாள் அமைச்சரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன

06

## ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை: ஓய்வு பெற்றோரை இணைக்க முடிவு



மாகாண சபைகளுக்குட்பட்ட பாடசாலைகளில் 8,139 ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வாக, ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்கள் மூன்றாண்டு காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை,தற்போது புதிதாக இணைக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் எதிர்காலத்தில் இணைக்கப்படவுள்ள ஆசிரியர்களின்

06

## ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை அறிவிப்பு

### அரசாங்க வர்த்தமானியும் வெளியீடு




அரசாங்கம் வெளியிட்டுள்ள புதிய குடிவரவு சட்டமூலத்தின் கீழ், ஆட் கடத்தலில் ஈடுபட்டதாகக் குற்றம் நிரூபிக்கப்பட்ட எந்தவொருவருக்கும் ஐந்து முதல் பத்து வருடங்கள் வரையிலான சிறைத் தண்டனையும் இரண்டு மில்லியன் ரூபாய் வரையிலான அபராதமும் விதிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது.

06

## நீதி அமைச்சர் விஜேயதாசவின் கட்சி உறுப்புரிமை: SLPP இன்று தீர்மானிக்கும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவின் கட்சி உறுப்புரிமை தொடர்பில் இன்று (24) கட்சியின் செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது. பொது ஜன பெரமுனவின் இன்றைய செயற்குழுக் கூட்டத்தில், அமைச்சர்

06

## வரலாற்றில் முதற் தடவையாக ரயிலில் பொசன் பக்தி கீதம்



நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த ரயில்வே திணைக்கள வரலாற்றில், முதல் முறையாக ரயில் பெட்டியில் பொசன் பக்திப் பாடல் நிகழ்வு நடைபெற்றது. விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட ஹோமாகம '2024 தர்ம ரஷ்மி' பொசன் வலயத்துடன் இணைந்ததாக இலங்கை

06

## திருமலை, சிலாபம், பொத்துவில் கடற்பிரதேசத்தில் பலத்த காற்று

### கடல் கொந்தளிப்பு குறித்தும் எச்சரிக்கை




திருகோணமலை, சிலாபம், பொத்துவில் வரையான கடற்பிரதேசத்தில் பலத்த காற்று வீசுவதுடன் கடலும் கொந்தளிப்பாகக் காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று (23) காலை 7:00 மணிக்கு வெளியிடப்பட்ட இந்த எச்சரிக்கை அறிவிப்பு இன்று (24) காலை 7:00 மணி வரை செல்லுபடியாகுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை மற்றும் புத்தளம் ஊடாக சிலாபம் வரையிலும்

06

## பிரிட்டனில் LTTE மீதான தடையை நீக்கும் விண்ணப்பம் நிராகரிப்பு



பிரிட்டனில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சமர்ப்பித்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் மேன்முறையீட்டு ஆணைக் குழு கடந்த வெள்ளிக்கிழமை இதை நிராகரித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ அரசாங்கம், அகிம்சை வழிகளில் அதன் அரசியல் மற்றும் கருத்தியல் நோக்கங்களைத் தொடர விரும்புவதால்,

06

## பறவைக் காய்ச்சல் பரவல் இலங்கைக்கு ஆபத்தில்லை

### சுகாதார அமைச்சு விளக்கம்



உலகின் சில நாடுகளில் பரவி வரும் பறவைக் காய்ச்சல் நோயால், இலங்கைக்கு இதுவரை எந்த ஆபத்தும் ஏற்படவில்லையென சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

நாட்டில் பறவைக் காய்ச்சல் தொடர்பான அபாயகரமான சூழல் இல்லையென்றாலும் இது குறித்து அவதானமாக செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இலங்கை மக்களுக்கு இந்த வகையான நோய்

06

## சிறார்களுக்கு பரவும் வைரஸ் நோய்த் தாக்கம் அதிகரிப்பு



காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் பல்வேறு காரணங்களால் சிறார்கள் மற்றும் பிள்ளைகளுக்கு பல்வேறு நோய்கள் பரவுவது அதிகரித்துள்ளதாக சிறுவர் வைத்திய கல்லூரியின் செயலாளர் வைத்தியர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

பல்வேறு வைரஸ் தொற்றுகள் காரணமாக சுவாசக் கட்டமைப்பு தொடர்பான நோய்கள் அதிகம் காணப்படுகிறது. இதனால் காய்ச்சல், சளி போன்ற நோய்கள் சிறுவர்களிடையே அதிகமாக பரவுவதாகவும் வைத்திய நிபுணர் சன்ன டி சில்வா தெரிவிக்கின்றார்.

06

## எல்லைதாண்டிய 18 இந்திய மீனவர்கள் யாழ். கடலில் கைது

**யாழ். விசேட நிருபர்**



நாட்டின் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடித்த இந்திய மீனவர்கள் 18 பேர்,நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைதாகினர்.இதன்போது இவர்களது மூன்று படகுகளும் கைப்பற்றப்பட்டன. கைதான மீனவர்கள் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பஸ் – முச்சக்கரவண்டி விபத்தில் 02 இளைஞர்கள் பலி, இருவர் படுகாயம்

### இரத்தினபுரியிலிருந்து யாழ். செல்கையில் சம்பவம்

அநுராதபுரம், பாதெனிய பிரதான வீதியில் ஏற்பட்ட கோர விபத்தில், இளைஞர்கள் இருவர் பலியானதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர். பஸ்ஸும் முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதி நேற்றுக்காலை இவ்விபத்து ஏற்பட்டதாக தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் தலாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

எப்பாவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடியாவ பிரதேசத்தில் வசிக்கும் 24 மற்றும் 19 வயதுடைய

06

# நெருக்கடியைக் கண்டு ஓடிவிடும் தலைவர்களால் நாட்டுக்கு நன்மை கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது!



## மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி



நாட்டின் நெருக்கடியைக் கண்டு ஓடி விடும் தலைவர்களிடமிருந்து நாட்டுக்கு நன்மையை எதிர்பார்க்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடு அராஜகமாக இருந்த போது நான் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்காவிட்டால், இன்று நாட்டின் நிலைமையை நினைத்துப் பார்த்திருக்க முடியாது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பு மாநகரசபை கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி தெரிவித்ததாவது:

"மட்டக்களப்பில் அரசியல் மற்றும் பொதுஅமைப்புகளைச் சேர்ந்த பலரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இன்று நாடு மிகவும் கடினமான நிலையில் உள்ளது. கடந்த ஆட்சியின் போது, இந்த நாட்டின் பொருளா தா ரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு, குறைந்தபட்சம் மூன்று பில்லியன் டொலர்களை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்பதை கூறியிருந்தேன். அன்று எந்த அரசியல் கட்சியும் அந்த உண்மையைச் சொல்லவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், மக்கள் விடுதலை முன்னணியினர் இது பற்றி என்ன சொன்னார்கள்? நாங்கள் மட்டுமே நாட்டுக்கு உண்மையைக் கூறியதால், நாங்கள் பொய்ப் பிரசாரம் செய்கிறோம் என்று மக்கள் நினைத்தனர். அரசியல் நிலைப்பாடு எவ்வாறானதாக இருந்தாலும், கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் நாட்டின் எதிர்காலத்திற்காக உண்மையைப் பேச வேண்டும். அரசியலில் நாம் எப்போதும் உண்மையையே பேச வேண்டியது கட்டாயமாகும். நாட்டில் போராட்டம் வலுவடைந்திருந்த காலத்தில், அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சஜித் பிரேமதாசவிடம் இந்த நாட்டைப் பொறுப்பேற்குமாறு கோரினார். நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்க அவர்கள் முன்வரவில்லை. இப்போது நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கோரும் மக்கள் விடுதலை முன்னணி அந்த கோரிக்கையைப் பொருட்படுத்தவே இல்லை. இவ்வாறானவர்களை நாட்டின் தலைவர்களாக்க வேண்டுமா?

எனினும், சவால்களைக் கண்டு அஞ்சாமல் அதற்கு ஈடுகொடுத்து அரசாங்கத்தையும் அமைத்தோம். தற்போது நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு வருகிறது. சவால்களுக்கு மத்தியில் நாட்டை ஏற்றுக்கொண்ட என்னையும் பதவி விலகுமாறு, வலியுறுத்திய எதி ர்க்கட்சிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தன.

அந்த நேரத்தில் பதவி விலகியிருந்தால் நாட்டின் தற்போதைய நிலை என்னவாகியிருக்கும்? நாட்டுக்கு மிகவும் நெருக்கடியான நேரத்தில் நான் நாட்டை முன்னோக்கிக் கொண்டு சென்றேன். இந்நாட்டு மக்களுக்காக வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான பல முயற்சிகளை செய்துள்ளேன்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போதும் அரச ஊழியர்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டன. சமுர்த்தி கொடுப்பனவை இரட்டிப்பாக்கி அஸ்வசும திட்டத்தை செயற்படுத்தினோம். காணி உறுதி இல்லாத மக்களுக்கு இலவச உறுதிப்பத்திரம் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 27,000 இற்கும் மேற்பட்ட இலவசக் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. அவற்றை இரண்டு மாதங்களுக்குள் வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

வங்குரோத்து நிலையில் இருக்கும் போது இவற்றை செய்ய முடிந்ததால், அதிலிருந்து மீண்டு வந்த பின்னர் நாட்டு மக்களுக்கு இன்னும் அதிகமான நன்மைகளைச் செய்ய முடியும். அதற்காக நாம் அனைவரும் ஒற்றுமையாக முன்னேற வேண்டிய நேரம் வந்துள்ளது."



இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் கே. மோகன், ஐக்கிய தேசியக் கட்சியின் ஏறாவூர் அமைப்பாளர் எம். ஏ. எம். பிலால், ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு பிராந்திய அமைப்பாளர் எம். ஏ. நசார், ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள், பிரதேச அமைப்பாளர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

*ஜனாதிபதி ஊடகப் பிரிவு*



# ஜனாதிபதி அலுவலக நிதிஒதுக்கீட்டில் மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தின் புனரமைப்புப் பணிகள்

## ஜனாதிபதி நேரில் பார்வையிட்டு உடனடிப் பணிப்புரை





உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தின் புனரமைப்புப் பணிகளை ஆராய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (22) முற்பகல் அங்கு விஜயம் செய்தார்.

தேவாலயத்திற்குச் சென்ற ஜனாதிபதி, தேவாலயத்தின் பிரதான போதகர் ரொஷான் மகேசனுடன் கலந்துரையாடினார்.

தேவாலயத்தின் புனரமைப்புப் பணிகள் இதுவரை ஏன் நிறைவடையவில்லை என்பது தொடர்பில் கேட்டறிந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது குறித்து உடனடியாக ஆராய்ந்து அறிக்கை வழங்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். அத்துடன், தேவாலயத்தின் திருத்தப் பணிகளை ஜனாதிபதி அலுவலகத்தின் நிதி ஒதுக்கீட்டில் துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை இராணுவத்தின் ஆதரவை வழங்குமாறும் ஜனாதிபதி இராணுவத் தளபதிக்கு பணிப்புரை விடுத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டனர்.

*ஜனாதிபதி ஊடகப் பிரிவு*

# விவசாயிகளின் வாழ்க்கையில் புதிய மாற்றம் ஏற்படுத்தப்படும்



## 'பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவே நான் நாட்டை பொறுப்பேற்றேன்' - ஜனாதிபதி

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பவே தாம் நாட்டைப் பொறுப்பேற்றதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் விவசாயிகளின் வாழ்விலும் புதிய மாற்றம் ஏற்படும் என்றும் குறிப்பிட்டார்.

விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் 55 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு கரடியனாறு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நிலக்கடலை பதப்படுத்தும் நிலையத்தை நேற்று முன்தினம் காலை திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் தெரிவித்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதிக்கு தமிழ் கலாசார முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.நிலக்கடலை பதப்படுத்தும் நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, அதன் செயற்பாடுகளைப் பார்வையிட்டார். அதனையடுத்து விவசாயிகளுக்கு ஜனாதிபதியால் மடிக்கணினிகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை, மைலம்பாவளி செங்கலடி பிரதேசத்தில் அமைந்துள்ள மாதுளை தோட்டத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டார்.

இந்த மாதுளை தோட்டம் 150 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருப்பதோடு, 300 விவசாயிகள் இந்தப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகள் கடந்த வருடம் அரை ஏக்கர் மாதுளை விளைச்சலில் 36 இலட்சம் ரூபாய் வரையிலான வருமானத்தை ஈட்டியிருந்தனர்.





நிலக்கடலை பதப்படுத்தும் நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி,

"இது விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் ஒரு அங்கமாகும். நாட்டில் விளைச்சல் செய்யாத காணிகளே அதிகளவில் உள்ளன. இந்த நிலங்கள் அனைத்தும் விளைச்சலுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். அதனூடாக ஏற்றுமதி விவசாயமாக கட்டமைக்க வேண்டும். இந்த நாட்டின் உணவுத் தேவைக்காக மட்டுமன்றி, மற்றைய நாடுகளின் உணவுத் தேவைக்காகவும் விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

அதன் மூலம் அதிகளவில் வெளிநாட்டு வருமானத்தை ஈட்ட முடியும். வெளிநாடுகளில் இருந்து கடன் பெற வேண்டிய தேவையும் இருக்காது.

நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவே இந்த நாட்டை நான் பொறுப்பேற்றேன். புதிய பொருளாதாரம் உருவாகும் போது, நாட்டின் விவசாயிகளுக்கும் நல்ல வருமானம் கிடைக்கும்.

இன்று இத்தொழிற்சாலை திறந்து வை க்க ப்பட்டதுடன் விவசாய நிறுவன ங்க ளுக்கு நவீன தொழில்நுட்ப த்து டன் விவசாயப் பணிகளை முன்னெடுக்க மடிக்கணினிகளும் வழங்கப்பட்டன.

இந்திய விவசாயிகள் இந்த செயற்பாடுகளை தங்கள் கைத்தொலைபேசியின் மூலம் முகாமைத்துவம் செய்கின்றனர். அரசாங்கத்தின் காணிகளில் விவசாயம் செய்து வந்தவர்களுக்கு நிரந்தர காணி உறுதிகளை வழங்கியிருக்கிறோம். மட்டக்களப்பு மாவட்டத்திலும் காணி உறுதிகள் வழங்கப்பட்டன. அதனால் உங்களுக்கு காணி உறுதி கிடைத்துள்ளது. அதனால் நீங்கள் பெருமிதம் கொள்ள வேண்டும்.

மேலும், நாடளாவிய ரீதியில் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். விவசாய அமைச்சும் மாகாண விவசாய அமைச்சுகளும் இணைந்து இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அடுத்த வருடத்திற்குள் அனைத்து விவசாய சேவை நிலையங்களையும் விவசாய நவீனமயமாக்கல் நிலையங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்நாட்டு விவசாயிகளின் வருமானத்தை படிப்படியாக அதிகரித்து, கிராமப் பகுதிகளும் வளர்ச்சியை எட்டும்.

அதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரிய வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

மகாவலி ஏ, பி வலயங்கள் உள்ளிட்ட பிரதேசங்களில் விவசாயத்தை மேம்படுத்த எதிர்பார்த்துள்ளோம். அதன் மூலம் அப்பகுதி விவசாயம் முழுமையாக வளர்ச்சி அடையும்" என்று தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான எஸ். வியாழேந்திரன், சிவநேசதுரை சந்திரகாந்தன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்டோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தொழிற்சங்க நடவடிக்கைகள்: பாடசாலைகள் வழமை போன்று இயங்கும் - கல்வியமைச்சு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்விசார் மற்றும் கல்வி சாரா தொழிற்சங்கங்கள் இன்று பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டாலும் இன்றைய தினம் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெறும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு நேற்று வெளியிட்டிருந்த விசேட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இன்று திங்கட்கிழமை (24) பாடசாலை கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெறும்.

கல்வி மற்றும் கல்வி சாரா தொழிற்சங்கங்கள் இன்றும் (24) நாளையும் (25) சுகவீன விடுமுறையை அறிவித்து பணி பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளன. இந்நிலையிலேயே கல்வியமைச்சு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டம், வடமத்திய மாகாணம் மற்றும் வடமேல் மாகாணம் ஆகியவற்றிலும் இந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் இடம் பெறுவதுடன் நாளை (25) மேல் மாகாணத்திலும் இந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமது சேவைக்கான சேவை யாப்பை தயாரித்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கங்கள் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளன.

எனினும், பாடசாலை நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெறும் என்றும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, அனைத்து ஆசிரியர் அதிபர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களும் எதிர்வரும் (26) சுகவீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## SLBC சிரேஷ்ட அறிவிப்பாளர் மஹ்ரூப் மொஹிதீன் நேற்று காலமானார்



இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன சிரேஷ்ட அறிவிப்பாளரும்.தயாரிப்பாளருமான அல் ஹாஜ் மஹ்ரூப் மொஹிதீன் தனது 56வது வயதில் நேற்று காலை கொழும்பு 12 இல் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் காலமானார்.

மாணவப் பருவத்திலிருந்தே இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் பல நிகழ்ச்சிகளுக்கு குரல் கொடுத்து வந்த அவர், கலைஞர் தேர்வில் தெரிவானார்.1994ஆம் ஆண்டு பகுதி நேர அறிவிப்பாளராக தேர்வாகி 2000ஆம் ஆண்டு நிரந்தர அறிவிப்பாளரானார்.

சிறந்த செய்தி வாசிப்பாளராகவும் செயற்பட்டுவந்த இவர் 2014ஆம் ஆண்டு முதல் தர அறிவிப்பாளராக

06

## நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபை 2023 இல் 5.2 பில். ரூபா இலாபம்

தேசிய நீர் வழங்கல்,வடிகாலமைப்புச் சபை 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் 5.2 பில்லியன் ரூபாவை இலாபமாக பெற்றுள்ளது.

கட்டண அதிகரிப்புக்குப் பின்னர், பெறப்பட்டுள்ள இந்த இலாபத்தால்,விநியோகிக்கப்படும் நீரில் 25 வீதத்துக்கு பணம் கிடைக்கவில்லை என்றும் சபை தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் சபையின் மொத்த வருமானம் 35.4 பில்லியன் ரூபாயிலிருந்து 61.8 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீர் விநியோகம் மூலமான வருமானம் 33.1 பில்லியன் ரூபாவிலிருந்து 58.5 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இந்த காலப்பகுதியில் விநியோகச் செலவு 23.14 பில்லியன் ரூபாயிலிருந்து 32.8 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

06

## G.C.E.O/L பெறுபேறுகள் 10 நாட்களுக்குள் வெளியீடு

கல்விப் பொது சாதாரண தர (2023/2024) பரீட்சை பெறுபேறுகளை இன்னும் 10 நாட்களுக்குள் வெளியிடத் திட்டமிட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர "தினகரனு"க்கு நேற்று (23) தெரிவித்தார்.

சாதாரண தர பரீட்சை பெறுபேற்றை ஒன்றரை மாதங்களில் என்ற குறுகிய

06

## பாதாள உலக நபர் அதிரடி கைது

பொலிஸாரால் பல நாட்களாக தேடப்பட்டு வந்த தென்னிலங்கையின் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த நபர் ஒருவர், கைது செய்யப்பட்டுள்ளதாக கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரால் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பெப்பிலியான பிரதேசத்தில் தற்காலிகமாக வசிப்பவரெனவும் தென்னிலங்கையில் இடம்பெற்ற பல குற்றச் செயல்களுக்காக நீதிமன்ற பிடியாணைகள் இவர் மீது உள்ளதாகவும் இவர் பொலிஸாரால் பலநாட்களாக தேடப்பட்டு வந்தவரெனவும் தெரியவந்துள்ளது.

06

## 2024: இதுவரை 9,66,600 சுற்றுலாப் பயணிகள் வருகை

### சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 09 இலட்சத்து 66 ஆயிரத்து 604 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இம்மாதத்தின் நேற்று வரையான காலப்பகுதியில் மாத்திரம் 69 ஆயிரத்து 825 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் ஜனவரி மாதத்தில் 2,08,253

06

## கட்சியின் கொள்கைகளை பாதுகாக்கும் நபரே ஜனாதிபதி வேட்பாளராக முடியும்


**லோரன்ஸ் செல்வநாயகம்**



கட்சியின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்பவரே பொது ஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வர முடியும் என,கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். தேர்தலில் பொது ஜன பெரமுன கட்சியில் வாக்குக் கேட்பதற்கு மட்டும் வருபவர்கள் மற்றும் அந்தக் கட்சியில் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு தற்போது தனியாக செயற்படும் எவருடனும் எத்தகைய கூட்டணியையும்

06

## தினகரன் 92 வருடங்களுக்கு முன் தினகரன் இன்று 24 ஜூன் 1932


அரசாங்க சபை நடவடிக்கை
அட்டோர்ணி ஜெனரலுக்கு ஆப்பு
மந்திரிமாரின் அபிப்பிராயம்
அரசாங்க சபைக் காரியதரிசிகள் மூவரும் நீக்கப்பட வேண்டும்
அட்டோர்ணிஜெனரல் நேற்று முன் தினம் சட்ட நுணுக்கங்களை யாராய்ந்து நாவன்மையுடன் செய்த பிரசங்கத்தை நேற்று திரு. கொரியா கண்டித்து விட்டு "இலங்கை சுய ஆட்சி பெறுவதற்கு அது என்ன நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டுமென டொனமூர் குழுவினர் கூறியிருந்தனரோ அவற்றை யெல்லாம் இலங்கை தற்போது பூர்த்தி செய்துவிட்டது" என்று கூறினர். சர். ஜயதிலகா, நிதானமான தமது வார்த்தைகளினால் அரசாங்கசபைக் காரியதரிசிகள் மூவரையும் ஒழித்து விடுவதே சுய ஆட்சிக்கு அடிகோலுவதாகுமெனப் பலமாக விவாதித்தார்.

### அரசாங்க சபை நடவடிக்கை

அட்டோர்ணி ஜெனரலுக்கு ஆப்பு

**மந்திரிமாரின் அபிப்பிராயம்**

அரசாங்க சபைக் காரியதரிசிகள் மூவரும் நீக்கப்பட வேண்டும்

அட்டோர்ணிஜெனரல் நேற்று முன் தினம் சட்ட நுணுக்கங்களை யாராய்ந்து நாவன்மையுடன் செய்த பிரசங்கத்தை நேற்று திரு. கொரியா கண்டித்து விட்டு "இலங்கை சுய ஆட்சி பெறுவதற்கு அது என்ன நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டுமென டொனமூர் குழுவினர் கூறியிருந்தனரோ அவற்றையெல்லாம் இலங்கை தற்போது பூர்த்தி செய்துவிட்டது" என்று கூறினர். சர். ஜயதிலகா, நிதானமான தமது வார்த்தைகளினால் அரசாங்கசபைக் காரியதரிசிகள் மூவரையும் ஒழித்து விடுவதே சுய ஆட்சிக்கு அடிகோலுவதாகுமெனப் பலமாக விவாதித்தார்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)




தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 10ஆம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 17

### குறள் தரும் சிந்தனை



செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது

ஒருவருக்கு ஒரு நன்மையும் நாம் செய்யாத போதும், அவர் நமக்கு உதவினால், அதற்குக் கைம்மாறாக மண்ணுலகையும் விண்ணுலகயும் கொடுத்தாலும் சமம் ஆகாது.

# நன்மை தரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நேற்றும், நேற்றுமுன்தினமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்தார். மட்டக்களப்பு கிழக்கு மாகாணத்திலுள்ள முக்கியத்துவம் மிக்க மாவட்டங்களில் ஒன்றாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான இவ்விஜயத்தின் போது பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் தொடக்கி வைத்த ஜனாதிபதி, அம்மாவட்டத்தின் பல பிரதேசங்களுக்கும் நேரில் விஜயம் செய்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். அவர்களது குறைநிறைகளையும் கேட்டறிந்ததோடு, அவர்கள் முகம்கொடுத்துள்ள பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஜனாதிபதி 2016 இல், பிரதமராகப் பதவி வகித்த போது அன்றைய உள்நாட்டலுவல்கள் அமைச்சரான பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கான புதிய கட்டடத்தை திராய்மடுவில் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தார். தற்போது இக்கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவுற்றுள்ளன. 1055 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இக்கட்டடத்தை ஜனாதிபதி சனிக்கிழமையன்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

அதேநேரம் உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 27 ஆயிரத்து 595 பேருக்கு காணி உறுதி வழங்கும் நடவடிக்கையைத் தொடக்கி வைத்த ஜனாதிபதி, ஆங்கில டிப்ளோமாதாரிகள் 252 பேருக்கு ஆசிரியர் நியமனமும் வழங்கி வைத்தார்.

மேலும், மாவட்ட செயலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி, 'மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் அபிவிருத்தி செய்யப்படாதுள்ள மகாவலிக் காணிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இது உண்மையில் பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கையாகும். நாடொன்றின் நிலைபேறான அபிவிருத்திக்கு அந்நாட்டின் அனைத்து பிரதேசங்களும் அபிவிருத்திக்கு உட்படுத்தப்படுவது அவசியம். நாட்டில் சுமார் மூன்று தசாப்த காலம் நீடித்த யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பல பிரதேசங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக நீண்ட காலம் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் அப்பிரதேசங்களையும் உரிய முறையில் அபிவிருத்தி செய்யும் போது நாட்டின் அபிவிருத்தி துரிதமடையும்.

அந்த வகையில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் கிழக்கு பிரதேசங்களில் பாரியளவிலான விவசாய செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. பால் உற்பத்தித்துறையை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வெருகலாறு முதல் அறுகம்பை வரையிலான கரையோரப் பிரதேசங்களின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்தோடு மட்டக்களப்பு கோட்டையைத் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் அபிவிருத்தி செய்யவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்தத் துறைகளை அபிவிருத்தி செய்யும் போது புதிய தொழில்வாய்ப்புக்கள் உருவாகும். பிரதேச மட்டத்தில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படும். வேலையின்மை வீழச்சி அடையும். உற்பத்தித்துறை மேம்பாடு அடையும். இவற்றின் ஊடாக நாட்டில் பொருளாதார ரீதியில் புத்தெழுச்சி ஏற்படும். அதுவே நாட்டின் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.

ஆனால் நாட்டின் பொருளாதார நலன்களுக்கு முன்னுரிமை அளித்து அனைத்து வளங்களும் உரிய முறையில் பயன்படுத்தப்படத் தவறியதன் விளைவாகவே 2022 இல் நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு முகம்கொடுக்க வித்தூன்றியது. அப்பொருளாதார வீழ்ச்சியினால் நாடும் மக்களும் முகம் கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கொஞ்சநஞ்சமல்ல. அந்தக் காலகட்டத்தில் மக்கள் பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்களும் இலகுவில் மறக்கக்கூடியவை அல்ல.

அதனால் கடந்த காலத்தில் விட்ட குறைகளையும் தவறுகளையும் இனியும் விடக்கூடாது என்பதில் மக்கள் தெளிவாக உள்ளனர். இவ்வாறான சூழலில் பொருளாதார ரீதியில் நாட்டை கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் அளித்துவரும் பிரதிபலன்கள் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளன. ஜனாதிபதி முன்னெடுக்கும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை அனைத்து மக்களும் கட்சி பேதங்களுக்கு அப்பால் பாராட்டி வரவேற்கக் கூடியவர்களாக உள்ளனர்.

இவ்வாறான சூழலில் கடந்த சனியன்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி, கிழக்கு மாகாணத்தில் காணப்படும் வளங்களை பொருளாதார மேம்பாட்டுக்கு பயன்படுத்துவது குறித்து அறிவித்துள்ள விடயங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் ஆக்கபூர்வமான பிரதிபலன்களை நிச்சயம் பெற்றுக்கொடுக்கும்.

அது நாட்டில் பொருளாதார மறுமலர்ச்சிக்கு வித்திடும். நாட்டின் அனைத்து மக்களது எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை மீண்டும் இயல்புநிலைக்கு கொண்டுவர நடவடிக்கை

*இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக பேராசிரியர் சுதந்த லியனகே நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய ரூபவாஹினியை கட்டியெழுப்ப என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்? மேலும் நேத்ரா தொலைக்காட்சி மற்றும் சேனல் ஐ யை மேம்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது குறித்து இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் பேராசிரியர் சுதந்த லியனகேயுடனான கலந்துரையாடல் இது.*



## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் பேராசிரியர் சுதந்த லியனகே

***கேள்வி: கடந்த காலங்களில் தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனம் பெரும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது. சில காலமாக இந்நிலையில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், தேசிய ரூபவாஹினியை மீளக்கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ள வேண்டிய புதிய நடவடிக்கைகள் எவை?***

*பதில்: இந்நிறுவனத்தின் தலைவர் பதவியை நான் பொறுப்பேற்று மிகக்குறுகிய காலமே ஆகிறது. மேலும் இந்த நிறுவனத்தை வெற்றிகரமான நிறுவனமாக மாற்றுவதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன். இந்த நிறுவனம் எவ்வகையில் பின்னடைவு அடைந்துள்ளது என்பதை இங்கு நாம் பார்க்க வேண்டும், அதற்கான காரணங்களை நாம் ஆய்வு செய்ய வேண்டும். பதவி உயர்வு நடைமுறை தொடர்பாக ஊழியர்களிடையே ஒரு பிரச்சினையான சூழ்நிலை காணப்படுகிறது. இவ்வாறான சூழ்நிலைகளைத் தீர்ப்பதன் மூலமே நிறுவனத்தை மீண்டும் உயர்த்துவது சாத்தியமாகும். நிதி நிலைமையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.*

*இது சம்பந்தமாக, நாங்கள் நிதி அமைச்சுடன் இணைந்து கூட்டுத்தாபனத்தின் நிதி குறித்து கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்து வருகிறோம். நிதி அமைச்சுடனான கலந்துரையாடலின் நோக்கம் வெளித்தரப்பினருக்கு செலுத்த வேண்டிய பணம் குறித்து கவனம் செலுத்துவதாகும். இந்நிலைமையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திடம் இருந்து எவ்வாறான ஆதரவைப் பெற முடியும் என ஆராய்கிறோம். இது ஒரே நாளில் ஏற்பட்ட நிலைமையல்ல. நீண்ட காலமாக புரையோடிப் போனவை என்பதை சுட்டிக்காட்டியாக வேண்டும்.*

*நாங்கள் இப்போது இலக்கை நிர்ணயித்துள்ளோம் மற்றும் ஜூலை முதல் தேசிய ரூபவாஹினியை வெற்றியை நோக்கி கொண்டு செல்லத் திட்டமிட்டுள்ளோம், அந்த அடிப்படையில் செலவுகள் மற்றும் வருவாயை சமநிலையில் பேண எதிர்பார்க்கிறோம்.*

*தேசிய ரூபவாஹினியை நஷ்டத்தில் இருந்து மீட்டெடுப்பதற்கு இதுவே ஒரே வழி. ஜூலை மாதத்திற்குப் பின்னர் நிறுவனத்தை நஷ்டமடையாமல் பராமரிக்க முடியும் என்று நம்புகிறோம்.*



*கடந்த காலங்களில் நிறுவனத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பணியாற்றினார்கள். ஆனால் தன்னார்வ நஷ்டஈட்டு இழப்பீட்டு முறையின் காரணமாக, ஊழியர்களின் எண்ணிக்கை இப்போது அறுநூற்று ஐம்பதாக குறைக்கப்பட்டுள்ளது. எனவே ஊழியர்களின் சம்பளம் வழங்குவதற்கு செலவிடப்படும் தொகை குறைவாக உள்ளது.*

*மேலும், 2012 ஆம் ஆண்டு முதல் பதவி உயர்வு பிரச்சினையில், ஊழியர்களிடையே அமைதியின்மை நிலவுகிறது. இன்று, தேசிய ரூபவாஹினி நிறைவேற்று நிர்வாகநிலை அதிகாரிகள், பதில் பணிப் பதவியில் இருப்பதால், உள்ளக பதவி உயர்வு நடைமுறையை முறையாக அமுல்படுத்த எதிர்பார்க்கிறோம். அதன்மூலம் பணியாளர்களிடையே ஒரு உத்வேகம் ஏற்படும். அது நிச்சயமாக நிறுவனத்தின் வெற்றிக்கு ஒரு பெரிய உதவியாக இருக்கும்.*

***கேள்வி: தேசிய ரூபவாஹினியையும் தேசிய வானொலியையும் இணைக்கும் பிரேரணை தொடர்பில் ரூபவாஹினி நிலையத்தின் தலைவர் என்ற வகையில் உங்கள் கருத்து என்ன?***

*பதில்: அந்த யோசனையை ஒரு வெற்றிகரமான யோசனையாகக் கருதலாம், அநேகமாக இயங்கும் அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் தொலைக்காட்சி மற்றும் வானொலி இரண்டையும் கொண்ட ஒரே நிறுவனமாக காணப்படுகின்றன. எமது சகோதர சுயாதீன தொலைக்காட்சியும் கூட தங்களுடைய வானொலியாக லக்ஹன்ட வானொலி அலைவரிசையை நடத்துகிறது, எனவே தேசிய ரூபவாஹினியையும் வானொலியையும் இணைத்தால், வெற்றி கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். இந்த நிறுவனங்கள் நீண்ட காலமாகப் பிரிக்கப்பட்டிருப்பதால், அவற்றை இணைப்பதால் இரண்டு நிறுவனங்களின் ஊழியர்களிடையேயும் மனித உறவுகள் கட்டமைக்கப்படும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.*

*இவ்விரு நிறுவனங்களையும் பண நஷ்டம் இன்றிப் பேணுவதற்கான இந்த யோசனை ஒரு நல்ல யோசனையாகக் கருதப்பட வேண்டும். பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளைஞர் சமூகத்தை இலக்காகக் கொண்டு மற்றொரு திட்டம் தொடங்கப்படவுள்ளது. இதில் கலந்து கொள்வது அரசியல்வாதிகள் அல்ல, மாறுபட்ட கருத்துடைய அறிஞர்களாவர்.*

***கேள்வி: தேசிய ரூபவாஹினியின் தரப்படுத்தப்பட்ட முத்திரையாக தொலைக்காட்சி நாடகம் காணப்பட்டது. கலை வரலாற்றில், மிக முக்கியமான தொலைக்காட்சி நாடகங்கள் தேசிய ரூபவாஹினி மூலம் ஒளிபரப்பப்பட்டன. ஆனால் சமீப காலமாக தேசிய ரூபவாஹினியில் புதிய டெலி டிராமாவை பார்க்க முடியாமல் போனதால் பார்வையாளர்கள் தேசிய ரூபவாஹினியில் இருந்து ஒதுங்கிவிட்டார்களா?***

*பதில்: நீங்கள் சொன்னது சரிதான். கடந்த காலங்களில் பணப்பிரச்சினையால் தொலைக்காட்சி நாடகங்களைப் பெற முடியவில்லை. ஆனால் 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மீண்டும் நாடகங்களை ஒளிபரப்பும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு மாதத்திற்குள் நான்கு தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்ப ஆரம்பித்துள்ளோம். அந்த நாடகங்கள் அனைத்தையும் தேசிய ரூபவாஹினியின் உயர் தொலைக்காட்சி நாடகத் தரங்களுக்கு அமைவான டெலி டிராமாக்களாக அறிமுகப்படுத்தலாம். தலைவர் என்ற முறையில், எதிர்காலத்தில் அதிக நாடகங்களை ஒளிபரப்பத் திட்டமிட்டுள்ளேன். இந்நிலையில், தேசிய ரூபவாஹினயை நோக்கி, டெலி டிராமா தயாரிப்பாளர்களின் கவனம் அதிகமாகத் திரும்பியுள்ளது.*



*தேசிய ரூபவாஹினி தயாரித்த பல்வேறு நிகழ்ச்சிகளின் ஒளிபரப்புகள் நிறுத்தப்பட்டுள்ளன. அந்த நிகழ்ச்சிகள் அல்லது நிகழ்ச்சிகளைப் போன்ற நிகழ்ச்சிகளை மீண்டும் தயாரித்து ஒளிபரப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. இனிய பாடல்கள் தொடர்பான பொழுதுபோக்கு நிகழ்ச்சியும், பைலா சாதயா என்ற மற்றொரு நிகழ்ச்சியும், இளைஞர்கள் விரும்பும் (சாட்)அரட்டை நிகழ்ச்சியும் மீண்டும் தொடங்கப்படும்.*

***கேள்வி: தேசிய ரூபவாஹினியின் செய்தி ஒளிபரப்பு பற்றிய தொடர்ச்சியான விமர்சனங்களில் ஒன்று, அதன் நடுநிலை குறித்ததாகும். உங்கள் நிர்வாகத்தில் செய்தித் தொகுப்பை நடுநிலைப்படுத்தும் திட்டம் என்ன?***

*பதில்: அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து அனைத்துக் கருத்துகளுக்கும் இடம்கொடுக்கும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ளோம்.*

*தேசிய ரூபவாஹினி என்ற வகையில், அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்கு இடம்கொடுப்பது தேசிய ரூபவாஹினியின் பொறுப்பாகும், ஆனால் செய்தி அறிவிப்புகளில் மட்டுமல்ல, அரசியல் உரையாடல்களிலும் அனைத்து அரசியல் சித்தாந்தங்களையும் அனுமதித்துள்ளோம், எனவே இப்போது தேசிய ரூபவாஹினி பற்றிய பழைய கருத்தை விட்டுவிட்டு எங்களுடைய செய்திகளைப் பாருங்கள். இப்போது நாம் நடுநிலையாக செய்திகளை ஒளிபரப்ப ஆரம்பித்துள்ளோம்.*

*தேசிய ரூபவாஹினி அதிக சர்வதேச செய்திகளை ஒளிபரப்பவும், அதிக விளையாட்டுச் செய்திகளை ஒளிபரப்பவும் நடவடிக்கை எடுத்துள்ளது, எனவே தேசிய ரூபவாஹினியின் செய்தி அறிக்கை மிகவும் நடுநிலையாக மற்றும் உயர் தரத்துடன் வழங்கப்படும். விளையாட்டுப் போட்டிகளின் நேரடி ஒளிபரப்பையும் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளோம். சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டிகளின் ஒளிபரப்பு ஏற்கனவே தொடங்கியுள்ளது, நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்தப் போட்டி நேரடியாக ஒளிபரப்பப்படுகிறது. இந்த மகளிர் கிரிக்கெட் போட்டிகளை தேசிய ரூபவாஹினி 'சேனல் ஐ' இல் நேரடியாக ஒளிபரப்ப திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மகளிர் கிரிக்கெட் நேரடி ஒளிபரப்புக்கு அனுசரணையாளர்களின் பங்களிப்பும் அதிகரித்து வருகிறது.*

***கேள்வி: தேசிய ரூபவாஹினி என்பது கல்வி நிகழ்ச்சிகளுக்கு அதிக இடமளித்த ஒரு நிறுவனம். கல்வி நிகழ்ச்சிகளில் புதிய தன்மை கொண்ட நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுமா?***

*பதில்: கல்வியில் கவனம் செலுத்தும் ஒரு நிறுவனமாகத் தொடங்கப்பட்ட தேசிய ரூபவாஹினி முத்துஹர உட்பட பல குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளையும், குழந்தைகளின் அறிவை வளர்க்கும் பல நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்புகிறது. இன்று, இந்த நாட்டில் பல தொலைக்காட்சி அலைவரிசைகள் உள்ளன. ஆனால் அவற்றில் அநேகமாக பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளே ஒளிபரப்பாகின்றன. மாணவர்களுக்கான முறையான கல்வித் திட்டங்கள் மற்றும் முறைசாரா கல்வித்திட்டங்களையும் நாங்கள் வழங்குகிறோம். உண்மையில் ஒரு கல்வியாளராக, தேசிய ரூபவாஹினியின் கல்வித் திட்டங்களை மேலும் மேம்படுத்த எதிர்பார்க்கிறேன்.*

***கேள்வி: தேசிய ரூபவாஹினியின் சகோதர தமிழ் அலைவரிசையான நேத்ராவின் தற்போதைய நிலை என்ன?***

*பதில்:உண்மையில், எங்கள் நேத்ரா அலைவரிசை இலாபமீட்டும் அலைவரிசையாகி விட்டது. உண்மையில் நேத்ரா சேனல் மற்ற தமிழ் அலைவரிசைகளுக்கு போட்டியாக உள்ளது. இது மிகவும் நல்ல நிலை. எனவே இதை மேலும் மேம்படுத்த முடியும் என்று நம்புகிறோம்.*

***கேள்வி: நேத்ரா டிவியும், ஐ சேனலும் இணைந்து ஒளிபரப்புப் பணிகளைச் செய்கின்றனவா?***

*பதில்: அந்நிலைமையை மாற்ற நாம் எதிர்பார்க்கிறோம். அதற்காக நேத்ரா மற்றும் சேனல் ஐ இரண்டையும் தனித் தனியாக ஒளிபரப்பு செய்ய எதிர்பார்க்கின்றோம்.*

***கேள்வி: கூட்டுத்தாபனத்தின் தலைவராக உங்கள் எதிர்கால எதிர்பார்ப்பு என்ன?***

*பதில்: தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் வயது நாற்பத்து இரண்டு ஆண்டுகள், அந்த நாற்பத்து இரண்டு ஆண்டுகளில் முப்பத்தைந்து தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நான் முப்பத்தைந்தாவது தலைவர். உண்மையில், ஒரு தலைவர் தனது பணிகளைச் செய்ய போதிய அவகாசம் கிடைக்காததும் கூட்டுத்தாபனத்தின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக இருக்கலாம். எனவே, கடுமையான பின்னடைவில் உள்ள தேசிய ரூபவாஹினியை மீண்டும் இயல்புநிலைக்கு கொண்டு வரத் தேவையான அவசர வேலைத்திட்டத்தை நான் நடைமுறைப்படுத்துவேன்.*

*உதித்த குணவர்தன*
*(புகைப்படம்: நிஷங்க விஜேரத்ன)*
*(தமிழில்: வீ.ஆர். வயலட்)*

# இந்தியாவில் கருத்துக் கணிப்புகள் தடை செய்யப்பட வேண்டும்!

*இந்தியாவின் 2024 மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 400 இடங்களை நிச்சயம் வெல்லும் என்று Axis My India கருத்துக்கணிப்பு வெளியிட்டது. இந்த நிறுவனம் மட்டுமன்றி நாடாளுமன்றத் தேர்தல் குறித்து இந்தியா டுடே, ரிபப்ளிக் டிவி போன்ற பல்வேறு வட இந்திய ஊடகங்கள், பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 350_400 தொகுதிகள் வரை கைப்பற்றி தனிப்பெரும்பான்மையோடு ஆட்சியமைக்கும் என்று கருத்துக்கணிப்புகளை வெளியிட்டன.*

*ஆனால், தேர்தல் முடிவுகள் இதற்கு அப்படியே நேர்மாறாய் வந்ததோடு, கருத்துக்கணிப்புகளும் பொய்த்துப்போனது. பா.ஜ.க கூட்டணியால் 300 இடங்களைக்கூட தொடமுடியவில்லை, 294 இடங்களை மட்டுமே வென்றது. 2019 நாடாளுமன்றத் தேர்தலில் தனிப்பெரும்பான்மையோடு ஆட்சியமைத்த பா.ஜ.க இந்த தேர்தலில் வெறும் 232 இடங்களை மட்டுமே பெற்று தனிப் பெரும்பான்மையை இழந்தது.*

*அத்தோடு, தேர்தல் முடிவுகள் வெளியான அன்று, இந்தியா டுடே செய்தி தொலைக்காட்சி நடத்திய தேர்தல் முடிவுகள் பற்றிய விவாத நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்த 'அக்சிஸ் மை இந்தியா' நிர்வாக இயக்குநர் பிரதீப் குப்தாவிடம், கருத்துக்கணிப்பு பொய்த்துப்போனதை நெறியாளர் ராஜ்தீப் சர்தேசாய் சுட்டிக்காட்ட, விவாதத்துக்கு இடையிலேயே அவர் கண்ணீர்விட்டு அழுதார். இது தொடர்பான வீடியோவும் சமூக வலைதளங்களில் அதிக அளவில் வைரலானது. இன்னொருபக்கம், தேர்தல் முடிவுகள் குறித்த கருத்துக்கணிப்பில், பா.ஜ.க பெரும்பான்மை பெறும் என்று கூறப்பட்டதால், பங்குச்சந்தையில் புள்ளிகள் பெரும் உச்சத்தைத் தொட்டன. ஆனால், தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் பங்குச்சந்தை வீழ்ச்சியை சந்தித்தது. இந்த விவகாரத்தில், நாடாளுமன்ற குழு அமைத்து விசாரிக்குமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்த, தேர்தல் முடிவுகள் குறித்த கருத்துக்கணிப்புகளுக்குத் தடைவிதிக்கவும் சில தரப்பிலிருந்து கோரிக்கை வலுத்தது.*

*இந்த நிலையில், தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்புகளைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.*

# மானுடவியல்



அவர்களில் என்னை ஒழிய மூத்தோர் அறுவரையும் தன் மருமகனாகிய இவனுக்கே விவாகஞ்செய்து கொடுப்பேன் என்று சொல்லிச் சொல்லி, பிறரிடத்திலே திரவியம் வாங்கிக் கொண்டு அவர்களுக்கு விவாகஞ்செய்து கொடுத்து விட்டான். அது கண்டு மனவருத்தமுற்ற இவனுக்கே நான் மனைவியாதல் வேண்டும் என நினைந்து, என் பிதாமாதாக்களை மறைத்து இவனையே சார்ந்து வந்தேன். இவனும் பாம்பினாலே தீண்டப்பட்டு இறந்தான். அடியேன் கடனடுவே கலங்கவிழப் பெற்றார் போல நிற்கின்றேன். தேவரீர் எழுந்தருளிவந்து, அடியேனுடைய துன்பமெல்லாம் நீங்க அருள் செய்தீர்" என்றாள். பிள்ளையார் விஷம் நீங்கும் பொருட்டுத் திருமருகற்கடவுள் மேல் "சடையா யெனுமால்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். உடனே வணிகன் விடந்தீர்ந்து எழுந்து, பிள்ளையாரை நமஸ்கரித்தான். அது கண்ட திருத்தொண்டர்களெல்லாரும் ஆரவாரித்தார்கள். கன்னிகை மனமகிழ்ந்து, பிள்ளையாருடைய திருவடியிலே விழுந்து வணங்கினாள். பிள்ளையார் அக்கன்னிகையையும் வணிகனையும் மணம்புணரும்படி செய்து அவர்களுக்கு விடைகொடுத்து, அங்கே எழுந்தருளியிருந்தார். இருக்கு நாளிலே, சிறுத்தொண்டநாயனார் வந்து பிரார்த்திக்க; பிள்ளையார் மீண்டும் திருச்செங்காட்டாங் குடிக்கு எழுந்தருள விரும்பி அடியாரொடும் அத்திருமருகற் கோயிலிற் சென்று வணங்க; பரமசிவன் தாந்திருச்செங்காட்டாங் குடியிலிருக்கின்ற திருக்கோலத்தை அவருக்கு அங்கே காட்டியருளினார். பிள்ளையார் அதுகண்டு மனமகிழ்ந்து, "அங்கமும் வேதமு மோதுநாவர்" என்னுந் திருப்பதிகம்பாடி, அந்தத் திருப்பதியிலே தானே எழுந்தருளியிருந்தார்.

169

சிலநாட்சென்றபின் அத்திருப்பதியை நீங்கி, தம்மைத் தொடர்ந்த சிறுத்தொண்டநாயனாருக்கு விடைகொடுத்து, சிவஸ்தலங்கள் பலவற்றை வணங்கிக்கொண்டு, திருப்புகலூருக்குச் சமீபித்து, அப்பதியினின்று வந்து தம்மை எதிர்கொண்டு வணங்கிய முருகநாயனார் முதலிய அடியார்களோடு சென்று, திருக்கோயிலை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து, முருகநாயனாருடைய திருமடத்திற்குப் போய், அவர் உபசரிக்க அங்கே எழுந்தருளியிருந்தார். இருக்குநாளிலே, வர்த்தமானீச்சரத்தை வணங்கி, முருக நாயனாருடைய திருத்தொண்டைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினார். அங்கே எழுந்தருளியிருக்குங்காலத்திலே, திருநாவுக்கரசுநாயனார் திருவாரூரை வணங்கிக் கொண்டு திருப்புகலூரை வணங்குதற்கு அடியார்களோடும் எழுந்தருளும் திருவார்த்தையைக் கேட்டு, பேராசையோடு அவரை எதிர்கொள்ளும் பொருட்டு, திருக்கூட்டத்தோடும் திருப்புகலூரின் எல்லையைக் கடந்து சென்றார்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# ஆழ்ந்த அறிவினைத் தரும் மாதம் ஆனி!

சூரியனின் வடதிசைப் பயணக் காலம் ஆன உத்தராயணத்தின் கடைசி மாதமாக வருவது ஆனி. அதாவது, தேவர்களுக்கு உரிய பகல் பொழுதின் இறுதிப் பகுதி. தேவர்களின் மாலை நேரப் பொழுதே மானிடர்கள் ஆகிய நமக்கு ஆனி மாதக் காலம். நம் நாட்டில் நீண்ட பகல் பொழுதினைக் கொண்ட மாதமாக இந்த மாதம் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட 12 மணி நேரம் 38 நிமிடம் வரை இந்த மாதத்தில் பகல் பொழுது நீண்டிருக்கும். சூரியன் நீண்ட நேரம் ஒளி வீசி 'மேலதிக நேர' வேலை பார்ப்பது போன்று நாமும் நமது உச்ச பட்ச உழைப்பினை வெளிப்படுத்த வேண்டிய காலம் இது.

சூரியன் மிதுன ராசியில் சஞ்சரிக்கும் காலம் என்பதால் இதனை மிதுன மாதம் என்றும் அழைப்பர். வடமொழியில் ஜேஷ்ட மாதம் என்று பெயர். ஜேஷ்டா என்றால் மூத்த அல்லது பெரிய என்று பொருள். பெயருக்கு ஏற்றாற் போல் தமிழ் மாதங்களில் பெரிய மாதமும் இதுவே. ஆம், இந்த மாதத்தில் மட்டுமே பிற மாதங்களுக்கு இல்லாதபடி 32 நாட்களைக் காண முடியும். மிதுன ராசியானது அளவில் சற்று பெரிய ராசி என்பதால் இதனைக் கடக்க சூரியனுக்கு கூடுதல் நேரம் தேவைப் படுகிறது என்பதே இதற்குக் காரணம்.

இதன் காரணமாகவே இந்த மாதத்தில் 'அகஸ்' என்றழைக் கப்படும் பகல் பொழுதின் அளவும் அதிகரித்திருக்கிறது. 'ஆண்மூலம் அரசாளும், பெண் மூலம் நிர்மூலம்' என்ற பழமொழியை நாம் கேட்டிருப்போம். மூல நட்சத்திரத்தில் ஆண் குழந்தை பிறந்தால் அது அரசாளும் என்றும், பெண் குழந்தை பிறந்தால் அதனால் நிர்மூலம் உண்டாகும் என்றும் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறோம். அது உண்மையில் ஆனி மூலம் அரசாளும், பெண் (கன்னி) மூலம் நிர்மூலம் என்பதே ஆகும். அதாவது, ஆனி மாதத்தில் மூலம் நட்சத்திரம் வரும் நாள் பொதுவாக பௌர்ணமியோடு இணைந்து வரும்.

பௌர்ணமியில் பிறக்கும் குழந்தைகள் அரசயோகத்தினைப் பெற்றிருப்பர் என்பது ஜோதிட விதி. அதனால் தான் ஆனி மூலம் அரசாளும் என்ற பழமொழி தோன்றியது. பெண் மூலம் நிர்மூலம் என்ற சொற்றொடருக்கு உண்மையான காரணம் இதுதான்: கன்னி மாதம் என்றழைக்கப்படும் புரட்டாசி மாதத்தில் வரும் மூலம் நட்சத்திர நாள், அஷ்டமி அல்லது நவமியோடு இணைந்து வரும். அதாவது, துர்காஷ்டமி அல்லது ஆயுத பூஜையோடு இணைந்து வருகிற நாள். இந்த நாட்களில் அசுரர்களை அம்பாள் நிர்மூலம் ஆக்கினாள் என்பதால் பெண் (கன்னிபுரட்டாசி) மூலம் நிர்மூலம் என்ற சொல் வழக்கும் தோன்றியது.









இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனால் திணைக்களத்தில் வைத்து களுத்துறை அகலவத்தை டாடன்பீல்ட்டில் இயங்கிவரும் கணபதி அறநெறிப் பாடசாலையின் கொடி வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கணபதி அறநெறிப் பாடசாலையின் இணைப்பாளர் கலாவிபூஷணம் தனராஜ், சமூக சேவகர் மோகன். தினேஷ் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இப் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு என்றுமே துணையிருக்கும் பணிப்பாளருக்கும் அறநெறிக் கல்வி பிரிவின் உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினிக்கும் பாடசாலையின் இணைப்பாளருக்கும் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் கொழும்பு மாவட்ட அறநெறி பாடசாலை ஒன்றியத்தின் பொருளாளர் கே. ஈஸ்வரலிங்கம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

# வாங்க போகலாம் ஷீரடி!



வாங்க போலாம் ஷீரடி.!
வரம் வாங்கப்போலாம் ஷீரடி.!
பார்த்திட லாம் நேரடி.!
பாபா.!அருள் வாரடி.!
அவரைப் போல யாரடி.?
ஷீரடி பாபா தானடி.!
அவர் அருள் செந் தேனடி.!
அனுபவித்தேன் நானடி.!
என்றும் பணி வேனடி.!
நம்பிச் செல்ல லாமடி.!
அவர் குழந்தை நாமடி.!
பார்த்தால் நம்பு வோமடி.!
எண்ணிய கிடைக்கு மாமடி.!
ஜீவ சமாதிக் குள்ளிருந்தும்
நம்முடன் பேசு வாரடி.!
தேனாரமுதம் போலினிக்கும்
தென்றலாய் வீசு வாரடி.!
போதும் போதும் என்று
சொல்லும் அளவுக்கு அருள் வாரடி.!
சற்குரு சாயி என்றழைத்தால்
நேரில் வரு வாரடி.!
"உதி"எடுத்து நமக்குப் பூசி
நோய்களைத் தீர்ப் பாரடி.!
அடிக்கடி நம்மை ஷீரடிக்கி
வரச்சொல்லி ஈர்ப் பாரடி.!
ஒருமுறை போய்ப் பாருங்க.!
குறைகளைத் தீர்ப் பாருங்க.!
எல்லாம் நிறை வேறுங்க.!
ஷீரடி மகிமை கூறுங்க.!
ஷீரடி பாபா உள்ளவரை.!
நம்பிய பேர்க்கு ஏது குறை.?
காப்பார்நம்மைக் கடைசி வரை.!
காவல் அவரே இமய வரை.!
சிந்தைக்கினிய ஷீரடி
பாபா வருக ! வருக .! வருகவே.!
திசைகளெட்டும் வறுமை நீங்கி
வளம் தழைக்க அருள்கவே.!

அடியேன்
விசூர்மாணிக்கம்
சாய் ராம் சாய் ராம்





தமிழர் நற்பணி மன்றம், ஸ்ரீஜயப்பன் அறநெறிப் பாடசாலையுடன் இணைந்து அறநெறி பாடசாலை மாணவர்களுக்காக சமய குரவர்கள் நால்வர் பாடியருளிய திருமுறை பதிகங்களை பண்ணோடு பாடும் பயிற்சியை கொழும்பு 15, அளுத்மாவத்தையிலுள்ள அகில இலங்கை ஆனந்த ஐயப்பன் தேவஸ்தானத்தில் வழங்கியது. ஸ்ரீஜயப்பன் அறநெறி பாடசாலையின் கூட்டுப் பிரார்த்தனை பயிற்சி ஆசிரியை சந்திரதேவி செல்லத்துரை இங்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். ஆசிரியை சந்திரதேவி செல்லத்துரையுடன் பண்ணிசை ஆசிரியர்களான செல்லையா அம்பலவாணர், ரூபிணி ஆகியோர் இங்கு பயிற்சிகளை வழங்கினார்கள்.

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 92



சுகபோக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தால், முக்திக்கான வாழ்க்கை எட்டாக் கனியாகிவிடும். பசிக்கு உணவு, உடம்பை மறைப்பதற்குத் துணி, என்று வாழ்ந்து சுக போகங்களை துறந்தால், முக்திக்கான வாழ்க்கை நம் எதிரில் நிற்கும். ஆண்டவன் உலகை படைத்த நாள் முதல், இன்றளவும் ஒவ்வொரு மேன்மையானவரின் சரித்திரம் இதுவே. சுகபோகங்களை துறந்து, தியாக வாழ்க்கையை மேற்கொள்வது மேன்மையை அடைவதற்கான வழியாகும். ஆத்ம முன்னேற்றத்திற்கு இது ஒன்றே சிறந்த வழியாகும்.

தீர்த்தயாத்திரை மூலமோ, விரதம் இருப்பதாலோ, யோகப் பயிற்சி, மூச்சு பயிற்சி செய்வதாலோ, மனம், உடல் ஆகியவை வலுப் பெறுமே தவிர, கடவுளை அடைய முடியாது. கடவுளை வயப்படுத்த, மன உறுதி, மனக்கட்டுப்பாடுடன் கூடிய, செயலில் வெற்றி கொள்ளத் தக்க, சாதனாவின் மூலம் மட்டுமே இயலும். தனிமனித வாழ்வில் பிறருக்கு முன் உதாரணமாக வாழ்ந்தவர்கள் போற்றத் தகுந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் மூலமே உலகத்தில் மக்கள் நலம் உண்டாகியுள்ளது. எனவே நாம் மன பலம் படைத்தவர்களாகவும் ஆத்ம பலம் படைத்தவர்களாகவும் மாறுவோமாக.

இன்றைய உலகம் மூடத்தனம் மற்றும் மூட நம்பிக்கை என்னும் சங்கிலிகளால் இறுக்கப்பட்டுள்ளது. இச்சங்கிலியில் கட்டுப்பட்டு கிடக்கும் மாந்தரை நினைத்தால் என் மனம் துடிக்கிறது. ஒவ்வொரு மனிதனின் துன்பத்திற்கும், சமுதாயத்தின் இந்த அவல நிலைக்கும் மக்களின் மூட நம்பிக்கை தான் காரணமென, கிழக்கில் உதிக்கும் சூரியன் போல் தெள்ளத் தெளிவாக எனக்குத் தெரிகிறது.

உலகில் எங்கிருந்து ஒளி பிறக்கும்? தியாகத்தினால் மட்டுமே இது நிறைவேறும். தியாக உள்ளம் கொண்ட வீரன் மற்றவர்க்கு முன்னுதாரணமாய்த் திகழ்கிறான். பின்னர் பலரும் அவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகின்றனர். வெளிச்சத்தை உருவாக்கும் இந்த தியாக வீரர்களின் செயல், ஆதிகாலத்திலிருந்தே நடந்து வருகிறது. இப்பூவுலகில் பற்பல வீரர்கள், உத்தமர்கள், புனிதர்கள், மஹாத்மாக்கள் தோன்றியுள்ளனர்.

அவர்கள் யாவரும் தியாக வாழ்க்கை மேற்கொண்டு வாழ்ந்து காட்டினர். நம் சுகபோகங்களை துறந்தால் தான், மற்றவர்களுக்கு சுகங்களை நாம் வழங்க முடியும். அதற்கான வழியைக் காட்ட முடியும். உண்மையான அன்பு எல்லையில்லா கருணை கொண்ட இதயங்கள் துணிச்சலுடன் செயலாற்றுபவர்கள், எந்தளவிற்கு இன்றைய நாளில் தேவைப் படுகிறதோ, அந்தளவிற்கு வேறு எந்த காலத்திலும் தேவைப்பட்டதில்லை.

# அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**20114) சைவத்தின் தலைவன் யார்?** சிவபெருமான்

**20115) சைவத்தின் தலைவனான சிவபெருமானைப் போற்றி பாடிய பன்னிரெண்டு நூல்களின் தொகுப்பு என்ன?** பன்னிரு திருமுறைகள்

**20116) முறை என்றால் என்ன?**
நல்ல கருத்துக்களைக் கூறி நமது வாழ்வினை நெறிப்படுத்தக் கூடிய நூல் என்பதாகும்.

**20117) திரு என்பதை என்னவென்று சொல்லலாம்?**
'தெய்வீகம் பொருந்திய' எனக் கொள்ளலாம்.

**20118) திருமுறை என்பதற்கு என்ன பொருள்?** தெய்வீக நூல் என்பது பொருள் ஆகும்.

**20119) பெரும்பாலான சிவாலயங்களில் பன்னிரு திருமுறைகள் எங்கு வைத்திருக்கப்படும்?**
ஆடலரசனான நடராஜருக்கு அருகில் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும்.

**20120) இத்திருமுறைகள் மொத்தம் எத்தனை சிவனடியார்களால் பாடப்பெற்றவை?**
இருபத்தியேழு

**20121) இந்நூல்கள் படிப்பதால் உள்ள பலன் என்ன?**
பக்தர்களை அஞ்ஞானம் என்ற இருளிலிருந்து ஞானம் என்ற வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது.

**20122) பக்தர்களை அஞ்ஞானம் என்ற இருளிலிருந்து ஞானம் என்ற வெளிச்சத்திற்கு கொண்டு வருவதால் என்னவென்று அழைக்கப்படுகின்றது?**
தமிழ் வேதங்கள் என்றழைக்கப்படுகின்றன.

**20123) இந்நூல்களின் சிறப்பு என்ன?**
திருமணமானவர்கள், சிவனடியார்கள், யோகிகள், பக்தர்கள், துறவிகள் என எல்லோருக்கும் பொருந்தும் விதத்தில் அமைந்துள்ளது இதன் சிறப்பு அம்சமாகும்.

**20124) கோவில்களில் வாய்மொழியாகப் பாடப்பெற்ற தேவாரப்பாடல்களைக் கேட்டு இப்பாடல்களைத் தொகுக்க எண்ணியவர் யார்?**
பன்னிரு திருமுறைகள் இராசஇராச சோழன் என்னும் சோழப் பேரரசன்

**20125) இத் தேவாரப் பாடல்கள் எங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்தன?**
சிதம்பரம் கோவிலின் அறையில்

**20126) விநாயகரின் அருளுக்குப் பாத்திரமானவர் யார்?** நம்பியாண்டார் நம்பி

**20127) இத் தேவாரப் பாடல்கள் சிதம்பரம் கோவிலின் அறையில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதை யார் மூலம் அறிந்தார்?**
விநாயகரின் அருளுக்குப் பாத்திரமான நம்பியாண்டார் நம்பி மூலம்

**20128) யார் வந்தால் இதன் கதவினைத் திறக்க முடியும் என்று சிதம்பரம் கோவிலில் உள்ளவர்கள் கூறினார்கள்?**
தேவாரம் பாடிய மூவர் வந்தால் மட்டுமே அறையின் கதவினைத் திறக்க முடியும் என சிதம்பரம் கோவிலில் கூறினார்கள்.

**20129) மன்னர் என்ன செய்தார்?**
காலஞ்சென்ற அம்மூவரையும் எவ்வாறு கொண்டு வருவது என மன்னன் சிந்தித்தார்.

**20130) மன்னன் என்ன செய்தார்?**
உடனே தேவார மூவரையும் சிலை வடிவில் அங்கு கொண்டு வந்து அறையினை திறக்கச் செய்தார்.

**20131) அங்கு அவை எப்படி இருந்தன?**
ஓலைசுவடிகள் பல செல்லரித்து இருந்தன.

**20132) மீதம் உள்ளவற்றை என்ன செய்தார்கள்?**
நம்பியாண்டார் நம்பி கிபி பதினோராம் நூற்றாண்டில் பதினோரு திருமுறைகளாகத் தொகுத்தார்.

**20133) பின் அநாபாயச் சோழ மன்னனின் வேண்டுகோளின்படி என்ன நடந்தது?**
சேக்கிழார் 64 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றைத் திருத்தொண்டர் புராணம் என்ற பெயரில் பாடல்களைப் பாடினார்.

**20134) திருதொண்டர் புராணம் நூலானது எத்தனையாவது நூலாக சேர்க்கப்பட்டது?**
12வது திருமுறையாக

**20135) திருதொண்டர் புராணம் 12வது திருமுறையாக எப்போது சேர்க்கப்பட்டது?**
பன்னிரெண்டாம் நூற்றாண்டில் சேர்க்கப்பட்டது.

# மாத்தளை சின்னலெவகந்த ஸ்ரீ கும்பத்து அம்மன் ஆலய கும்பாபிஷேகம்







மாத்தளை நோர்த் மாத்தளை சின்னலெவகந்த ஸ்ரீ கும்பத்து அம்மன் ஆலய புனராவர்த்தன கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. அங்கு கோபுர கலசத்துக்கும் மூர்த்திக்கும் யாகசாலையிலிருந்து எடுத்து வரப்பட்ட கும்பங்களினால் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. குடமுழுக்கு விழாவில் பெருந்தொகையான பக்தர்களும் ஆலய பரிபாலன சபைத் தலைவர் ஏ.நாகலிங்கம், பிரதிஷ்ட பிரதம குரு வைதீஸ்வர வாசுதேவ குருக்கள் உட்பட சிவாச்சாரியர்களும் கலந்து கொண்டனர். *(படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி.வசந்தகுமார்)*

# மாத்தறை, காலி மாவட்டங்களில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்

(வெலிகம தினகரன் நிருபர்)

மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்நோயினால் பெருமளவு பெண்களே பாதிக்கப்படுவதாக அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

காய்ச்சல் அல்லது எலிக்காய்ச்சல் அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறுமாறு மக்கள் வேண்டப்படுகின்றனர். இந்நோய்க்கான பாக்றீரியாக்கள் நீரில் கலந்து பிறகு மனிதனின் கால்களில் உள்ள காயங்கள், கண்கள் மற்றும் வாயினூடாக மனித உடலில் நுழைகின்றது.

எலிக்காய்ச்சலுக்கு மருந்துகள் இருப்பதாகவும் முறையாக சிகிச்சை பெற்று இந்நோயை குணப்படுத்த முடியும் எனவும் மருத்துவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள், மாணிக்கக்கல் அகழ்வு தொழிலாளர்கள் மற்றும் கழிவு நீர் கால்வாய் சுத்திகரிப்பு தொழிலாளர்கள், ஆகியோருக்கே இந்நோய் அதிகம் பரவுவதற்கான சாத்தியம் உள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## பஸ் முச்சக்கரவண்டி விபத்தில்...

இரு இளைஞர்களே விபத்தில் உயிரிழந்துள்ளனர். இரத்தினபுரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சுற்றுலா சென்று கொண்டிருந்த பஸ்ஸும் அனுராதபுரத்திலிருந்து தலாவ நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்து நேர்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் வீதிக்கு எதிர்ப்புறம் வந்த பஸ்ஸுடன் மோதி முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொசன் கொண்டாட்டத்தில் கலந்துவிட்டு இளைஞர்கள் குழு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இவ்விபத்து நேர்ந்தது.

## திருமலை, சிலாபம், பொத்துவில்...

ஹம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 60 முதல் 65 கிலோ மீற்றர் வேகத்தில் வீசலாமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. சிலாபத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில், காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 50 முதல் 55 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும். திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை, புத்தளம் ஊடாக சிலாபம் வரையான மற்றும் ஹம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.இது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு வளிமண்டலவியல் திணைக்களம், கடற்றொழிலாளர் மற்றும் கடற்படை சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## எதிர்வரும் ஜனாதிபதி...

சந்திரகாந்தன் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்களை நேற்று முன்தினம் (22) ஜனாதிபதி சந்தித்துப் பேசினார்.மட்டக்களப்பில் உள்ள கட்சித் தலைமையகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டத்துக்கு ஆதரவு வழங்கினால், மண்ணை நம்பி வாழும் கிழக்கு மக்களுக்கு சொந்தக் காலில் நிற்கும் வாய்ப்புக் கிடைக்குமென்றும் சிவநேசதுரை சந்திரகாந்தன் இங்கு தெரிவித்தார்.

## சிறார்களுக்கு பரவும்...

இந்நோய்கள் மிக இலகுவாகப் பரவும் என்பதால், சிறு குழந்தைகளை முடிந்தவரை பாதுகாப்பது மிகவும் அவசியமென விசேட வைத்தியர் வைத்தியர் சன்ன டி சில்வா மேலும் தெரிவிக்கின்றார்.

# இன்றைய பலன்கள்

(24.06.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
தாய் வழி ஆதரவு உண்டு. பழைய வாகனங்களை கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும்.

**ரிஷபம் :**
உடன் பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பார். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். அலுவலகப் பணிகள் துரிதமாக முடியும்.

**மிதுனம்:**
குடும்ப ஒற்றுமை பலப்படும். கூட்டு முயற்சிகளில் இருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்:**
உத்தியோகத்தில் நீண்ட தூரத்திற்கான மாறுதல்கள் கிடைக்கும். கணவன் மனைவிக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுவது நல்லது.

**சிம்மம்:**
மருத்துவச் செலவுகள் கூடும். வெளிநாடு சென்று பணிபுரிய வேண்டும். என்று விரும்புபவர்கள் அங்கு சென்று வேலை கிடைக்காமல் திரும்ப நேரிடும்.

**கன்னி:**
உத்தியோகத்தில் உயர் பதவி மட்டுமல்ல சம்பள உயர்வும் கிடைப்பதற்கான அறிகுறிகள் உண்டு. கொடுத்த கடன் வசூல் ஆகும்.

**துலாம்:**
செய்தொழிலில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். எதிர்பார்த்த இடங்களில் இருந்து நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும்.

**விருச்சிகம்:**
நல்ல சம்பவங்கள் இல்லம் தேடி வரும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாக செய்து முடிப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

**தனுசு:**
பயணங்கள் பலன் தருவதாக அமையும் தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து மகிழ்விக்கும் உத்தியோகத்தை பொறுத்தவரை மேல் அதிகாரிகள் உங்களுக்கு நுணுக்கங்களை கற்றுக் கொடுப்பர்.

**மகரம்:**
கல்யாண கனவுகள் நனவாகும். கடமையில் இருந்த தொய்வு அகலும். உத்தியோக முயற்சி கைகூடும். பூர்விக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் அகலும்.

**கும்பம்:**
நம்பிக்கைக்கு உரியவர்கள் நல்லது நடக்க வழி காட்டுவர். மாமன் மைத்துனர் வழியில் மங்கல நிகழ்சிகள் நடைபெறும் வாய்ப்பு உண்டு.

**மீனம்:**
கட்டிய வீட்டை பழுது பார்ப்பது பற்றி சிந்திப்பீர்கள். கல்யாணத்தை முன்னிட்டு சீர்வரிசை பொருட்கள் வாங்கி மகிழவும் உகந்த நேரம் இது.

## சிறு, நடுத்தர...

நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்றைய தினம் இடம் பெற்ற சர்வதேச கைத்தொழில் கண்காட்சியுடனான மாநாட்டில், உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

200 ஊழியர்களுக்கு குறைவாக தொழில் புரியும் உற்பத்திக் கைத்தொழில்துறை மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கும் முதலாவது கடன் திட்டத்தில் ஆகக் குறைந்தது 150 இலட்சம் ரூபாவை கடனாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக 7வீத வட்டி அறவிடப்படவுள்ளது.

அத்துடன் பத்து வருடங்களில் கடனை மீள அறவிட எதிர்பார்க்கப்படுவதுடன் அதனை வழங்க ஆரம்பிப்பதற்காக ஒரு வருட கால அவகாசமும் வழங்கப்படவுள்ளது. இந்த கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரச மற்றும் தனியார் பிரிவில் 16 வங்கிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வங்கிக்கும் 750 மில்லியன் ரூபா பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதை வேளை,தற்போது இலங்கை கடன் தகவல்கள் பணியகத்தில் தடை செய்யப்பட்ட பட்டியலில் பெயர்களைக் கொண்டுள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கும் குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபா கடனைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இந்த கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான வட்டி 8 வீதமாகும். அந்தக் கடனை மீள செலுத்துவதற்காக 05 வருடங்கள் வழங்கப்படுவதுடன் கடனை மீள செலுத்துவதை ஆரம்பிக்க மூன்று வருட கால அவகாசமும் வழங்கப்படவுள்ளது.

இதற்கு மேலதிகமாக கைத்தொழில் அமைச்சின் நேரடி நிதியத்தின் கீழ் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி வழங்குவதற்கான திட்டம் smile மற்றும் e pend ஆகிய இரண்டு முறைமையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழலை பாதுகாத்து ஆரம்பிக்கப்படும் இந்தத் திட்டங்களுக்கு 30 மில்லியன் ரூபா இதன் மூலம் வழங்கப்படுகிறது. அதற்காக 6.5வீத வட்டி அறுவிடப்படுவதுடன் கடனை மீள செலுத்தும் காலம் 10 ஆண்டுகளாகும். அத்துடன் சிறு வர்த்தக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 10 இலட்சம் ரூபா நிதியை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை மீள செலுத்தும் காலம் 10 வருடங்களாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த கடனை பெற்றுக் கொள்வதற்கு கைத்தொழில் அமைச்சின் பரிந்துரையை பெற்றுக் கொள்வது அவசியமானால், வார நாட்களில் ஐந்து தினங்களும் அதனை பெற்றுக் கொடுப்பதற்கு தயாராக உள்ளதாக அமைச்சின் செயலாளர் சாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச, ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய உட்பட பலரும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டனில் LTTE...

பிரிட்டனில், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்படக்கூடாதென, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வாதத்தை முன்வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

எனினும், இலங்கையின் சுதந்திர தமிழ் அரசை நிறுவுவதற்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஆதரவளிப்பதாக இலங்கை அரசாங்கம் நம்புவதை, ஆணைக்குழு கவனத்தில் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் 2001 மார்ச் 29 இல், பிரிட்டனின் தடைசெய்யப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீக்குவதற்கு இதற்கு முன்னரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2018 டிசம்பர் 07ஆம் திகதியன்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தடையை நீக்குமாறு,பிரிட்டன் அரசாங்கத்திடம் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் கூட்டு பயங்கரவாத பகுப்பாய்வு மையம், உள்நாட்டு மற்றும் சர்வதேச பயங்கரவாத அச்சுறுத்தல்களின் பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டுக்கான பிரிட்டன் மையம் ஆகியவற்றின் மதிப்பாய்வு செயல்முறையைத் தொடர்ந்து, இராஜாங்க செயலர் 2019 மார்ச் 08 ஆம் திகதியன்று விண்ணப்பத்தை நிராகரித்து விட்டார்.

இருந்தபோதும் 2020 அக்டோபர் 21ஆம் திகதியன்று மேன்முறையீட்டு ஆணையம் மேன்முறையீட்டாளர்களின் மேன்முறையீட்டை அனுமதித்தது.

இது தொடர்பான தீர்ப்பு 2021 மே 13ஆம் திகதி வழங்கப்பட்டது. அதில், 2012 ஜூன்; 03ஆம் திகதிக்குள் தடை நீக்கம் செய்வதற்கான விண்ணப்பத்தில் கூடுதல் பிரதிநிதித்துவங்களை வழங்க வேண்டும், மேலும் அரச செயலர் தனது விண்ணப்பத்தின் மீதான தடையை நீக்குவதற்கான முடிவை எடுக்க வேண்டும் என்று ஆணையகம் குறிப்பிட்டிருந்தது. எனினும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை தொடர்வதற்கு இராஜாங்க செயலாளர் புதிய முடிவை எடுத்து, அது 2021 ஆகஸ்ட் 31ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. இந்தநிலையில் 2021 அக்டோபர் 12ஆம் திகதியன்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், அந்த முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்தது. அத்துடன் மற்றொரு குழுவும் தடை நீக்கம் செய்வதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்தது. எனினும் அந்த விண்ணப்பங்களும் இராஜாங்க செயலாளரால் நிராகரிக்கப்பட்டன. இந்தநிலையிலேயே தற்போது மேன்முறையீட்டு ஆணைக்குழு இந்த மேன்முறையீட்டை நிராகரித்ததுடன், பிரிட்டனில் விடுதலைப் புலிகள் மீதான தடையை தொடர உத்தரவிட்டுள்ளது. மேன்முறையீடு செய்தவர்கள் சார்பில் பீட்டர் ஹெய்ன்ஸ் மற்றும் பொது சட்ட நலன் மையத்தால் அறிவுறுத்தல் அமைப்பின் சாந்தி சிவகுமாரன் ஆகியோர் ஆணையகத்தில் முன்னிலையாகினர். இராஜாங்க செயலாளர் சார்பில் பென் வட்சன் கே.சி., அண்ட்ரூ டீக்கின் மற்றும் வில் ஹேஸ் ஆகியோர் ஆஜராகினர்.

## காஸா சிறுவர் நிதியத்துக்கு...

பள்ளிவாசலில் நேற்று (23) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட பிரார்த்தனையில் கலந்து கொண்ட பின்ன,ர் ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மௌலவி ஹாரித்தினால் தொழுகை நிகழ்த்தப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்திற்கு (Children of Gaza Fund) காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாசல், 10,769,417 ரூபாவை நன்கொடையாக வழங்கியது. பிரார்த்தனையின் பின்னர், காஸா நிதியத்துக்கான காசோலை பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"நான் மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருக்கும் வேளையில், இந்த நிகழ்வுக்கு என்னை அழைத்தமைக்கு நன்றி. இந்த பள்ளிவாசல் இஸ்லாமிய கலைக்கு சிறந்த உதாரணமாகக் விளங்குகிறது.

காத்தான்குடி முஸ்லிம்கள் அரசர் காலத்திலிருந்து அங்கு வாழ்ந்து வந்த ஒரு பிரிவினர். மட்டக்களப்பின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இங்கு வந்தேன். இந்த மாகாணத்தில் விவசாயத்தை நவீனமயமாக்குவதுடன் சுற்றுலாவை மேம்படுத்த எதிர்பார்க்கிறோம். அதேபோல், கல்வியையும் மேம்படுத்த வேண்டும்.

காஸா நிதியத்துக்கு உங்கள் ஆதரவை வழங்குவதற்காக இன்று எனக்கு இங்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. காஸா விவகாரத்தில் அரசாங்கம் வலுவான நிலைப்பாட்டை கொண்டுள்ளது. அது என்றும் மாறாது. ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் பிரச்சினைகள் இருக்கலாம். அதற்காக, காஸா மக்களை பழிவாங்க முடியாது.

பாலஸ்தீனம் தீர்வை எட்ட உதவ வேண்டும். ஐந்து வருடங்களுக்குள் பலஸ்தீன அரசை நிறுவ வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

காலக்கெடு இல்லாமல் பேசுவதில் அர்த்தமில்லை. ஏனென்றால், 40, 50 வருடங்களாக இது குறித்து பேசப்பட்டது. எனவே, காலக்கெடுவின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இஸ்ரேலுக்கு பாதுகாப்பு பிரச்சினை இருந்தால் அது குறித்துத் தனியாக விவாதிக்கலாம். ஆனால் பாலஸ்தீன அரசு உருவாக்கப்பட வேண்டும்.

## ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு...

இலங்கைக்கு (Sri Lanka) மற்றும் இலங்கைக்கு வெளியே ஆட்களை கடத்துபவர்களுக்கு கடுமையான தண்டனைகளை இந்த சட்டம் பரிந்துரைக்கிறது.

இஸ்ரேல் இராணுவம் செய்த மனிதாபிமானமற்ற செயல் அல்லது பொருள் ஆதாயத்துக்காக, இலங்கையர் அல்லாதவர்களை இலங்கைக்கு கடத்துபவர்கள், சட்ட விரோதமாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட எந்தவொருவரையும் தெரிந்தே அடைக்கலம் கொடுத்தல், மறைத்தல் மற்றும் வேலைக்கு அமர்த்துபவர்களுக்கும் இந்த தண்டனை பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கடத்தப்படுவோரை தவறாக பயன்படுத்துபவர்களுக்கும் ஐந்து முதல் இருபது ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 1.5 மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்படலாம். எவ்வாறாயினும், குழந்தைகள் தொடர்பான குற்றம் இழைக்கப்பட்டிருந்தால், குற்றவாளிகளுக்கு எட்டு முதல் இருபது ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனையும், இரண்டு மில்லியன் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரலாற்றில் முதற் தடவையாக...

ரயில்வே திணைக்களத்தின் இசைப்பிரிவினால் நடத்தப்படும் விசேட ரயில் சேவையில் இந்த பக்திப்பாடல் இசைக்கும் நிகழ்வு

இடம்பெற்றது. அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் ஹோமாகம ரயில் நிலையத்தில் இந்நிகழ்வு ஆரம்பமானது. இரத்மலானை ரயில் பிரதான இயந்திர உப திணைக்களத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பொறியியலாளர்கள் இந்த விசேட ரயில் பெட்டியை வடிவமைத்திருந்தனர்.

## ஆங்கில ஆசிரியர்...

எண்ணிக்கைகள் 11,048 ஆக அதிகரிக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேசிய பாடசாலைகளுக்கு 2,500 ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார்.

## பறவைக் காய்ச்சல்...

ஆபத்து இல்லை என்பதை நாம் சொல்ல வேண்டும். உலக சுகாதார நிறுவனம் எங்களுக்கு எந்த சிறப்பு எச்சரிக்கையையும் வழங்கவில்லை. பறவைக் காய்ச்சல் நிலைமை உலகின் பல்வேறு நாடுகளில் இதற்கு முன்பு பதிவாகிய போதும், அது தீவிரமாக பரவவில்லை.

எனவே, இவ்விடயடம் தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம்" என்றார்.

## நீதி அமைச்சர் விஜேதாசவின்...

விஜேயதாச ராஜபக்சவுக்கு எதிரான பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது. அவரது உறுப்புரிமையை நீக்குவது தொடர்பான தீர்மானம் இதில்,நிறைவேற்றப்படுமென்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினராக இருந்து கொண்டே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டதால்,பொதுஜன பெரமுன கட்சியின் யாப்பை அவர் மீறியுள்ளதாக கட்சி தெரிவித்துள்ளது.

பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து அவருடைய உறுப்புரிமை நீக்கப்படுமானால், அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் கேள்விக்குறியாகும் என்றும் அக் கட்சியின் முக்கியஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

## வங்குரோத்திலிருந்து விரைவில்...

தெரிவித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதி பொறுப்பை பாரமெடுத்ததாலேயே நாடு நெருக்கடி நிலையிலிருந்து விரைவாக மீண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலகில் வங்குரோத்து நிலைக்குச் சென்றுள்ள நாடொன்று இந்தளவு குறுகிய காலத்தில் மீண்டுள்ள பெருமை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவையே சாரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான சவாலை வேறு எந்த தலைவர்களும் பாரமெடுக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை இந்தளவு குறுகிய காலத்தில் வேறு எவராலும் மீட்டிருக்க முடிந்திருக்காது என்றும் குறிப்பிட்டுள்ளார். நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## SLBC சிரேஷ்ட ... (3 ஆம் பக்கம் பார்க்க)

நியமிக்கப்பட்டார். கலைஞராக, அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக முஸ்லிம் சேவைக்கு மகத்தான பங்களிப்பை இவர் வழங்கிவந்தார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் நீண்ட காலம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்த இவர்,அரச தேசிய நிகழ்ச்சிகள் பலவற்றை தொகுத்து வழங்கியிருக்கிறார். 1968ம் ஆண்டு பிறந்த இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று இரவு எட்டு மணியளவில் மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## பாதாள உலக ... (3 ஆம் பக்கம் பார்க்க)

இவரிடமிருந்து அமெரிக்க தயாரிப்பான கைத்துப்பாக்கியொன்றும் 10 தோட்டாக்கள் , 2,200 மில்லிகிராம் ஹெரோயின், கையடக்கத் தொலைபேசி ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

## நீர்வழங்கல்,வடிகால ..... (3 ஆம் பக்கம் பார்க்க)

இதேவேளை மொத்த இலாபத்தை 12.3 பில்லியன் ரூபாவிலிருந்து 29. பில்லியன் ரூபாவாக அதிகரிக்க உதவியுள்ளது.

நிதிச் செலவுகள் 3.9 பில்லியன் ரூபாவிலிருந்து 14.9 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளன.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வருடாந்த நிகர இலாபம் 5.2 பில்லியன் ரூபா. அதற்கு முன்னைய ஆண்டு 2.7 பில்லியன் ரூபா நஷ்டத்தை சபை எதிர்நோக்கியிருந்தது.

இதேவேளை வரி செலுத்துவோரின் பணத்திலிருந்து 28 பில்லியன் ரூபாவை கடனை செலுத்துவதற்காக திறைசேரி வழங்கிதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்சியின் ..... (3 ஆம் பக்கம் பார்க்க)

மேற்கொள்ளப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவுடன் சென்று தேர்தலில் வெற்றி பெற முடியாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனா உள்ளவர்களில் ஒரு தரப்பினர் தெரிவித்து வருவதாக குறிப்பிட்டுள்ள நாமல் ராஜபக்ச எம்பி,அவ்வாறு தெரிவிப்பவர்கள் பொது ஜன பெரமுன கட்சியை கைவிட்டு வேறு வழியில் செல்ல முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## G.C.E.O/L பெறுபேறுகள் ....(3 ஆம் பக்கம் பார்க்க)

காலத்திற்குள் வெளியிட முடிந்துள்ளமை, கல்வித்துறையின் வெற்றிகரமான மைல்கல்லாகவே பார்க்க முடியும்.சாதாரண தர பரீட்சை மே மாதம் 06 இல், ஆரம்பமாகி மே 15 இல், முடிவடைந்தது.

3,527 மத்திய நிலையங்களிலும் , 535 ஒருங்கிணைப்பு நிலையங்களிலும் பரீட்சை நடைபெற்றது. இந்த ஆண்டு நடைபெற்ற சாதாரண தர பரீட்சைக்கு 4,52,979 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். இவர்களுள் 3,87,648 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 65,331 தனியார் விண்ணப்பதாரர்களும் பரீட்சைக்கு தோற்றியிருந்தமை குறிப்பிட்டத்தக்கது .

## 2024 இல் ... (3 ஆம் பக்கம் பார்க்க)

பெப்ரவரி மாதத்தில் 2,18,350 சுற்றுலா பயணிகளும் மார்ச்சில் 2,09,181 ஏப்ரலில் 1,48,867 மே, மாதத்தில் 1,12,128 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

ரஷ்யா, இந்தியா, ஜெர்மன், பிரிட்டன், சீனா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்தே பெருமளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாகவும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதேவேளை, கடந்த வருடத்தில் நாட்டுக்கு 14 இலட்சத்து 97 ஆயிரத்து 300 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்ததாகவும் அந்த அதிகார சபை மேலும் தெரிவித்தது.

### மஹரகம அபெக்ஷ வைத்தியசாலையின்

# சிறுவர் மருத்துவ பிரிவுக்கு தேசிய பாதுகாப்பு சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க விஜயம்






தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் விமானப்படை தளபதியும் மஹரகம அபெக்ஷ வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் நான்கு மாடி கட்டிடத் தொகுதியினை பார்வையிட்டனர்.

ருஹுணு மஹா கதிர்காம தேவாலயத்தின் பிரதான அனுசரணையுடனும், இலங்கை விமானப்படையின் முழுப் பங்களிப்புடனும் மஹரகம அபெக்ஷ வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்படும் சிறுவர் மருத்துவ பிரிவின் நான்கு மாடிக் கட்டட நிர்மாணப் பணிகளை பார்வையிடுவதற்காக ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ ஆகியோர் கடந்த 20ம் திகதி விஜயம் மேற்கொண்டனர். மஹரகம அபெக்ஷ வைத்தியசாலையில் சிறுவர் மருத்துவ பிரிவிற்கான இடப் பற்றாக்குறை காரணமாக சிறுவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாவதால் ருஹுணு மகா கதிர்காம ஆலய பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகரவினால் இந்த புதிய நான்கு மாடி கட்டடம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு கடந்த 2023 செப்டம்பர் 21 அன்று அடிக்கல் நடப்பட்டது. ஆரம்பத்தில் 03 மாடிக் கட்டடமாக நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த நிலையில் விமானப்படையின் கடின உழைப்பின் காரணமாக 04 மாடி கட்டடமாக அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, தற்போது நோய்வாய்ப்பட்ட சிறார்களின் மன ஆரோக்கியத்திற்காக விமானப் படையினால் சிறுவர் பூங்கா ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## நகர்வலம்





மலையகம் இங்கிருந்து எங்கே? நூல் நேற்று 23ஆம் திகதி வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் வெளியிடப்பட்டது. பேராசிரியர் தை. தனராஜ் தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ், பதிப்பாளரும் சமூக சேவையாளருமான எச்.எச்.விக்கிரமசிங்க, இலண்டன் கலை இலக்கிய செயற்பாட்டாளர் வ.பௌசர் ஆகியோரிடமிருந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் நூலின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். நிகழ்வுக்கு முன்னிலை வகித்த தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி எஸ். முரளிதரன் ஆகியோர் உடனிருக்கின்றனர்.

# ரணில் பொறுப்பேற்றிருக்காவிடின் இலங்கைக்கு உலக உதவி கிடைத்திருக்காது

**கலாநிதி. ந.குமரகுருபரன்**



மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முன்வரத் தவறியவர்கள், இப்போது மக்களின் வாழ்வாதாரத்தையும் நாட்டையும் காப்பாற்ற தேசபக்தர்கள் போன்று வேடமிட்டு தேசப்பற்றுள்ள திறமையான தலைமைக்கு எதிராக போராடுவது கேலிக்குரியது.

மக்களைக் காப்பாற்ற பொருளாதார நெருக்கடி மேலாண்மைக்கான சர்வதேச உதவியை திசை திருப்ப முடியாது என முன்னாள் மகாணசபை உறுப்பினர் கலாநிதி. ந.குமர குருபரன் கொழும்பு வர்த்தக மாணவர் சங்கத்தின் (CCSU) மாதாந்த கருத்தரங்கில் தெரிவித்தார்.

வாழ்வாதாரம் என்பது மாஸ்லோவின் தேவைகளின் படிநிலையில் அடிப்படையானதாகும். மக்களின் வாழ்வாதாரம் என்பது அவர்களின் "வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை" குறிக்கிறது. வாழ்வாதாரம் என்பது ஒருவரின் வாழ்நாள் முழுவதும் அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான செயல்களின் தொகுப்பாக வரையறுக்கப்படுகிறது. தண்ணீர், உணவு, தீவனம், மருந்து, தங்குமிடம், உடை போன்றவற்றைப் பாதுகாப்பது போன்ற செயல்கள் இதில் அடங்கும். அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்த போது நாட்டை மீட்ட ஒரே தனி மனிதர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. வாக்குரிமையைப் பயன்படுத்துவது போன்று ஜனநாயக உரிமைகளை அனுபவிக்க மக்கள் வாழ வேண்டும். வாழ வைத்தவர் யார்? ஜனாதிபதியாக பதவியேற்க அழைக்கப்பட்ட போது இந்த தலைவர்கள் எங்கே இருந்தார்கள்? மக்களின் வாழ்வாதாரத்தின் காலத்தின் தேவையை எடுத்துரைக்கும் ஒரு முக்கியமான பரிமாணத்தில் தமக்கு எந்தத் திறனும் இல்லை என்று அவர்களே உறுதியாக நம்பினர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்திருக்காவிட்டால் இந்த தோல்வியுற்ற தேசத்திற்கு உலக நாடுகள் உதவ முன்வந்திருக்கப் போவதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை, நாட்டை தோல்வியுற்ற நாடாக மாற்றியிருந்தால், அத்தகைய தலைமையை தேர்ந்தெடுப்பதற்கு, அந்தத் தலைமையை தேர்ந்தெடுத்த மக்களும் நேரடியாக பொறுப்புக் கூறவேண்டும் என்பதும் மறக்க மறுக்க முடியாத கருத்தாகும், என்று தெரிவித்தார் கலாநிதி நல்லையா குமரகுருபரன்.

# தனிநபர் பிரேரணை சமர்ப்பித்தலில் அநீதி; சபையில் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தனிநபர் பிரேரணையாக முன்வைக்கப்படும் சட்டமூலங்கள் தொடர்பில் தெளிவான நடைமுறை காணப்பட்ட போதிலும் நடவடிக்கைகள், உரிய முறையில் மேற்கொள்ளப் படாமையால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை முன்வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் வழங்கிய தனிநபர் பிரேரணைக்கு பதிலாக மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் சமர்ப்பித்த பிரேரணை குறித்து கவனம் செலுத்தியுள்ளதன் மூலம் எனக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது.

மூன்று மொழிகளிலுமான எனது பிரேரணையை சட்டமூல அலுவலகத்தில் சமர்ப்பித்தேன். அதன் மூலம் நான் எனது கடமையை சரியாக நிறைவேற்றியுள்ளேன். பாராளுமன்றத்தின் நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் அறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்றாவது விடயம், நான் சமர்ப்பித்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இளைஞர் பிரதிநிதித்துவத்தை கட்டாயமாக்கும் தனி நபர் சட்டமூலமாகும். எனினும் அது தொடர்பில் எனது சிறப்புரிமை பாரியளவில் மீறப்பட்டுள்ளது. அது தொடர்பில் குழு நிலை அவதானிப்பின் போது தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது

தனிநபர் பிரேரணையாக முன்வைக்கப்படும் சட்டமூலங்கள் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய தெளிவான நடைமுறைகள் இருந்தும், அந்த நடவடிக்கைகளை வேண்டுமென்றே முன்னெடுக்கத் தவறியதன் மூலம் இந்த அநீதி ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், ஒன்பதாவது பக்கத்தின் கடைசிப் பந்தியிலும் பக்கம் 10இல் முதல் இரண்டு பந்திகளிலும் கவனம் செலுத்தப்படும்போதும் அநீதி இடம்பெற்றுள்ளதை புரிந்துகொள்ள முடியும்.

பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி நாட்டின் பொறுப்புள்ள மக்களும் அவதானித்து வருகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் மட்டுமன்றி, பாராளுமன்றத்தின் சார்பாகவோ அல்லது சபாநாயகர் சார்பாகவோ பல்வேறு பணிகளைச் செய்யும் அதிகாரிகளும் நீதிக் கோட்பாட்டின்படி அந்த செயற்பாடுகளை வெளிப்படைத்தன்மையுடனும் தூய்மையுடனும் மேற்கொள்ள வேண்டும். அவர்கள் எந்தவொரு அதிகாரத்திற்கும், செல்வாக்கிற்கும் அடிபணியாமல் பாராளுமன்றத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர்மேலும் தெரிவித்தார்.


## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 160,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 யூன் 26ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124I273 | LKA18224L274 | LKA36425F277 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 40,000 | 80,000 | 40,000 | 160,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 யூன் 26
தீர்ப்பனவுத் திகதி : 2024 யூன் 28
வழங்கப்படும் திகதி : 2024 யூன் 28
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 யூன் 26 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**


# சனீஸ்வர பகவானுக்கு குடமுழுக்கு





கேரளா கோவளம் ஸ்ரீபவுர்ணமிகாவு தேவி ஆலயத்தில் அண்மையில் யாகங்கள், அபிஷேகம், புஷ்ப அலங்கரம், ஆராதனை மற்றும் சமய சொற்பொழிவுகள் என்பன மிகவும் சிறப்பாக நடைபெற்றன, 25 அடி உயர சனிஷ்வர பகவான் ஆலயத்தில் குடமுழுக்கு நடைபெற்றது, நிகழ்வில் 1,00,000 பேர் கலந்து கொண்டனர் சிறப்பான அன்னதானமும் வழங்கப்பட்டது. விழாவில் ஆலய மடாதிபதி ஸ்ரீ சின்கா காயத்திரி பக்தர்களுக்கு ஆசிவழங்கினார், தமிழக சிவசேனா மாநில செயல் தலைவர் க.சசிகுமார், தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சரவணபாரதி, ஆகியோர் இதில் பங்கேற்றனர். விழாவிற்கான ஏற்பாடுகளை அறங்காவலர் எம். எஸ் புவனசந்திரன் மேற்கொண்டார்.


## அறிவித்தல்

**அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை**

அகில இலங்கை பேரவையின் 74வது பொதுக்கூட்டம் எதிர்வரும் 2024 ஜுன் மாதம் 29ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2.00 மணிக்கு இல.100, பதனம மாவத்தை, சுதந்திர சதுக்கம், கொழும்பு-07 இல் அமைந்துள்ள இலங்கை மன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

**ஆஷிப் ஷுக்ரி**
**தேசிய பொதுச்செயலாளர்**







சர்வதேச யோகா தினம், இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை பலாங்கொடை நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது இந்தியாவில் இருந்து வருகைதந்த கீதா அமிர்தானந்த சுவாமிஜியினால் பலாங்கொடை சீ.சீ.தமிழ் மகாவித்தியாலயம், கனகநாயகம் தமிழ்த் தேசியக் கல்லூரி, இந்துக் கல்லூரி, மெத்தகந்தை தமிழ் வித்தியாலயம், இராசகல தமிழ் வித்தியாலயம், பெட்டிகல தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து கலந்துகொண்ட 1000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு யோகாசனம் பயிற்றுவிக்கப்பட்டது.

### தேசிய லொத்தர் சபை National Lotteries Board — சனி 2024.06.22 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5512 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.33,974,456.00
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 3 3 0 3 8 9

**அத சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 087 — ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 0 3 8 9

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3754 — சீட்டிழுப்பு திகதி 2024.06.22 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.62,372,024.76
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 22 25 27 55 — விசேட எழுத்து Y — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 10432

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1860 — 2024.06.22 — 47603 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.436,493,786.00
ஆங்கில எழுத்து H — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 09 13 30 55
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**VIP** — திகதி 2024.06.22 — சீட்டிழுப்பு இலக்கம் 0338 — ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 7 7 7 6 6 6 — L7 எழுத்து V
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 31,626,202.48

**ராசி சுப பலன்** — திகதி 2024.06.22 — சீட்டிழுப்பு இலக்கம் 821 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,400,338.76
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 02 07 20 36 — தனயோக இலக்கம் 70921 — நாளுக்கான விதி எண் 15

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1542 — 2024.06.22 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,712,622.96
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 04 10 28 73 — விசேட எழுத்து L — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 23117

### தேசிய லொத்தர் சபை National Lotteries Board — வெள்ளி 2024.06.21 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5511 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.33,922,576.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 3 1 3 4 9 7

**அத சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 086 — ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 3 4 9 7

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3753 — சீட்டிழுப்பு திகதி 2024.06.21 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.62,212,174.36
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 25 53 63 68 — விசேட எழுத்து H — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 68434

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1859 — 2024.06.21 — 23112 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.436,378,134.00
ஆங்கில எழுத்து F — சுப்பர் இலக்கம் 22 — வெற்றி இலக்கங்கள் 17 24 33 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**VIP** — திகதி 2024.06.21 — சீட்டிழுப்பு இலக்கம் 0337 — ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 8 1 1 6 5 5 — L7 எழுத்து D
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 31,626,202.48

**ராசி சுப பலன்** — திகதி 2024.06.21 — சீட்டிழுப்பு இலக்கம் 820 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,400,338.76
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 09 12 44 62 — தனயோக இலக்கம் 53227 — நாளுக்கான விதி எண் 09

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1541 — 2024.06.21 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,503,089.36
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 08 14 25 54 — விசேட எழுத்து P — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 56597

# மட்டக்களப்பு மாவட்டத்தில் உறுமய திட்டத்தில் 27,595 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள்





## 252 ஆங்கில டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்; மட்டக்களப்பு புதிய மாவட்ட செயலகமும் ஜனாதிபதியினால் திறந்துவைப்பு

நாட்டு மக்களுக்கு உரிமைகளை வழங்குவதே தனது பிரதான நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அத்துடன் திருகோணமலையை பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசாங்கம் முன்னெடுத்து வரும் 'உறுமய தேசிய வேலைத்திட்டத்தின்' கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 27,595 குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு, திராய்மடு மாவட்ட செயலக வளாகத்தில் ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் (22) நடைபெற்றது.

இதற்கு முன்னதாக மட்டக்களப்பு திராய்மடு பிரதேசத்தில் 1,055 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாவட்ட செயலகத்திற்கான புதிய கட்டடத்தை ஜனாதிபதி திறந்துவைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது, 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி அப்போதைய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன இந்த புதிய மாவட்ட செயலகத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து மாவட்ட செயலகத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, அங்கு கண்காணிப்பு விஜயத்தையும் மேற்கொண்டார். இதன்பின்னர் மட்டக்களப்பு மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி உரிமையற்ற 27,595 குடும்பங்களுக்கு உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. அதில் இதுவரை 2610 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுதவிர உயர்தர தேசிய பொறியியல் டிப்ளோமா நிறுவனத்தில் ஆங்கில டிப்ளோமா பெற்ற 252 பேருக்கும் ஜனாதிபதி தலைமையில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,



''திருகோணமலையை பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளோம். அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்த போது அதற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவது குறித்து விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது. விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இந்தப் பகுதிகளில் பாரியளவிலான விவசாய செயற்பாடுகளைத் தொடங்க திட்டமிட்டுள்ளோம். மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் அபிவிருத்தி செய்யப்படாத மகாவலி காணிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆகிய இரண்டும் இங்கு அமைந்துள்ளன. இப்பிரதேசத்தில் கல்வியை மேலும் மேம்படுத்த திட்டமிட்டுள்ளோம். தொழிற்கல்வித்துறையின் சீர்திருத்தத்தின் மூலம் அதிகளவான இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வாய்ப்புகளை வழங்க முடியும்.

இந்த காணி உறுதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் மாவட்ட செயலகத்திற்கோ பிரதேச செயலகத்திற்கோ செல்லத் தேவையில்லை. மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், காணி உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர் ஆகியோர் கிராமத்திற்குச் சென்று காணி உறுதிகளை மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வார்கள். எதிர்வரும் திங்கட்கிழமை அந்த வேலைத்திட்டத்தை தொடங்கி விரைவில் நிறைவு செய்ய அறிவுறுத்தியுள்ளேன்" என்று தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உரையாற்றுகையில், "இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்பதில் பெருமைகொள்கிறோம். இந்தத் திட்டம் அவரால் தொடங்கப்பட்ட திட்டம் என்பதைக் கூற வேண்டும். அன்று, இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்த ரணில் விக்ரமசிங்க அவர்களே இன்று ஜனாதிபதியாக இந்தக் கட்டிடத்தைத் திறந்து வைத்துள்ளார். நாட்டின் உற்பத்தியை அதிகரிக்க விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு ஜனாதிபதி எப்பொழுதும் எமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த விவசாய திணைக்களத்துடன் இணைந்து செயற்படுகின்றோம்.

ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் இத்திட்டங்கள் அனைத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு நாம் மிகவும் ஊக்கத்துடன் செயற்பட்டு வருகின்றோம்" என்று தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் ஏ. எல். எம். அதாவுல்லா

உரையாற்றுகையில், "மட்டக்களப்பு மக்களுக்கான புதிய மாவட்ட செயலக கட்டிடத் திறப்பு விழா, காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு, ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு என்பவற்றில் கலந்து கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வருகை தந்தமை, வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும். போரினால் நாம் இழந்தது ஏராளம். இனி இது போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழக்கூடிய சூழலை உருவாக்குவது நமது பொறுப்பு" என்று தெரிவித்தார்.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உரையாற்றுகையில், "நாடு மிக மோசமான பொருளாதார சிக்கலில் இருந்தபோது நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி பல கொள்கைகளை அமுல்படுத்தியுள்ளார். இந்தக் கொள்கைகள் நீடித்து நிலைக்க வேண்டுமாயின், மக்களும் உறுதியான மனநிலையுடன் இருக்க வேண்டும். இதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளோம். தூரநோக்குடன் செயல்பட்டு, பொருளாதாரத்தில் நீடித்து நிலைக்க நாம் பணியாற்றி வருகிறோம். இந்த நிலைமையை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. இங்கு நீர்ப்பாசனத் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கான பணிப்புரைகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். இதனால் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற வேண்டியது மிக முக்கியமான விடயமாகும்" என்று தெரிவித்தார்.

வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் பேசுகையில், "எமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்த நேரத்தில், முன்னாள் ஜனாதிபதி பலருக்கும் அழைப்பு விடுத்தார். யாரும் இந்நாட்டைப் பொறுப்பேற்ற முன்வரவில்லை. அந்நேரத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க துணிச்சலாக முன்வந்து, வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை பொருளாதார ரீதியில் மீளக்கட்டியெழுப்ப நாட்டைப் பொறுப்பேற்றார். இருட்டைத் திட்டுவதற்கு பலர் இருந்தாலும் இருட்டை நீக்கி வெளிச்சத்தைக் கொண்டுவர ஒருவர் தேவை. அந்த ஒருவராக ஜனாதிபதி இந்த நாட்டைப் பொறுப்பேற்றார். அவரின் தலைமைத்துவத்தடன் முன்னெடுக்கப்பட்ட கூட்டு முயற்சியால் படிப்படியாக பொருளாதாரம் எழுச்சி கண்டு வருவது மிகவும் பாராட்டுக்குரியது" என்றார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பிரதேச அரசியல் பிரதிநிதிகள், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஜே. முரளிதரன், கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் எச். இ. எம். டபிள்யூ. ஜி. திஸாநாயக்க மற்றும் அரச அதிகாரிகள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு...

# கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது கட்சி ஆதரவளிக்கவுள்ளதாக TMVP கட்சியின் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் TMVP கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட அக்கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் (22) மட்டக்களப்பில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டத்திற்கு ஆதரவு வழங்கினால் மண்ணை நம்பி வாழும் கிழக்கு மக்களுக்கு சொந்தக் காலில் நிற்கும் வாய்ப்புக் கிடைக்கும் என சிவநேசதுரை சந்திரகாந்தன் அங்கு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "நாட்டில் வலுவான பொருளாதாரத்தை உருவாக்கும் அதேவேளையில், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண நாம் பாடுபட வேண்டும். மேலும், இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். கிழக்கு மாகாணம் வளர்ச்சி குறைந்த மாகாணமாகும். இந்த மாகாணத்தை அபிவிருத்தி குறைந்த மாகாணமாக கைவிட்டுவிட முடியாது.

மேலும், இந்தப் பகுதியில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த முடியும். ஹிகுரக்கொட விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படுவதன் மூலம் திருகோணமலை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, தம்புள்ளை, அனுராதபுரம் ஆகிய பிரதேச மக்களும் நன்மையடைவார்கள். மட்டக்களப்பு விமான நிலையமும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இந்த சவாலை நாம் ஏற்க வேண்டும். இனப்பிரச்சினையை இனியும் இழுத்தடிக்க வேண்டிய அவசியமில்லை, அதனை விரைவாக தீர்க்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்" என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## முற்போக்குத் தமிழர் கழகத்தின் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான எஸ். வியாழேந்திரனின் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பிலும் ஜனாதிபதி பங்கேற்பு







## TMVP தலைவர் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தல்

TMVP கட்சியின் தலைவர் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கருத்துத் தெரிவிக்கையில், "இன்று ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்கதொரு நாளாகும். கிழக்கு மாகாணத்தின் தமிழ் மக்களின் தலைவிதியிலும் எதிர்கால அபிவிருத்தியிலும் ஒரு புள்ளியாக அமையும் என்பதில் ஐயமில்லை. கிழக்கு மாகாணம் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த மாகாணத்தில் இருக்கின்ற பொருளாதார வளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றால் நிச்சயமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைய வேண்டும். ஏனென்றால் இங்கு உள்ள வளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற கொள்கையோடு அவர் இருக்கின்றார். அதனால்தான் நாம் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை மாகாண சபை மூலம் இயன்றளவு வழங்குவதுடன் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று வெளிப்படையாகக் கூறுகின்றார். எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்காலத்தில் இந்தத் தீர்வுகளைப் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. எனவே அதற்கு அவசியமான சூழலையும் சந்தர்ப்பத்தையும் உருவாக்கிக் கொடுக்கும் பொறுப்பு எமக்கு இருக்கின்றது. தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலையிலும் கூட மட்டக்களப்பு மாவட்டத்தின் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு அவசியமான நிதிகளை ஒதுக்கித் தந்துள்ளார். நாம் அவற்றுக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்" என்றார்.

ஆற்றல், அறிவு மற்றும் திட்டமிட்ட அடிப்படையில் பணியாற்றக்கூடிய தலைவராக ஜனாதிபதி இருக்கின்றார். எமது அழைப்பையேற்று எமது அலுவலகத்திற்கு வருகை தந்தமைக்காக ஜனாதிபதிக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கிறேன்" என்று தெரிவித்தார். தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

இதேவேளை, முற்போக்குத் தமிழர் கழகத்தின் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான எஸ். வியாழேந்திரனின் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார். அங்கு கட்சி உறுப்பினர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் குடும்ப உறுப்பினர்களுடனும் ஜனாதிபதி சிநேகபூர்வமாக கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

# சவால்களைக் கண்டு ஒருபோதும் தப்பியோடி விட வேண்டாம்!

## மட்டக்களப்பில் இளையோருக்கு ஜனாதிபதி அறிவுரை



எதிர்கால சந்ததியினர் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொண்டு கொள்கைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் சவால்களைக் கண்டு ஒருபோதும் தப்பியோடக் கூடாது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்பில் அறிவுறுத்தினார்.

நாட்டில் வெற்றிகரமான தலைமைத்தும், தலைசிறந்த அரசியல்வாதி என்ற வகையில் ஜனாதிபதி கொண்டிருக்கும் அனுபவங்களுக்கமைய எதிர்கால சந்ததியினருக்கு வழங்கும் அறிவுரை யாதென மட்டக்களப்பு மாவட்ட இளையோருடனான சந்திப்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். மட்டக்களப்பு கோல்டன் ரிவர் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இளையோர் அணி சந்திப்பிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் பெருமளவான இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டிருந்ததோடு, அவர்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி சாதகமான பதில்களை வழங்கினார். இந்தச் சந்திப்பின் பின்னர் இளையோருடன் ஜனாதிபதி படங்களிலும் இணைந்துகொண்டார். இதன்போது இளையோர் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பதில்கள் வருமாறு:

கேள்வி: நெருக்கடியிலிருந்த நாட்டை மீட்கும் சவாலை எவ்வாறு ஏற்றுக்கொண்டீர்கள், உங்கள் எதிர்கால திட்டம் எவ்வாறானது? நீங்கள் கற்ற கொழும்பு ரோயல் கல்லூரியில் கல்வி கற்க நான் ஆசைப்பட்டேன். அது கனவாகவே போய்விட்டது. எதிர்கால சந்ததிக்கு அந்த வாய்ப்புக் கிடைக்குமா அல்லது அதற்கு நிகராக ஏனைய பாடசாலைகள் மேம்படுத்தப்படுமா?

பதில்: அனைவரும் தப்பியோடும் வேளையிலும் நான் நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்டேன். சுயநம்பிக்கை இருந்தால் எவரும் சவால்களுக்கு அஞ்ச வேண்டியிருக்காது. ஓடுவதற்காக பயன்படுத்தும் சப்பாத்துக்களை, சவால்களை கண்டு அஞ்சி ஓடுவதற்காக பயன்படுத்தக் கூடாது. நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கையில் ஏற்றுக்கொண்டேன். நான் பொறுப்பேற்றிருக்காவிட்டால் நாட்டின் நிலை என்னவாகியிருக்கும்? இங்கு இவ்வாறு அமர்ந்து பேசக்கூட சந்தர்ப்பம் இருந்திருக்காது. சவால்களை கண்டு அஞ்சக்கூடாது. ஒருபோதும் ஓடிஒளியவும் கூடாது. ரோயல் கல்லூரியை போலவே பல பாடசாலைகளின் வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன. அரசாங்கத்தினால் சிறந்த கல்வியை வழங்க முடியும். ஆனால் முதுகெலும்பைத் தர முடியாது. அது தம்மிடம் இருக்க வேண்டும்.

கேள்வி: நாட்டில் வளங்களிலிருந்தும், பல பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம். நமது தொழிற்சாலைகளை மேம்படுத்த உங்களிடம் எவ்வாறான யோசனைகள் உள்ளன?

பதில்: உங்களுக்குப் பிடித்த பாடகர் யுவன் சங்கர் ராஜா என்று சொன்னீர்கள். அப்படியானால் பாடல்களையும் நாம் இறக்குமதிதானே செய்கிறோம். திறந்த உலகில் எமது சந்தைகளை வலுவூட்ட வேண்டும் என்பதில் எனக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. நமது நாட்டின் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வது குறித்து இதுவரை கவனம் செலுத்தவில்லை. நாம் ஏற்றுமதியில் கவனம் செலுத்த வேண்டும். ஏற்றுமதிசார் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். நெருக்கடிக் காலத்தில் எம்மிடம் போதிய வெளிநாட்டு கையிருப்பும் இருக்கவில்லை. எரிபொருள் உள்ளிட்டவைகளை இறக்குமதி செய்யவும் வெளிநாட்டு வருவாய் தேவைப்படும். அவ்வாறான தேவைகளுக்காக பெற்றுக் கொண்ட கடனை எம்மால் மீள செலுத்த முடியாமல் போனது. அதனால் எம்மிடத்திலிருக்கும் வளங்களைப் பயன்படுத்தி அதனூடாக ஏற்றுமதியை பலப்படுத்துவது குறித்து சிந்திக்க வேண்டும். பயிற்றுவிக்கப்பட்ட சிரமப் படையும் எமது வளங்களின் ஒரு அங்கமாகும். அடுத்தது சுற்றுலாத்துறை. மட்டக்களப்பில் மட்டும் நாம் 100இற்கும் அதிகமான சுற்றுலா ஹோட்டல்களை நிர்மாணிக்கலாம். அதேபோல் விவசாயத்தை நவீனமயப்படுத்துவதன் ஊடாகவும் வெளிநாட்டு வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும். நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டாலும், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி நகராவிட்டால் அடுத்த 15_ 20 வருடங்களுக்குள் இதே பிரச்சினைக்கு மீண்டும் முகம் கொடுப்போம். அதற்கான சிறந்த வழியாக விவசாயம், சுற்றுலா துறைகளை மேம்படுத்தி ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்வதை இலக்காகக் கொள்ள வேண்டும். அதற்காகவே பொருளாதார மாற்றத்துக்கான சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது.



வர்த்தக சமூகத்தினருடனும் சந்திப்பு

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான எஸ்.வியாழேந்திரன், சிவநேசத்துரை சந்திரகாந்தன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் எச்.ஈ.இம்.டபிள்யூ. ஜீ.திசாநாயக்க, மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்பு மாவட்ட வர்த்தகர்களையும் சந்தித்தார். சுற்றுலாத்துறை, விவசாயம் மற்றும் தொழில்துறை அடிப்படையில் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கான பரந்த திட்டம் குறித்து வர்த்தகர்களுக்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி, இந்திய அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து திருகோணமலையை வலுசக்தி மையமாக மாற்றவிருப்பதாகவும் அறிவுறுத்தினார். அதேபோல் நாட்டை ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி இட்டுச் செல்வதில் கிழக்கு மாகாணம் பிரதான பங்கு வகிக்கும் என்றும், அடுத்த ஐந்து வருடங்களில் கிழக்கு மாகாணத்தில் பரந்த அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துடன் இணைந்து கொள்ளுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

# போதைப்பொருட்களுக்கு அடிமையாவதால் ஆளுமைத் தன்மை அற்றுப்போய்விடுகிறது

(சாவகச்சேரி விசேட நிருபர்)

போதைப்பொருட்களுக்கு அடிமையாகும் போது அது எமது மூளையை ஏமாற்றி, வாழ்க்கைத் திறன்களைச் சிதைத்து, ஆளுமையற்ற மனிதர்களாக எம்மை மாற்றிவிடுகிறது என பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முழங்காவில் மகா வித்தியாலயம் மற்றும் ஜெயபுரம் மகாவித்தியாலய மாணவர்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் தடுப்புத் தொடர்பான செயலமர்வில் வளவாளராக கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பாவனை மூளையில் "டோப்போமின்" எனும் மகிழ்வைத் தூண்டும் ஓமோனையும் உடலில் "அதிரினலின்" எனும் உடலை சண்டைக்குத் தயாராக்கும் ஓமோனையும் அதிகளவில் சுரக்கத் தூண்டும். அந்த நிலைமை தான் இயல்பான நிலை என்ற எண்ணம் மூளைக்கு ஏற்படுவதனால் மூளை அதனை மீண்டும் மீண்டும் எதிர்பார்க்கும்.



போதைப்பொருட்கள் இரசாயனப் பொருட்கள் என்பதால் மூளையின் செயல் முறையில் பாதிப்பை ஏற்படுத்தி மன அழுத்தம், தொடர்பாடல் சிக்கல்கள், ஆளுமைப் பிறழ்வுகள், தற்கொலை எண்ணங்கள், சுய கௌரவமின்மை, கவனஞ்செலுத்த முடியாமை, ஞாபகத்திறன் இழப்பு, கற்றலில் நாட்டமின்மை, சமூக உறவிலிருந்து விலகுதல், குற்றச் செயல்கள் மற்றும் சமூக விரோத செயலில் ஈடுபடுதல் போன்ற நிலைமைகளுக்கு உட்படுத்தி விடுகின்றது.

மேலும் காலப்போக்கில் இதய நோய்கள், சிறுநீரகக் கோளாறுகள், நரம்புசார்ந்த வலுவின்மைகள், ஈரலில் பாதிப்பு மற்றும் புற்றுநோய் எனும் நோய்நிலைகளையும் ஏற்படுத்தி உயிரைப் போக்கிவிடுகின்றன.

எனவே நாம் இதிலிருந்து பாதுகாப்புப் பெற்று சிறந்ததொரு எதிர்கால சந்ததியை நிலைநாட்ட போதை எனும் கொடிய அரக்கனுக்கெதிராக ஒன்றிணைந்து போராட வேண்டும்.

போதைப் பழக்கமுடையோருடன் நட்பைத் தவிர்த்தல், எந்தவொரு போதைப்பொருளையும் பரிசீலித்துப் பார்க்காதிருத்தல், சட்ட மற்றும் சமூக விழுமியங்களை மதித்து ஒழுகுதல், கல்வியிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபடல், நல்ல பொழுது போக்குகளில் நாட்டங்கொள்ளல் மற்றும் வாழ்க்கைத்திறன்களை தம்மில் வளர்த்துக்கொள்ளல் என்பன போதைப்பொருளுக்கு உட்படாமல் பாதுகாப்பைப் பெறும் வழிகளாகும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## வடக்கின் உதயம்

# இலவச கணினிக் கற்கை நெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(சாவகச்சேரி விசேட நிருபர்

என் கனவு யாழ் அக்கடமி ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச கோடிங் கணினிப் பயிற்சி நெறியின் முதல் பாகத்தை பூர்த்தி செய்த சுமார் மூவாயிரம் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 30/06/2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

தொழில்நுட்ப உலகை எதிர்கால சந்ததியினர் வெற்றி கொள்ள வழி காட்டும் விதத்தில் டிபி எடியுகேஷன் அறக்கட்டளை நிறுவுனரும் பாராளுமன்ற உறுப்பினருமான தம்மிக்க பெரேரா மற்றும் யாழ், கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோருடைய முயற்சியால் யாழ். மாவட்டத்தின் 8 பிரதேசங்களில் முற்றுமுழுதாக இலவசமாக முன்னெடுக்கப்படும் கோடிங் கணினிக் கற்கை நெறியின் முதற் பாகத்தை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வே இடம்பெறவுள்ளது.

மேற்படி சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான டிபி எடியுகேசன் நிறுவுனர் தம்மிக்க பெரேரா மற்றும் என் கனவு யாழ் அறக்கட்டளை நிறுவுனர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பொசன் பண்டிகையை முன்னிட்டு

# யாழ்.போதனா வைத்தியசாலையில் 125 பேருக்கு கண்புரை சிகிச்சை



(யாழ். விசேட நிருபர்

பொசன் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் 125 பேருக்கு கடந்த (21) வெள்ளிக்கிழமை கண்புரை சிகிச்சையளிக்கப்பட்டது.

அலாக்கா மற்றும் ஆனந்தா பவுண்டேசனின் பங்களிப்புடன் 51 இராணுவ படைப்பிரிவின் உதவியுடன் கண் நோயாளர்களுக்கான சிகிச்சை வைத்திய கலாநிதி மலரவனின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

சிகிச்சையின் முன்னதாக யாழ்ப்பாண நாகவிகாரையின் விகாராதிபதி தலைமையில் பொசன் ஆராதனை நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். மாவட்ட இராணுவ கட்டளை தளபதி, வடக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர், மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர், வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ். பொலிஸாரிடம் தஞ்சமடைந்துள்ள கொழும்பு சிறுவன்

(யாழ்.விசேட நிருபர்)

தனது தாயும், சித்தப்பாவும் தன்னை அடித்து துன்புறுத்துவதாக கூறி கொழும்பை சேர்ந்த 16 வயதுடைய சிறுவன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளான்

கொழும்பில் தனது தாய் மற்றும் சித்தப்பா (தாயின் இரண்டாவது கணவர்) ஆகியோர் அடித்து துன்புறுத்துவதால் வீட்டை விட்டு வெளியேறி யாழ்ப்பாணம் வந்ததாகவும், யாழ்ப்பாணத்தில் வேறு நபர்களை தெரியாத காரணத்தால் பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் கோரி வந்ததாகவும் சிறுவன் தெரிவித்துள்ளான்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஊடகவியலாளர் வீடு மீதான தாக்குதல்: நடவடிக்கைக்கு வலியுறுத்தல்



(யாழ்.விசேட நிருபர்

ஊடகவியலாளரின் வீட்டை தாக்கியவர்களும் அதனை செய்வித்தவர்களும் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். கடந்த 13 ஆம் திகதி அச்சுவேலியைச் சேர்ந்த ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீடு தாக்கப்பட்டு வாகனங்களும் எரியூட்டப்பட்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார். இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்கு தாக்குதலை மேற்கொண்டமை மிலேச்சத்தனமானதும் கண்டிக்கத்தக்கதான விடயமாகும் எனவே குறித்த விடயத்தினை செய்தவர்களும் செய்வித்தவர்களும் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

# தாக்குதலுக்கு உள்ளான மாணவன் வைத்தியசாலையில்

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு நகரப்பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் உயர்தரத்தில் கல்வி கற்றுவரும் பாடசாலை மாணவனை ஆசிரியர் ஒருவர் சரமாரியாக தாக்குதல் நடத்தியதில் குறித்த மாணவன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த சம்பவம் கடந்த 19.06.2024 அன்று முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது. உயர்தரத்தில் கல்வி கற்றுவரும் முல்லைத்தீவினை சேர்ந்த குறித்த மாணவன் மீது பாடசாலைக்குள் வைத்து ஆசிரியர் ஒருவர் கைகளால் சரமாரியாக கன்னங்களில் தாக்குதல் நடத்தியுள்ளார். இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

# யாழில் சிறுவன் திடீரென உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம், அச்சுவேலி மேற்கை சேர்ந்த 16 வயதுடைய கபிலன் கபிஷன் எனும் விசேட தேவையுடைய சிறுவன் உயிரிழந்துள்ளார். கடந்த 21ஆம் திகதி திடீரென உடல்நல பாதிப்புக்கு உள்ளாகி தொடர்ச்சியாக வாந்தி எடுத்த நிலையில் பெற்றோர் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை சிறுவன் உயிரிழந்துள்ளான். உடல் கூற்று பரிசோதனையின் போது குடல் அலர்ஜி ஏற்பட்டு மரணம் சம்பவத்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

## மலைச்சாரல்



# கல்வியில் அரசியலை புகுத்த வேண்டாம்

## சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க

(காவத்தை தினகரன் விசேட நிருபர்)



"கல்வியில் அரசியலை புகுத்த வேண்டாம், ஆசிரியர்கள் அரசியலை பாடசாலைக்குள் கொண்டு வரக்கூடாது. மாணவர்களுக்கு நிபந்தனையின்றி சேவையாற்ற வேண்டும், கல்வியில் அரசியல் ரீதியாக நான் எந்த வகையிலும் தலையிட மாட்டேன்" என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த 1036 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை(19) இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது, அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்காக வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன் அதற்காக 7300 பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்தனர்.

சப்ரகமுவ மாகாண சபையினால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற ஆசிரியர்களுக்கே நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, பிரதான செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய, ஆளுநரின் செயலாளர் தர்ஷன சமரசேகர, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் விஜேரத்ன தேவகெதர, ஆளுநரின் இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்பு செயலாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வங்குரோத்து நிலையிலிருந்து நாடு விரைவில் மீண்டெழும்

## ஐ.தே.க இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார்

இருண்ட யுகத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த நாடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுபவமிக்க சிறந்த தலைமைத்துவத்தால் இன்று ஒளியைக் கண்டுள்ளது.

வெகுவிரைவில் வங்குரோத்து நிலையில் இருந்தும் நாடு மீளும். எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பேராதரவு வழங்குவதன் மூலம் அபிவிருத்தி யுகத்தை நோக்கி பயணிக்க முடியும் என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி செயற்பாட்டாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் உரையாற்றுகையில்

" ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவாவதை தடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் வியூகம் வகுத்து செயற்பட்டன. எனினும், எதிரணியில் உள்ள எம்.பிக்களுக்கு ஜனாதிபதியின் ஆளுமை தெரியும். அதனால்தான் பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் அவர் அமோக வெற்றி பெற்றார்.

இது சஜித்துக்கும் தெரியும். அதனால்தான் டலஸ் அழகப்பெருமவை பலிக்கடாவாக்கிவிட்டு, ஜனாதிபதி வேட்பாளர் பதவியை அவர் தக்கவைத்துக்கொண்டார். அடுத்த தேர்தலிலும் சஜித்துக்கு தோல்விதான் ஏற்படப் போகின்றது. ஏனெனில் நாட்டை மீட்கக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் என்பது நாட்டு மக்களுக்கு புரிந்துவிட்டது.

வேஷம் போட்டு பொய் பேசி அரசியல் நடத்துபவர்களுக்கு மத்தியில், உண்மையைக் கூறி துணிவுடன் அரசியல் நடத்துபவரே ரணில். அவர் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டியது காலத்தின் கட்டாயம். அவரின் தலைமையின் கீழ் அடுத்து வரப்போகும் ஆட்சிதான் இலங்கைக்கு பொற்காலமாக அமையும்." என்றார் சுப்பையா ஆனந்தகுமார்

# கினிகத்தேன கடவல பகுதியில் விபத்து; ஒருவர் காயம்

மஸ்கெலியா நிருபர்.



ஹட்டன் அவிசாவளை வீதியில் கினிகத்தேன கடவல பகுதியில் அரச பேருந்து ஒன்றும் லொறியும் நேருக்கு நேர் மோதி, நேற்று (23) காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதாக கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த பஸ் ஒன்றும், ஹட்டனில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதுடன், லொறியின் சாரதிக்கு வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த நபர் சிகிச்சைக்காக கினிகத்தேனை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிவனொளிபாதமலை யாத்திரையின் போது போதைப்பொருளுடன் சென்ற 183 பேர் கைது

மஸ்கெலியா நிருபர்

சிவனொளி பாதமலை யாத்திரை காலத்தில், போதைப்பொருட்களுடன் சிவனொளி பாத மலைக்குச் சென்ற 183 பேர் ஹட்டன் போதைப் பொருள் குற்ற தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஹட்டன் தலைமையக பொலிஸ் குற்ற தடுப்பு, ஊழல் ஒழிப்பு பிரிவின் உயரதிகாரி ஒருவர், கடந்த ஆறு மாத கால சிவனொளி பாதமலை யாத்திரை காலத்தில் பல்வேறு போதைப்பொருட்களுடன் சென்ற 183 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஹட்டன் பொலிஸ் அத்தியட்சகர் நிபுன தெஹிகம, ஹட்டன் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். பாரூக் மற்றும் ஹட்டன் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் ஜயசேன ஆகியோரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புகளில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் 20 முதல் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் எனவும், இந்த இளைஞர்கள் போதைப்பொருளை நாடுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

முடிந்த வரையில் சிறு வயதில் இருந்தே தங்களது பிள்ளைகளை மிகவும் கட்டுப்பாட்டுடன் தெய்வ வழிபாடு, கல்வி என்பனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்க்க பெற்றோர்கள் முன் வர வேண்டும் என அந்த அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிபில – மொனராகலை வீதியில்

# ஜீப் வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இருவருக்கு படுகாயம்

ஊவா சுழற்சி நிருபர்

பிபில மொனராகலை வீதியின் கனுல்வெல பகுதியில் ஜீப் வண்டியும், மோட்டார் சைக்கிளும் மோதியதில் பெண் ஒருவரும் சிறுகுழந்தை ஒன்றும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் 22ஆம் திகதி காலை பிபில மொனராகலை வீதியில் பயணித்த ஜீப் வண்டியும் மோட்டார் சைக்கிளும் ஒன்றோடு ஒன்று மோதியதால் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணும் அவரது சிறு குழந்தையும் படுகாயமடைந்து பிபில வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கிழக்கின் குரல்



## மு.கா தேசியத் தலைவராக மீண்டும் ரவூப் ஹக்கீம்!

### 31ஆவது பேராளர் மாநாட்டில் ஏகமனதாக தெரிவு








**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவராக மீண்டும். பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 31 ஆவது பேராளர் மாநாடு காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவராக ரவூப் ஹக்கீம் ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 31ஆவது பேராளர் மாநாடு ஆரம்பமான போது காரி அஷ்ஷெய்க் அப்துல் ஜப்பாரினால் கிறாஅத் ஓதப்பட்டது. இதையடுத்து கட்சியின் கீதம் பாடப்பட்டது அதன் பின்னர் கட்சியின் தேசிய தலைவராக மீண்டும். பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் ஏக மனதாக தெரிவு செய்யப்படுவதாக கட்சியின் தவிசாளர் முழக்கம் மஜீத் அறிவித்தார்.

தக்பீர் முழக்க கரகோசங்களுக்கு மத்தியில் தலைவர் ரவூப் ஹக்கீம் மாநாட்டுக்கு தலைமை வகித்து கட்சியின் 33 பேர் கொண்ட உயர் பீடத்தை அறிவித்தார். பிரதித் தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரீஸ். பைஸால் காசீம். அலி ஸாஹிர் மௌலானா. முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மன்சூர். எஸ்.எம்.ஏ. கபூர் மற்றும். அன்வர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், தவிசாளராக முழக்கம் மஜீத், செயலாளராக நிஸாம் காரியப்பர், பிரதி செயலாளராக மன்சூர். ஏ. காதர், தேசிய அமைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக் பொருளாளராக றஹ்மத் மன்சூர், பிரதி அமைப்பாளராக முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெப்பை, தேசிய கொள்கை பரப்புச் செயலாளராக முபீன், சர்வதேச நாடுகளுக்கான இணைப்பாளராக சிறாஜ் மீரா சாகிப்,

பிரதிப் பொருளாளராக யஹியா கான் உட்பட 33 பேரையும் தலைவர் ரவூப் ஹக்கீம் அறிவித்தார். தக்பீர் கூறி தெரிவு அங்கீகரிக்கப்பட்டது.

இந்த பேராளர் மாநாடு கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் ஆளுநருமான ஹிஸ்புல்லாஹ்வின் ஏற்பாட்டில் காத்தான்குடியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதில் பேராளர்களின் கருத்துக்களும் இடம்பெற்றதுடன் நாடு முழுவதுமிருந்து அழைக்கப்பட்டிருந்த 1500 பேராளர்கள் கலந்து கொண்டனர்

---

அம்பாறை மாவட்டத்தில்

## சிறுவர், பெண்கள் வன்கொடுமை தடுப்பு பணியகங்கள் மூன்று திறந்துவைப்பு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



சிறுவர் மற்றும் பெண்கள் மீதான வன்கொடுமை உள்ளிட்ட குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் அம்பாறை மாவட்டத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்பு பணியகம் உத்தியோகபூர்வமாக கடந்த புதனன்று (19) திறந்து வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது, நிந்தவூர், இறக்காமம் பொலிஸ் நிலையங்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்பு பணியகங்களை கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் கலாநிதி சட்டத்தரணி அஜித் ரோகண பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

அரசாங்கத்தின் விசேட திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் உள்ள மூன்று பொலிஸ் நிலையங்களில் இப்பணியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜய பத்ம, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், உட்பட சர்வமத தலைவர்கள், மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

---

## நியமனப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்படாத பட்டதாரிகள் மேன்முறையீடு செய்யலாம்

**ஒலுவில் விசேட நிருபர்**

கிழக்கு மாகாணத்திலுள்ள மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3(அ) தரத்துக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக வெளியிடப்பட்டுள்ள பட்டதாரி நியமனப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்படாத பட்டதாரிகள், மேன்முறையீடு செய்ய முடியும் என கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஏ. மன்சூர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3(அ) தரத்துக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான

திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டு, போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் நியமனப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விண்ணப்பதாரி கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட பட்டதாரியாகவும் அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் மூன்று வருடங்களோ அல்லது அதற்கு அதிக காலமோ தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்நது.

பட்டம் சார்ந்த பாடங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் பாடம் தொடர்பிலான பிரச்சினைகள் தொடர்பான இறுதி முடிவு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

பட்டதாரி ஆசிரியர் நியமனப் பட்டியலில் பெயர் வெளியிடப்படாத பரீட்சார்த்திகள் தங்களது மேன்முறையீடுகளை இம் மாதம் 28ம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், 198, உட்துறைமுக வீதி, திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் அறிவித்துள்ளார்.

---

## மக்களின் காலடிக்குச் சென்று சேவை செய்தவர் பிரேமதாச

### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரதாச கலபதி

**ஒலுவில் விசேட நிருபர்**



முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, சகல இன மக்களும் நன்மை பெறும் வகையில் மக்களின் காலடிக்குச் சென்று சேவை செய்தவர் என, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரதாச கலபதி தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் 100ஆவது பிறந்த தின ஞாபகார்த்த வைபவம் வெள்ளிக்கிழமை (21) அக்கரைப்பற்று மாநகர சபை ஹலாஜ் மண்டபத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் எம்.ஐ.ஏ.ஆர். புகாரி தலைமையில் நடைபெற்றது, இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் தவிசாளருமான சந்திரதாச கலபதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

இவரது ஆட்சியில் சிறுபான்மை இன மக்கள் பெரும் நன்மையடைந்துள்ளார்கள், அம்பாறை மாவட்டத்தில் பல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு அபிவருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டில் வீடு இல்லாமல் வாழ்ந்தவர்களுக்கு கம்உதாவ திட்டத்தினை ஆரம்பித்து நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் வீட்டுத் திட்டங்களை ஏற்படுத்தி கொடுத்துள்ளதோடு, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் நலன் கருதி ஜனசவிய திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் நாட்டில் வறுமை இல்லாமல் ஆக்கப்பட்டது என்றார்.

---

## ஊடக மன்றங்களை உருவாக்கல்; அம்பாறையில் கலந்துரையாடல்



**பாலமுனை தினகரன் நிருபர்**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக ஊடக மன்றத்தை உருவாக்குவது குறித்த கலந்துரையாடல் நேற்று (23) அம்பாறையில் இடம் பெற்றது.

அமைச்சர் மனுஷநாணயக்கார தலைமையில் மொண்டி ஹோட்டலில் நடந்த இக்கலந்துரையாடல், "வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறைக்கு அறிவுபூர்வமான ஊடக நுழைவு" என்னும் தொனிப்பொருளில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில்ஊடகவியலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.


நாடளாவிய ரீதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக ஊடக மன்றங்களை ஸ்தாபிக்கும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில்,


அம்பாறை மாவட்டத்திலும் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.பாராளுமன்ற உறுப்பினர் வீரசிங்க உட்பட முக்கியஸ்தர்களும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

---

தம்பலகாமத்தில்

## காட்டு யானை தாக்குதலால் உடைமைகளுக்கு பாரிய சேதம்





திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள ஈச்ச நகரில் காட்டு யானைகளின் தாக்குதலால் தங்களது பயிர்கள் துவம்சம் செய்யப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் (22) அதிகாலை இடம் பெற்றுள்ளது. இதில் பயன் தரும் வாழை, தென்னை, மரவள்ளி உள்ளிட்ட பல மரங்களை யானைகள் துவம்சம் செய்து விட்டு சென்றுள்ளதாக அப்பகுதி மக்கள். கவலைதெரிவிக்கின்றனர். இக் காட்டு யானைகள் தொடர்ந்தும் தங்களது ஊருக்குள் இரவு வேளைகளில் வருவதனால் நிம்மதியாக தூங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அவர்கள் தெரிவிக்கின்றனர். சுமார் 15க்கும் மேற்பட்ட தென்னை, மற்றும் வாழை மரங்களை முற்றாக நாசமாக்கியதாகவும், குறித்த பகுதியில் பாதுகாப்பான யானை வேலி இன்மையால் இச் சம்பவங்கள் இடம் பெறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.


எனவே உரிய அதிகாரிகள் தங்களையும் தங்கள் உடைமைகளையும் இக் காட்டு யானைகளின் தாக்குதலில் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுக்கின்றனர்.

**ஹஸ்பர் ஏ.எச்**

---

## கிழக்கு மாகாண வெற்றியாளராக ஸூஹ்றா நதா தெரிவு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



மென்பொருள் சேவை நிறுவனங்களுக்கான இலங்கை சங்கத்தினால் (Sri Lanka Association for Software Services Companies) 2024ஆம் ஆண்டிற்கான தேசிய புத்தாக்க சிந்தனைகளுக்கான விருதுகளில் மென்பொருள் உருவாக்கங்களுக்காக நடைபெற்ற போட்டியில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி ஸூஹ்றா நதா மாகாண ரீதியாக, பாடசாலை பிரிவில் கிழக்கு மாகாணத்தில் வெற்றியீட்டியுள்ளார்.

கொழும்பு சங்கரில்லா ஹோட்டலில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், நிறுவனங்கள் என பல்வேறு பிரிவுகளுக்குமான புத்தாக்க சிந்தனைகளுக்கான தேசிய விருதுகள் வழங்கும் நிகழ்வில், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்கும் சாய்ந்தமருதைச் சேர்ந்த ஸூஹ்றா நதாவினால் முன்மொழியப்பட்ட பாடசாலை காபன் தடகணிப்பீடு செயலிக்காக (School Carbon Footprint) அவர் இவ் விருதினை பெற்றுக்கொண்டார். வர்த்தகம், கல்வி மற்றும் வேலை வாய்ப்பைப் பரப்புதல், ஆராய்ச்சி மற்றும் புதுமைகளை ஊக்குவித்தல் போன்ற செயற்திட்டங்களின் மூலம் தொழில்துறையின் வளர்ச்சிக்கு தொடர்ச்சியாக பங்களிப்பைச் செய்து வரும் மென்பொருள் சேவை நிறுவனங்களுக்கான இலங்கை சங்கம், நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பல்வேறு புத்தாக்க சிந்தனையாளர்களுக்காக ஆறாவது தடவையாக இவ்வருடமும் இவ் விருதினை வழங்குகின்றமை சிறப்பம்சமாகும்.

---

அக்கரைப்பற்று

## ஸ்ரீ விஜயாராம மகாவிகாரையின் பொசன் மிகுந்து மகா பெரஹர

அக்கரைப்பற்று ஸ்ரீ விஜயாராம மகாவிகாரையில் மூவின மக்களையும் உள்ளடக்கியதாக இடம்பெற்ற பொசன் மிகுந்து மகா பெரகராவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று ஸ்ரீ தம்மரெத்தின சிங்கள மகாவித்தியாலய பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம ஆலோசனைக்கேற்ப ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர். திரவியராஜின் ஒருங்கிணைப்பில் அக்கரைப்பற்று ஸ்ரீ விஜயாராம மகாவிகாரையின் விகாரதிபதி தேவகொட சோரத்த தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரின் பங்களிப்போடு அக்கரைப்பற்று பிரதேசத்தில் மூன்றாவது முறையாக மிகப் பிரமாண்டமான முறையில் மூவின மக்களையும் உள்ளடக்கியதாக இன நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் வகையில் இடம்பெற்ற பொசன் மிகுந்து மகா பெரகராவில் புனித சின்னங்கள் அடங்கிய பேழை தாங்கிய இரு யானைகளும் பவனியாக சென்றதுடன் தமிழ், சிங்கள கலாசார நடன நிகழ்வுகளும் இடம் பெற்றமை சிறப்பம்சமாக அமைந்தது.

இதில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து வருகை தந்த நடனக் கலைஞர்கள், மாணவர்கள் எனப் பலரும் பங்குபற்றியதுடன் பொதுமக்களின் வரவேற்பையும் பெற்றுக்கொண்டனர்.

**வி.சுகிர்தகுமார்**

---

பூநொச்சிமுனை கடற்கரையில்

## மீன்பிடிப் படகு எரிக்கப்பட்டமையை கண்டித்து மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு பூநொச்சிமுனை கடற்கரையில் நேற்று (23) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மீன்பிடிப் பட கொன்று எரிக்கப்பட்டமையை கண்டித்து அங்குள்ள மீனவர்களும், மீனவ குடும்பங்களும் நேற்று(23) ஞாயிற்றுக்கிழமை காலை கண்டன ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பூநொச்சிமுனை கடற்கரையில் மீனவர் ஒருவரின் இருபது லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடிப் படகு ஒன்றும் மீன்பிடி உபகரணங்களும் எரிக்கப்பட்டமையை கண்டித்து பிரதேச மீனவர்களும், மீனவ குடும்பங்களும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எரிக்கப்பட்ட மீன்பிடிப் படகு உரிமையாளருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் அவரின் பாதிக்கப்பட்ட வாழ்வாதாரம் கட்டி எழுப்பப்பட வேண்டும், நல்லுறவை சீர்குலைக்கும் சக்திகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், பூநொச்சிமுனை மீனவர்களின் மீன்களை களவாடுவது தடுக்கப்பட வேண்டும், மீன்பிடிப் படகை எரித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து சுலோகங்களை தாங்கியும் கோஷங்களை எழுப்பியும், மீனவர்கள் இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கடற்கரையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் பேரணியாக பூநொச்சிமுனை வீதி வரை சென்றனர்.

மீன்பிடிப் படகு எரிக்கப்பட்டமை தொடர்பில் இரண்டு பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹோமாகம 'தர்ம ரஷ்மி' பொசன் வலயம்

## பிரதமர் தினேஷ் குணவர்தன, வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன உட்பட அமைச்சர்கள் மற்றும் எம்.பிகள் பலர் பங்கேற்பு

'2024 தர்ம ரஷ்மி' பொசன் வலயம் அறிவை மையமாகக் கொண்ட நகரத்தில் அமைந்துள்ளதுடன், பெற்றோர்கள் பிள்ளைகளுடன் வந்து பொசன் உற்சவத்தில் கலந்து கொள்ளுமாறு ஹோமாகம பொசன் வலய திறப்பு விழாவில் கலந்து கொண்ட போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அழைப்பு விடுத்தார். NSBM பசுமைப் பல்கலைக்கழகம் முதல் மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி வரை 13 கிலோ மீற்றர் பொசன் வலயம் அமைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.





போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் கருத்தின்படி ஹோமாகமவை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட '2024 தர்ம ரஷ்மி' பொசன் வலயத்தின் திறப்பு விழா (21) பிட்டிபனவில் இடம்பெற்றது. பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் NSBM பசுமை பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

NSBM பசுமை பல்கலைகழகத்தின் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பல்கலைகழக இசைப் பிரிவுடன் இணைந்து பக்தி கீதம் இசைத்தார்கள்.

பொசன் வெளிச்ச கூடுகள் NSBM பசுமைப் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து பிடிபன மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி வரையிலான வீதியில் மூன்று நாட்களுக்கு காட்சிப்படுத்தப்படதிட்டமிடப்பட்டது. இதற்காக வெற்றி பெற்ற வடிவமைப்புகளுக்கு பெரும் தொகையான பணப்பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்க ஏற்பாட்டுக் குழு ஏற்பாடு செய்தது.



பொசன் வலயத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இலங்கையில் ஒரே நேரத்தில் அதிகளவான மக்களுக்கு உணவு வழங்கும் இந்நிகழ்வு (21) மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி மைதானத்தில் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் ஆரம்பமானது. இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வலயத்தில் ஏறக்குறைய ஆயிரம் பேருக்கு ஒரே நேரத்தில் அன்னதானம் வழங்குவதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் இராணுவத்தினர் ஏற்படுத்தியிருந்தனர். மூன்று இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு மூன்று நாட்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.







தேசிய ரூபவாஹினி மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை இணைந்து பொசன் வலயத்தில் ஏற்பாடு செய்த 'தர்ம ரஷ்மி' பக்தி கீத நிகழ்ச்சியை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன ஆரம்பித்து வைத்தார். இலங்கை பொலிஸ் மேற்கத்திய இசைக்குழுவினர் இசைப்பங்களிப்பு வழங்கினார்கள். பிரபல பாடகர்களும் பக்தி கீதங்களை இசைத்தார்கள்.

இதில் கலந்து கொண்ட கலாநிதி பந்துல குணவர்தன பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்.

இந்த மாகாணத்தின் குழந்தைகள் எங்கள் சமூகத்தின் ஒரு அங்கம். இவர்கள் பண்பட்ட கலாச்சாரத்தில் வாழ்கின்றனர். இந்த வலயத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளையும் இணைத்து பெரும் பரிசுத் தொகையை வழங்குவதற்காக பங்களிப்புகளை பெற்று அவர்களின் படைப்புகளான பொசன் விளக்குக் கூடுகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பசுமைப் பல்கலைக்கழகம் முதல் மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி வரை பாரிய அறிவு நிலையம் உள்ளது. மகிந்த ராஜபக்ஷ கல்லூரி ஆசியாவின் மிகப்பெரிய இடைநிலைப் பள்ளி மற்றும் இலங்கையின் ஒரே பசுமை பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடம், ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடம், நானோ தொழில்நுட்ப நிறுவனம், சின்டெக், பாட புத்தக களஞ்சியத் தொகுதி, அளவீடு மற்றும் தரசேவைத் திணைக்களம், டெலிகொம் தரவுக் களஞ்சியம் ஆகியவை இப்பகுதியில் அமைந்துள்ளன.





பொசன் பிராந்தியத்தில் 13 கிலோ மீட்டர் பரப்பளவில், அன்னதான மண்டபம், மூலிகை தேநீர், ரொட்டி, சூப் என்பன பல்வேறு நபர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டன.








வெகுஜன ஊடக அமைச்சு, போக்குவரத்து அமைச்சு, ஏனைய அரச திணைக்களங்கள், மேல் மாகாண சபை, ஹோமாகம பிரதேச செயலகம், ஹோமாகம பிரதேச சபை மற்றும் வர்த்தக சமூகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக இந்த பொசன் வலயத்தை குறிப்பிடலாம். இராணுவ வீரர்கள் அருகிலுள்ள தானசாலை மூலம் ஆயிரக்கணக்கானோருக்கு மூன்று நாட்களுக்கு உணவு வழங்கினார்கள். அத்தகைய பணியை நாம் செய்தது வரலாற்றுப் பொறுப்பாகும். இந்த பொசன் தர்ம ரஷ்மி வலயத்திலுருந்து மஹிந்த தேரரின் செய்தியை மக்களுக்கு அளித்துள்ளோம்.



பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் , அபிவிருத்தி லொத்தர் சபை யின் தலைவர் அஜித் குணரத்ன நாரகல, NSBM பசுமைப் ப ல்கலைக்கழகத்தின் கல்வியியல் மற்றும் தர முகாமைத்துவத் தலைவர் பாரத தொடங்கொடுவ ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, பாராளுமன்ற உறுப்பினர் காமினி லோகுகே, ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட, மேலதிக செயலாளர் உமாலி விமலரத்ன, லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், உட்பட அரசியல் பிரதிநிதிகள் , NSBM பசுமைப் பல்கலைக்கழகத்தின் பிரதி உபவேந்தர் பேராசிரியர் சமிந்த ரத்நாயக்க, அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் அஜித் குணரத்ன நாரகல, தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுதந்த லியனகே, சுயாதீன தொலைக்காட்சியின் தலைவர் சுதர்சன் குணவர்தன, ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். லேக்ஹவுஸ் ஆசிரியர் குழுவின் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, சுயாதீன தொலைக்காட்சி நிகழ்ச்சி குறிப்புகள் பிரதி பொது முகாமையாளர் சரத் குமார பெரேரா, மத்திய போக்குவரத்து சபையின் தலைவர் சிரேஷ்ட பொறியியலாளர் லலித் அல்விஸ், பல வெளிநாட்டு தூதுவர்கள், இராஜதந்திர அதிகாரிகள் மற்றும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.





புகைப்படங்கள் சுலோச்சன கமகே, நிஷங்க விஜேரத்ன மற்றும் சுதத் நிஷாந்த

சுற்றுலாத்துறை மற்றும் காணிகள் அமைச்சு
இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)

## கேள்விமனுக்கோரல்களின் சமர்ப்பித்தலை நீடித்தல்

### கற்பிட்டி, பாலாவியில் தற்போதுள்ள சுற்றுலாத்துறை தகவல் நிலையத்தின் புனர்நிர்மாணம்

**Contract No.: SLTDA/TP&D/W/NCB/SITE OFFICE-KALPITIYA/2024/14**

மேலேயுள்ள விடயம் தொடர்பாக 2024 மே 30 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரம் தொடர்பானது. கேள்விகோரல்களை சமர்ப்பித்தலுக்கான இறுதி திகதியானது பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விகோரல் சமர்ப்பித்தலுக்காக முதலில் அறிவிக்கப்பட்ட இறுதித் திகதி | : 2024 ஜுன் 28 அன்று பி.ப. 2 மணிக்கு |
| கேள்விகோரல் சமர்ப்பித்தலுக்காக திருத்தப்பட்ட இறுதித்திகதி | : 2024 ஜூலை 12 அன்று பி.ப. 2 மணிக்கு |
| விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கான | : 2024 ஜூலை 3 அன்று பாலாவி சுற்றுலாத்துறை தகவல் நிலையம் |
| கேள்விக்கோரல் ஆவணத்தின் செல்லுபடியாகும் திகதி: | 119 நாட்கள் (2024 ஒக்ரோபர் 11 ஆம் திகதி அடங்கலாக இத்திகதி வரையுமானது) |
| விலைக்கோரல் பிணைமுறியின் செல்லுபடியாகும் திகதி: | 119 நாட்கள் (2024 ஒக்ரோபர் 11 ஆம் திகதி அடங்கலாக இத்திகதி வரையுமானது) |

ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

தெளிவுறுத்தல்கள் தொடர்பாக 0112426800 (இணைப்பு: 303, 305, 277 என்ற தொடர்பிலக்கங்களினூடாக இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை பெறுகைக்கான உதவிப் பணிப்பாளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். இலத்திரனியல் தபால் முகவரி: sltdaproc@srilanka.travel, anushas@srilanka.travel

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல. 80, காலி வீதி, கொழும்பு-03.**



இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## ஏல விற்பனை

### ஏல விற்பனைத் திகதி: 2024.06.27

**எனது இல.: LD/S/T/456/2023/SLPA & LD/S/T/445/2022/CICT**

கொழும்புத் துறைமுக பண்டாரநாயக்க உட்செல்லும் வாசல் (BQ) நலன்புரி கட்டிடத்தில் 2024.06.27 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்வதற்காக **UCT** மற்றும் CICT திறந்த வெளியில் வைக்கப்பட்டுள்ள **Urea Prilled & Fertilizing Elements** ஐ அடக்கியுள்ள தடையகற்றப்படாத இலகுவில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு அடைக்கப்பட்ட பதினொரு (11) கொள்கலன்கள் மேற்குறிப்பிட்டவாறு விற்பனை செய்யப்படும்.

மேலேயுள்ள கேள்விக்காக கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சின் கீழுள்ள தேசிய உர செயலகத்தினால் வழங்கப்பட்டதும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான இறக்குமதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ள சாரார்கள் மாத்திரமே (பதிவு செய்யப்பட்ட கம்பனியினால் நியமிக்கப்பட்ட நபரொருவர்/சாரார்) பதிவு செய்வதற்கு வரவேற்கப்படுவார். மேற்கூறப்பட்டுள்ள பதிவு / அனுமதிப்பத்திரமானது இற்றைவரையாக்கப்பட்டிருப்பதுடன் 2024 ஆம் ஆண்டிற்கு செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் அதன் பிரதியொன்றானது கேள்வியின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.06.24 ஆம் திகதியன்று மு.ப. 8.30 மணியிலிருந்து 2024.06.25 ஆம் திகதியன்று மதியம் 12.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு அம்சத்திற்கும் பெசேவ மற்றும் **SSCL** உடனான 1,000 ரூபாவையும் மீளளிக்கப்படும் கட்டணமான 200,000,00 ரூபாவையும் செலுத்திய பின்னர், கொழும்பு-01, லோட்டஸ் வீதி 15 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, லொஜிஸ்டிக்ஸ் பிரிவின் விற்பனை பிரிவு அலுவலகத்திலிருந்து ஏல விற்பனை ஆவணங்கள் மற்றும் உட்செல்லல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். (கேள்விதாரர் அனைத்து இரு அம்சங்களுக்கும் கேள்வி கோரல்களை சமர்ப்பிக்க விரும்பினால், மேற்கூறியவாறு 400,000 ரூபாவை மொத்த மீளளிக்கப்படும் வைப்புத் தொகையாக செலுத்தல் வேண்டும்.

2024.06.25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் உரித்தான திறந்த வெளிகளில் விற்பனைக்கு பட்டியலிடப்பட்டுள்ள உருப்படிகளை பரீட்சிக்கலாம்.

**www.slpa.lk** என்ற இணையத்தை மேலதிக விபரங்களுக்காக பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்)**
24 .06.2024

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல.: 15, லோட்டஸ் வீதி, கொழும்பு -01.**



## கேள்விக்கான அழைப்பு

### மாவட்ட பொது வைத்தியசாலை - எம்பிலிப்பிட்டிய

**பிரேத அறைக்கான குளிர் அறை (1 no. of 6-Body Mortuary Cooler) வழங்குதல் கூட்டிணைப்பு செய்தல், செயற்படுத்திக் காட்டுதல் மற்றும் பராமரித்தல்**

**விடய இல.: DGH/EMB/F03/06/2024/01**

எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரால் இவ்வைத்தியசாலையின் பிரேத அறைக்கான குளிர் அறை (1 no.of 6-Body Mortuary Cooler) வழங்குதல், கூட்டிணைத்தல், செயற்படுத்திக் காட்டுதல் மற்றும் பராமரிப்பு உதவியை பெற்றுக் கொள்வதற்காக தகைமையுள்ள இலங்கை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. தேசிய போட்டி கேள்வி முறை மூலம் கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் சகல கேள்விதாரர்களும் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத சித்திகாரமான கேள்விதாரர்களாக இருத்தல் வேண்டும். ஆர்வம் காட்டுகின்ற திறன் உடைய மற்றும் தகைமையுடைய (CDDa/NMRA) கேள்வி வைப்பாளர்களால் மேலதிக தகவல்கள் மற்றும் கேள்வி ஆவணங்களை எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் (தொ.பே. இல. 070 7672718) இற்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 15,000.00 (பதினைந்தாயிரம்) செலுத்தி 2024.06.25 முதல் 2024.07.15 வரை வார நாட்களில் முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 2.00 இற்கு இடைப்பட்ட காலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்வியுடன் சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணை கேள்விப் பெறுமதி ரூ. 325,000.00 (மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் மட்டும்) ஆவதுடன் 2024.11.13 வரை செல்லுபடியாதல் வேண்டும். செல்லுபடியாகும் கேள்விப் பிணைக்கு அமைவாகாத எந்த கேள்வியும் முன் அறிவித்தல் இன்றி இரத்துச் செய்யப்படும்.

04. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் வேறு வேறு உறைகளில் இட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசலையின் பிரேத அறைக்கனா குளிர் அறையை (1 no.of 6-Body Mortuary Cooler)' மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு 2024.07.16 பிற்பகல் 2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைவதுடன் வருகை தந்துள்ள பெயர் குறிப்பிட்டுள்ள கேள்வி வைப்பாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பிற்பகல் 2.30 இற்கு கணக்குப் பிரிவில் கேள்விகள் திறக்கப்படும்.

05. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.07.03 முற்பகல் 10.30 இற்கு வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் சகல கேள்விதாரர்களும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

06. எந்த கேள்வி பற்றிய செலவுகளுக்கும் இவ்வைத்தியசாலை பொறுப்புக் கூறாது மேலும் எந்தக் கேள்வியும் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு உரியது.

07. கேள்வி ஆவணங்களில் மேற்கொள்ளப்படும் சகல மாற்றங்களுக்கு அருகிலும் கேள்விதாரரால் கையொப்பமிட்டு இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு.**
**மாவட்ட பொது வைத்தியசாலை**
**எம்பிலிப்பிட்டிய.**
2024.06.24
**தொ.பே. இல. 047-2230261**



## பொதுமக்களிடமிருந்து அபிவிருத்திப் பிரேரணைகளைப் பெற்றுக் கொள்ளல்

### ஹாலிஎல பிரதேச சபை

2025ஆம் வருடத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் மூலதன செலவுகளை மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்குவதற்கும் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களிடமிருந்து அபிவிருத்திப் பிரேரணைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஹாலிஎல பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் இயைபுடைய பிரேரணைகளை 2024 ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் சபைச் செயலாளர், ஹாலிஎல பிரதேச சபை, ஹாலிஎல எனும் முகவரிக்கு அனுப்புமாறு பொதுமக்களிடம் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

**தலைவர்,**
**ஹாலிஎல பிரதேச சபை - ஹாலிஎல.**
**055-2294275, 055-2295075**



ஹோமாகம பிரதேச சபை

## கேள்வி அழைப்பு

2024-2025ஆம் வருடங்களில் ஹோமாகம பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் சேரும் உக்கிப் போகாத குப்பைகளை, இறுதியாக போடப்படும் இடம் (கெரவலப்பிட்டிய) வரை போக்குவரத்து செய்வதற்கு இயலுமான மற்றும் தகைமை வாய்ந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ள நிறுவனங்கள் மற்றும் கேள்விதாரர்களிடமிருந்து விலைகள் கோரப்படுகின்றன.

**தகைமை மற்றும் நிபந்தனைகள்:**

01. ஹோமாகம பிரதேச சபையினால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் மாத்திரமே விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. இயைபுடைய சேவைச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. ஹோமாகம பிரதேச சபையினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படல் வேண்டும்.
04. சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் என்பவற்றை ஹோமாகம பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
   - ➢ கேள்விப் படிவங்களை விநியோகித்தல் - 2024-06-24ஆம் திகதி முதல் 2024-07-22ஆம் திகதி வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை
   - ➢ கேள்விப் படிவங்கள் வழங்கும் இறுதி நாள் மற்றும் நேரம் - 2024-07-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு
   - ➢ கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் - 2024-07-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு

❇ மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 2000.00
❇ மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புக் கட்டணம்
- ரூபா 200000.00 (இந்தத் தொகையை விண்ணப்பப் படிவங்கள் பெற்றுக்கொள்ளும் வேளையில் வைப்புச் செய்தல் வேண்டும்)

02. நகல் பிரதிகள் சகிதம் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை வெவ்வேறான வகையில் கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து, ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''2024/2025ஆம் வருடங்களில் ஹோமாகம பிரதேச சபையினால் சேகரிக்கப்படும் உக்கிப் போகாத குப்பைகளை தூவவத்த குப்பை முற்றவெளியிலிருந்து இறுதியாக போடப்படும் இடம் வரை போக்குவரத்து செய்தல்'' எனக் குறிப்பிட்டு செயலாளர், பிரதேச சபை, ஹோமாகம'' எனும் முகவரிக்கு 2024-07-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது ஹோமாகம பிரதேச சபை செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

03. இந்தக் கேள்வியை எந்தநேரத்திலும் இரத்துச் செய்யும் அதிகாரத்தை ஹோமாகம பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கேள்வியைக் கையளித்தல் தொடர்பில் ஹோமாகம பிரதேச சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

04. தொலைபேசி இலக்கம் - 0112855230
தொலைநகல் இலகக்கம் - 0112857169

**கே.பீ.டீ.கே. குணதிலக்க,**
**செயலாளர் மற்றும்**
**சபையின் அதிகாரம் வாய்ந்த வேலைகளை**
**நிறைவேற்றும் அதிகாரி, ஹோமாகம பிரதேச சபை.**

2024 ஜூன் மாதம் 23ஆம் திகதி,
**ஹோமாகம பிரதேச சபையில்.**
**HPS/1/2/02/2024**



தெவிநுவர பிரதேச சபை

## தெவிநுவர ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் எசல உற்சவம் எசல சல்பில் சந்தை 2024 பிரசார சேவையை நடத்திச் செல்லும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்கான விலைமனுக் கோரல்

தெவிநுவர உத்பலவன்ன ஸ்ரீ விஷ்ணு மகா தேவாலயத்தின் எசல பெரஹர உற்சவத்திற்கு சமாந்திரமாக நடாத்தப்படும் எசல சல்பில சந்தையில் பிரசார சேவை நடத்திச் செல்லும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. இப் பிரதேச சேவை சல்பில் நடத்தப்படும் 2024.07.21 முதல் 2024.07.27 வரையான காலத்திற்குள் நடத்திச் செல்லப்படல்வேண்டும்.
2. சல்பில் வளாகத்திலும், மாத்தறை தங்கல்ல பிரதான வீதியின் வெல்லமடம பாலத்தில் இருந்து தெவிநுவர எரிபொருள் நிரப்பு நிலையம் வரை லைட் ஹவுஸ் வீதி, சிங்ஹாசன வீதி, கரலவெல்ல, கல்ஏதன்ட வீதி ஆரம்ப சந்தி அருகில் மற்றும் பழைய மணிக் கூண்டுக் கோபுரம் வரை, பிரசார விடயங்களை நடத்திச் செல்வதற்கான உரிமை உரித்தாகும்.
3. ஆர்வமுள்ள கேள்வி தாரர்களுக்கு தெவிநுவர பிரதேச சபையின் வழங்கல் பிரிவில் 2024.06.25 முதல் 2024.07.07 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணத் தொகுதியை மீளளிக்கப்படாத ரூபா 300.00 (முன்னூறு) கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மக்கள் வங்கியின் தெவிநுவர கிளையின் கணக்கு இலக்கம் 243100120000001 என்ற செயலாளர், தெவிநுவர பிரதேச சபை என்ற கணக்கிற்கு குறித்த தொகையை வைப்புச் செய்து பற்றுச் சீட்டின் தெளிவான புகைப்படமொன்றை 071-11909755 என்ற whatsapp இலக்கத்திற்கு அனுப்பி கேள்விப் படிவத் தொகையை whatsapp வழியாக பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது மீளளிக்கப்படும் பாதுகாப்பு பிணை வைப்புத் தொகை ரூபா 10,000.00 (பத்தாயிரம்) தெவிநுவர பிரதேச சபையின் காசாளரிடம் காசாகச் செலுத்தி குறித்த பற்றுச் சீட்டு அல்லது மக்கள் வங்கியின் தெவிநுவர கிளையின் கணக்கு இல. 243100120000001 கொண்ட செயலாளர், தெவிநுவர பிரதேச சபை என்ற கணக்கிற்கு வரவு வைத்து வங்கிப் பற்றுச் சீட்டை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.
5. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.07.08 மு.ப. 9.30 இற்கு முன்பு கிடைக்குமாறு செயலாளர், பிரதேச சபை, தெவிநுவர விற்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டு வந்து தெவிநுவர பிரதேச சபை செயலாளரின் உத்தியோக பூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
6. 2024.07.08 மு.ப. 10.00 இற்கு பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
7. கேள்விகளை வழங்குதல் சம்பந்தமாக இறுதித் தீர்மானம் தெவிநுவர பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**செயலாளர்,**
**தெவிநுவர பிரதேச சபை,**
**தொ.பே. இல. 041-2222571**

**தெவிநுவர பிரதேச சபை தலைமையகத்தில்**
2024.06.24


## கற்பிட்டியில் பெருநாள் கவியரங்கு







கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய ஒன்றியம் நடத்திய ஹஜ் பெருநாள் கவியரங்கு கடந்த வெள்ளிக்கிழமை (21) கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் தம்பி மரைக்கார் அரங்கில், அதிபர் எஸ்.எம் அறூஸ் தலைமையில் நடைபெற்றது. இக் கவியரங்கில் 8 கவிஞர்கள் கவி பாடினார்கள். எச்.எம். சுஜப் (கவிப்புயல்), எஸ்.எச்.எம் நவ்பர், ஜீ.குணசேகரன், எஸ்.சுப்ரமணியம், எம்.எம். எம். ரவூப், பாத்திமா பர்வின் எம்.ரீ.றிபாஸ் மௌலவி, எம். கேஷினி மோகனதாஸ் ஆகியோர் மேடையில் அழகாக கவிபாடினார்கள். இதில் விசேஷட அம்சம் என்னவென்றால், மூன்று தமிழ்க் கவிஞர்கள் நபி இப்ராஹீம், இஸ்மாயில் போன்றவர்களின் வரலாறுகளை பாடினார்கள். இந்நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரனை வழங்கியிருந்தது. சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.எம். நிலாம் மற்றும் அஷ்ரப் ஏ சமத் ஆகியோருடன் அல் அக்ஸா பாடசாலை உப அதிபர், ஆசிரியர்கள் இலக்கியவாதிகள் கலந்து சிறப்பித்தனர்.

இக் கவிரங்கில் கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் செயலாளரும் கற்பிட்டி பிரதேச ஊடகவியலாளருமான எம். எச்.எம் சியாஜ் மன்றத்தின் நோக்கம் மற்றும் கற்பிட்டியில் காணப்பட்ட கலை இலக்கியம் பற்றி உரையாற்றுகையில்

கற்பிட்டியின் வரலாறானது பல்லாயிரம் வருடங்களை கடந்து வந்துள்ளது. ஆனால் அவற்றிற்கான தெளிவான ஆதாரங்கள் எங்களிடம் இல்லை. உண்மையில் கற்பிட்டியின் வரலாறானது மாபெரும் புதையலாகும். கற்பிட்டியின் வரலாறு குதிரைமலை துறைமுகத்துடன் தொடர்பு கொண்டது.

அத்தோடு அப்துல் மஜித் புலவரின் ஆசாரக்கோவை கற்பிட்டியில் வாழ்ந்த மரைக்கார் பரம்பரைகளை எடுத்து இயம்புவதுடன் இவரின் அடக்கஸ்தலம் எமது கற்பிட்டி பிரதேசத்தின் திகழியில் உள்ளது. இலங்கையின் முதல் சிவில் சேவகர் சைமன் காசிச் செட்டி, நீதிபதி அக்பர் ஆகியோர் பிறந்து வாழ்ந்த பிரதேசம் கற்பிட்டி ஆகும். இவை கற்பிட்டியில் கலை இலக்கிய வளர்ச்சி காணப்பட்டதற்கான ஆதாரங்களாகவும் உள்ளன. இவ்வாறான சிறப்புக்களை பெற்ற எமது கற்பிட்டியின் தமிழ் கலை இலக்கியம் இன்று வரட்சியடைந்துள்ளது. இதனை மாற்றியமைத்து கற்பிட்டியின் கலை இலக்கிய வரட்சியை போக்கி படைப்பாக்க திறன் உள்ள கலை இலக்கிய துறையினரை உருவாக்க வேண்டும். ஆர்வம் உள்ள சகலரும் கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தில் இணையுமாறும் மன்றம் சார்பாக அழைப்பு விடுத்தார்.

அஷ்ரப் ஏ சமத்

## நடமாடும் சேவை

***(அக்குறணை குறூப் நிருபர்)***



தேசிய அடையாள அட்டைகளின்றி அரசினால் வழங்கப்படும் பல்வேறு கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது சிரமப்பட்ட தெல்தெனிய பிரதேச சிரேஷ்ட பிரஜைகளுக்கு நடமாடும் சேவையொன்று அண்மையில் நடத்தப்பட்டது. தேசிய அடையாள அட்டைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள இதன்போது வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

பிரதேச சிவில் அமைப்புக்களின் உதவியுடன் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பும் இணைந்து இந்த நடமாடும் சேவையை ஏற்பாடு செய்திருந்தன. இதன் மூலம் மிகவும் பின் தங்கிய 10 கிராம அதிகாரிகள் பிரிவைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகள் பயனடைந்தனர்.

மேற்படி நடமாடும் சேவை மெதமஹநுவர ஸ்ரீ விஜயராம விகாரையில் இடம் பெற்றது. இதில் பிரதேச செயலாளர் நுவன் ஹேமகுமார உட்பட மேற்படி பிரதேச கிராம அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## பெறுகை அறிவித்தல் (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு மாகாணம்.

### சாவகச்சேரி நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

### பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம்

01. பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவீனங்களுக்காக உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசுக்கு ஒரு கடனுதவி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதன் ஒரு பகுதியினை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைத்திட்ட கொடுப்பனவிற்கு பிரயோகிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

03.

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் | வேண்டப்படும் தரம் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | கேள்விப் பிணை வைப்பு | கேள்வி செல்லு படியாகும் காலம் | கேள்விப் பிணை வைப்பு செல்லு படியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/CUC/PT3/2024/01(2) | சாவகச்சேரி சந்தையில் கடைகள் அமைத்தல் வேலைத் திட்டம், கட்டம் - II (சந்தை வடிகால் & நிலக்கல் பதித்தல், வேலி அமைத்தல்), சாவக்கச்சேரி | 3.677 | C8 அல்லது மேல் தரம் கட்டடங்கள் | 49 | 55,000.00 | 63 நாட்கள் | 14.10.2024 |

04. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

05. ஒப்பந்தம் கையளிக்கப்பட தகுதி பெறுவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் எந்தவொரு நிறுவனங்களினாலும் கறுப்புப் பட்டியல் படுத்தப்படாதிருக்க வேண்டியதுடன் உள்ளூர் ஒப்பந்தக்காரர்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) இல் கட்டடங்கள் நிர்மாணிப்புத் துறையில் பதிவினை கொண்டிருக்கவும் வேண்டும்.

06. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி 021 227 0806, தொலைநகல் 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **2024.06.24** ஆம் திகதியிலிருந்து **2024.07.14** ஆம் திகதி வரை **மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை** கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

08. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணமொன்றை செயலாளர், சாவகச்சேரி நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து வேலை நாட்களில் 2024.06.24 ஆம் திகதியிலிருந்து 2024.07.14 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

09. கேள்விகளை இரு பிரதிகளில் தயாரித்து கோரப்படும் ஆவணங்களுடன் தனித்தனியாக இரு உறைகளில் இட்டு தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு, பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம் (பி.அ.உ.தி), சாவகச்சேரி நகராட்சி மன்றம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2024.07.15 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

10. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கமைவாக கேள்விப் பிணைமுறியானது கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.

11. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2024.07.03 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,**
**பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டம்(பி.அ.உ.தி),**
**சாவகச்சேரி நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**
**2024.06.24**

---

### அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### மாவட்டச் செயலகம் – மொனராகலை

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு இயைபான பொருட்களைக் கொள்வனவு செய்து பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு போக்குவரத்து செய்வதற்கான வேலைகளுக்காக தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மொனராகலை மாவட்டச் செயலக பெறுகைக் குழுவின் தலைவரால் 2024 ஜுலை மாதம் 16ஆந் திகதி பி.ப. 02.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

- அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத கேள்வி வைப்பை மொனராகலை மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட கேள்வி மாதிரிப் படிவத்தில் தயாரித்து பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை முத்திரைக்குறி பொறித்து நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது மாவட்டச் செயலக கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.
- 2024-06-24ஆம் திகதி முதல் 2024-07-15ஆம் திகதி வரை கேள்வி மாதிரிப் படிவங்களை சாதாரண கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 வரையான காலத்தில் மாவட்டச் செயலக கணக்கிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
- சாதாரண கடமை நேரங்களில் மாவட்டச் செயலகத்தின் கணக்கிடல் பிரிவில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- பெறுகை முன்னோடிக் கூட்டம் 2024-07-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாவட்டச் செயலகத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் ''மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், மொனராகலை'' எனும் முகவரிக்கு பெற்றுக்கொண்ட செல்லுபடியாகும் கேள்விப் பிணை முறியொன்றை கேள்விப் படிவங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த பெறுமதியை மொனராகலை மாவட்டச் செயலகத்தில் ரொக்கப் பணமாகவும் வைப்புச் செய்யலாம்.
- கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது இரு நகல்களில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவைகளை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு வெவ்வேறான முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் கேள்விகளைச் சமர்ப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகைப் பொருட்களின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும்.
- தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
- கேள்விப் படிவங்கள் கோரப்பட்டு முடிவடைந்த உடனடுத்து, அதாவது 2024-07-16ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கு கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதிக்கு இடமளிக்கப்படும்.
- கேள்விப்படிவத்தின் சகல பக்கங்களும் கேள்விதாரரினால் ஒப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறித்திருத்தல் வேண்டும்.
- அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டவர்களுக்கு கேள்விகளைச் சமர்ப்பிக்க முடியாது.
- ஒப்பந்தத்தை வழங்கப்பெறுதலுக்குரித்தான விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவைச் சார்ந்தது. மேலதிக விபரங்களை 055-2276067 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மாவட்டச் செயலகத்தின் கணக்கிடல் பிரிவில் விசாரித்தறியலாம்.

**அட்டவணை**

| தொடர்பு இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ள அளவு | கேள்விப் பிணை முறி (ரூபா) (செல்லுபடிக் காலம்) | போக்குவரத்து செய்ய வேண்டிய பிரதேச செயலகம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| MO/DS/ACC/10/03/05 | கைப்பிடியுடனான பிளாஸ்டிக் கதிரைகள் | 8500 - 9500 இற்கு இடையில் | 400,000.00 (2024-10-15ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.) | மொனராகல, மடுல்ல, புத்தள, படல்கும்புர, பிபில, மெதகம, வெள்ளவாய, தனமல்வில, கதிர்காமம், சியம்பலாண்டுவ, செவனகல | 5,000.00 |
| | கைப்பிடியற்ற பிளாஸ்டிக் கதிரைகள் | 6500 - 7500 இற்கு இடையில் | | | |
| MO/DS/ACC/10/03/01 | திறன் வகுப்பறை தொகுதிகள் (Smart Board) | 36 | 278,000.00 (2024-10-15ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்) | மொனராகல, மடுல்ல, புத்தள, படல்கும்புர, பிபில, மெதகம, வெள்ளவாய, தனமல்வில, கதிர்காமம், சியம்பலாண்டுவ, செவனகல | 5,000.00 |
| | ஸ்மார்ட் போர்ட் 01, மடிக்கணனியொன்று மற்றும் டொக்கியூமன்ட் ஸ்கேனர் ஒன்றுடனான தொகுதி | 12 | | | |

**தலைவர்,**
**பெறுகைக்குழு.**
**மாவட்டச் செயலகம்,**
**மொனராகலை.**

---

**Repeat Your ad For Better Offers**

---

## கேள்விக்கான அழைப்பு

### மேல் மாகாண கல்வித் திணைக்களம் - 2024

கீழ்க்காணும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 2024.07.15 மு.ப. 10.00 வரை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

**மேல் மாகாண கல்வித் திணைக்களம்**

| செயற்றிட்ட இலக்கம் | உருப்படி | மீளளிக்கப் படாத தொகை (ரூ.) | மீளளிக்கப்படும் தொகை (ரூ.) | கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும் மற்றும் ஏற்றுக் கொள்ளும் இடத்தின் முகவரி மற்றும் தொ.பே. இலக்கம் |
|---|---|---|---|---|
| P1 | Smart Class Room உபகரணம் ஸ்மார்ட் போட் (With UPS & Trolley Stand) விஷுவலைசர், லெப்டொப் கணனி | 1000.00 | 353,500.00 | மேல் மாகாண கல்வித் திணைக்களம், இல. 89, ரன்மகபாய, பத்தரமுல்ல 011 2875893 |
| P2 | லெப்டொப் கணனி புரொஜெக்டர் இயந்திரம் | 1000.00 | 150,000.00 | |

**ஹோமாகம வலயக் கல்வி வலயம்**

| செயற்றிட்ட இலக்கம் | உருப்படி | மீளளிக்கப் படாத தொகை (ரூ.) | மீளளிக்கப்படும் தொகை (ரூ.) | கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும் மற்றும் ஏற்றுக் கொள்ளும் இடத்தின் முகவரி மற்றும் தொ.பே. இலக்கம் |
|---|---|---|---|---|
| P1 | மாணவர் படையணி மகளிர் சீருடை மற்றும் மாணவர் படையணி ஆண் சீருடை | 1000.00 | 6,500.00 | வலயக் கல்வி அலுவலகம், ஹோமாகம 011 2855245 |

- ➢ ஒவ்வொரு செயற்றிட்ட இலக்கங்களுடன் சம்பந்தப்பட்டதாக வேறு வேறாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். Smart Class Room உபகரண செயற்றிட்டத்தின் சகல உருப்படிகளுக்கும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் ஏனைய செயற்றிட்டங்களின் உருப்படிகளுக்கு வேறு வேறாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
- ➢ இவ் விலைமனுக் கோரலை இரத்துச் செய்தல் அல்லது வேறு எவ்வகையிலான மாற்றங்கள் பற்றிய அதிகாரம் மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

1. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.
2. மேற்படி கேள்விக்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடனான கேள்விதாரர்களுக்கு 2024.06.25 முதல் 2024.07.12 வரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் மற்றும் ஏற்றுக் கொள்ளும் இடத்தில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை அலுவலக நேரங்களில் கேள்வி கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்
3. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்விகள் விநியோகிக்கும் இடத்திற்கு எழுத்துமூல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து ஒவ்வொரு செயற்றிட்டத்திற்கும் வேறு வேறாக மீளளிக்கப்படாத குறித்த அலுவலகத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை நிர்வாகப் பிரிவிற்கு சமர்ப்பித்த பின்னர் 2024.06.25 முதல் 2024.07.12 வரை கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கும் மற்றும் ஏற்றுக் கொள்ளும் இடத்தில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2024 ஜுலை 15ம் திகதி மு.ப. 10.00 இற்கு முன்பு கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கும் மற்றும் ஏற்றுக் கொள்ளும் இடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் அல்லது கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கும் மற்றும் ஏற்றுக் கொள்ளும் இடத்தின் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் 2024.07.15 மு.ப. 10.00 இற்கு தனிப்பட்ட முறையில் வருகை தந்து சமுகமளிக்கும் கேள்விதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் குறித்த கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கும் மற்றும் ஏற்றுக் கொள்ளும் இடத்தில் கேள்விகள் திறக்கப்படும். சகல கேள்வியுடனும் கேள்விப் பிணை சார்பாக கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் விதத்தில் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை செலுத்திய பின்னர் அதற்காக விநியோகிக்கப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இணைத்திருத்தல் வேண்டும்.

**டபிள்யூ. ஏ. நீலிக்கா பெரேரா,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**மேல் மாகாண கல்வித் திணைக்களம்,**
**இல. 89, ‘ரன்மகபாய’, பத்தரமுல்ல.**
2024 ஜுன் 24ம் திகதி

---

### தெவிநுவர பிரதேச சபை

### தெவிநுவர ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் எசல உற்சவம் – 2024

## எசல ‘சல்பில்’ சந்தையில் தற்காலிக வர்த்தக கூடங்களை நிர்மாணித்தல் மற்றும் மின்சாரம் வழங்குவதற்கான கேள்வி அழைப்பு

தெவிநுவர பிரதேச சபைக்குச் சொந்தமான தெவிநுவர பொது மைதானத்தில் எசல ‘சல்பில்’ சந்தை - 2024.07.21 முதல் 2024.07.27 வரை நடைபெறும். இதற்காக தற்காலிக வர்த்தக கூடங்களை நிர்மாணித்தல் மற்றும் மின்சாரம் வழங்குவதற்காக 2024.06.25 முதல் 2024.07.07 வரை தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு தெவிநுவர பிரதேச சபையின் வழங்கல் பிரிவில் 2024.06.25 முதல் 2024.07.07 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத ரூபா 1000.00 (ஆயிரம்) கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறே மக்கள் வங்கியின் தெவிநுவர கிளையின் கணக்கு இல. 243100120000001 என்ற செயலாளர், தெவிநுவர பிரதேச சபை என்ற கணக்கிற்கு குறித்த தொகையைச் செலுத்தி பற்றுச்சீட்டின் தெளிவான புகைப்படமொன்றை 071-1190755 என்ற whatsapp இலக்கத்திற்கு அனுப்பி கேள்விப் படிவத் தொகுதியை whatsapp வழியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

02. கீழ்க்காணும் அளவுகளில் சபையினால் வழங்கப்படும் வரைபடம் மற்றும் மாதிரியின் பிரகாரம் தற்காலிக வர்த்தக கூடங்களை நிர்மாணித்தல் அவசியம்

| சதுர அடி அளவு | எண்ணிக்கை |
|---|---|
| நீளம் 06 அடி - 8”, அகலம் 10 அடி மற்றும் உயரம் 10 அடி வர்த்தக கூடம் | 86 |
| நீளம் 06 அடி - 8” அகலம் 05 அடி மற்றும் உயரம் 10 அடி வர்த்தக கூடம் | 473 |
| நீளம் 75 அடி அகலம் 30 அடியான பெரபொலிக்/VIP கவர் | 01 |

03. தெவிநுவர பிரதேச சபையினால் வழங்கப்படும் மாதிரிகளுக்கு அமைவாக உங்களால் மின்பிறப்பாக்கி இயந்திரம், மின் விளக்குகள், மின் கம்பிகள் மற்றும் ஏனைய துணைப்பாகங்கள் வழங்கும் தற்காலிக வர்த்தக கூடங்கள் மற்றும் ‘சல்பில்’ வளாகத்திற்கான மின் கம்பிகளை இணைத்து மின் ஒளியை வழங்குதல் வேண்டும்.

04. கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது மீளளிக்கப்படும் பாதுகாப்பு பிணை வைப்பாக ரூபா 100,000.00 (ஒரு இலட்சம்) தெவிநுவர பிரதேச சபையின் காசாளரிடம் காசாகச் செலுத்த முடியும். அவ்வாறே மக்கள் வங்கியின் தெவிநுவர கிளையின் கணக்கு இல. 243100120000001 என்ற செயலாளர், தெவிநுவர பிரதேச சபை என்ற கணக்கிற்கு வரவு வைத்த வங்கிப் பற்றுச்சீட்டை கேள்வி ஆவணங்களுடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

05. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.07.08 மு.ப. 9.30 இற்கு முன்பு கிடைக்குமாறு செயலாளர், பிரதேச சபை, தெவிநுவர இற்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டு வந்து தெவிநுவர பிரதேச சபை செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட முடியும்.

06. 2024.07.08 மு.ப. 10.00 இற்கு பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதி நிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

07. கேள்வி வழங்கல் பற்றிய இறுதித் தீர்மானம் தெவிநுவர பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**செயலாளர்,**
**தெவிநுவர பிரதேச சபை,**
**தொ.பே. இல. 041-2222571**

**தெவிநுவர பிரதேச சபை,**
**தலைமையகத்தில்**
2024.06.24

# பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### 2024ஆம் வருடத்திற்கு சத்திரசிகிச்சை, ஆய்வுகூடம் மற்றும் எக்ஸ்ரே பாவனைப் பொருட்களை வழங்குவதற்கான கேள்வி

01. பின்வரும் சத்திரசிகிச்சை, ஆய்வுகூட மற்றும் எக்ஸ்ரே பாவனைப் பொருட்களை வழங்குவதற்காக 2024-07-11ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை தேசிய போட்டி ரீதியிலான (NCB) கேள்வி கோரலின் கீழ் தகுதி மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறியிடப்பட்ட கேள்விகள் நுகேகொடை, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | பெறுகை விபரங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணம் (ரூபா) | கேள்வி திறக்கப்படும் திகதி |
|---|---|---|---|---|
| சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் | | | | 2024-07-11 |
| Q 280/24 | Q 280/24 Suture Materials for CTOT | Lot | 3,500.00 | |
| Q 281/24 | Surgical Consumable item for Anaesthesia - II (PMO) | Lot | 3,500.00 | |
| ஆய்வுகூட பாவனைப் பொருட்கள் | | | | |
| Q 282/24 | Media - Microbiology Department | Lot | 3,500.00 | |
| எக்ஸ்ரே பாவனைப் பொருட்கள் | | | | |
| Q 283/24 | Contrast Media - Cath Lab | Lot | 3,500.0 | |
| ஏனையவை | | | | |
| Q 284/24 | PRP Kits – Orthopedic Clinic | Lot | 3,500.00 | |

பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆவலுள்ள தகுதி வாய்ந்த எந்த முகவரும் அல்லது கேள்விதாரரின் சார்பாக பெயரிடப்பட்ட நபரும் கொள்வனவு செய்த முழுமையான கேள்வி ஆவணங்களில் இரு நகல்களில் பொறியிடப்பட்ட கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுதப்பட்ட எழுத்து மூலமான விண்ணப்பம்
(ii) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை கணக்காளருக்கு மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தல்
(iii) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் புகைப்படப்பிரதி

02. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம் மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. வைத்தியசாலையால் வழங்கப்பட்ட படிவங்களில் மட்டுமே விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். வைத்தியசாலையால் வழங்கப்படாத வேறும் படிவங்களிலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. வைத்தியசாலை வழங்கல்கள் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. 2024-06-24ஆம் திகதி முதல் 2024-07-10ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கல்கள் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் 2024-07-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

07. எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கவோ/ கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கவோ திணைக்கள கேள்வி குழுத் தலைவருக்கு சுய உரிமை உண்டு.



**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**

CDU/TS/2024/11&12

# இலங்கைச் சுங்கம்

## அரசுரிமையாக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்வி

அரசுரிமையாக்கப்பட்ட வாகனங்கள்/ தங்கம்/தங்க ஆபரணங்கள்/ மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் சில நானாவிதப் பொருட்களை கேள்வி மூலம் விற்பனை செய்வதற்கான கேள்வி கோரல் 2024 ஜுன் 28ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இலங்கைச் சுங்கம், மத்திய அப்புறப்படுத்தல் பிரிவின் கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

இந்தப் பொருட்களின் பட்டியல் மற்றும் பொருட்களின் விபரங்கள் அடங்கிய படிவமொன்றை மீளளிக்கப்படாத 25.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி இலங்கைச் சுங்கத்தின் 3ஆம் மாடியில் உள்ள மத்திய அப்புறப்படுத்தல் பிரிவில் 2024 ஜுன் 25, 26 மற்றும் 27 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விற்பனைக்குள்ள பொருட்களின் பட்டியல் www.customs.gov.lk எனும் சுங்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் 2024 ஜுன் மாதம் 24ஆம் திகதியிலிருந்து காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

011-2430795
011-2143434 - நீடிப்பு 7300

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கைச் சுங்கம்,**
**சுங்க இல்லம்,**
**இல. 40, பிரதான விதி,**
**கொழும்ப -11.**





## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**107**

**டொயோட்டா கார்கள் விற்பனைக்கு**


643295 Toyota, 1989 car. அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0774 542958. 041190



**119**

**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

LH-1068 Isuzu 2001 Lorry அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0714 542958. 041193



**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

BHN-1259 Honda Grazia, 2018 Motorcycle அதியு யர் விலைக்கு. வெ லிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0705 999163. 041187

JX-6954 Bajaj 2004 AAC-7395 Baja j 2012 Threewhe e l அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி , இல. 310, காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0705 999163. 041195

# பெறுகை அறிவித்தல்

## தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி பெருந்தெருக்கள் மற்றும் தகவல் அமைச்சு

### தென்மாகாண சபை

அருகிலுள்ள பாடசாலையே சிறந்த பாடசாலை தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கீழ்க்காணும் வேலைகளுக்காக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தென் மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | செயற்றிட்ட இல. | பாடசாலை | வேலை விபரம் | தேவைப் படும் CIDA பதிவு | மீளளிக்கப் படாத பிணை வைப்பு (ரூ.) | கேள்விப் பிணை பெறுமதி (ரூ.) | மதிப்பிடப் பட்ட தொகை (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | G/C/ NSBS/24/01 | கா/கனேகம ரத்னசார ம.வி | கட்டிடம் பழுது பார்த்தல் (சிறிய மற்றும் மேலதிக வேலைகள்) | C8, C7 | 1500.00 | 35,000.00 | 3.5 |
| 02 | G/C/ NSBS/24/02 | கா/சுதர்ம ம.வி | 90x25 கட்டிடம் பழுது பார்த்தல் | C8, C7 | 1500.00 | 20,000.00 | 2.0 |
| 03 | G/C/ NSBS/24/03 | கா/ராஜபக்ஷ ம.வி. | கட்டிடம் சிறிய பழுது பார்த்தல் (மிகுதி வேலைகள்) | C8, C7 | 1500.00 | 26,000.00 | 2.6 |
| 04 | M/C/ NSBS/24/01 | மார/மஹாமாயா மகளிர் கல்லூரி | 100x20 நான்கு மாடி கட்டிடம் | C6, C5 | 4000.00 | 120,000.00 | 11.9 |
| 05 | H/C/ NSBS/24/01 | ஹ/மாகம ம.வி | 90x25 மூன்று மாடி கட்டிடம் நிர்மாணம் (மிகுதி வேலை) | C6, C5 | 4000.00 | 200,000.00 | 20 |

02. தேசிய போட்டி கேள்வி முறைமையின் அடிப்படையில் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒப்பந்தங்கள் வழங்கும் போது தகைமை பெறும் சித்திகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலப்படுத்தப்படாது இருப்பதுடன், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்படி வகுதியின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. அரச நிதி சுற்றுநிருப இல. 03/2020 மற்றும் 2020.10.09ம் திகதிய 03/2020(1) மற்றும் 2021.01.11ம் திகதிய மற்றும் ரூபா 50 மில்லியனுக்குக் குறைந்த செயற்றிட்டங்களுக்கான அரச நிதி சுற்றுநிருப இல. 04/2016(ii) மற்றும் 2019.05.08ம் திகதிய மற்றும் இல. 04/2016(iii) மற்றும் 2021.02.18ம் திகதிய சுற்றுநிருபங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் செல்லுபடியாவதுடன் மாகாண முன்னுரிமை மற்றும் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பற்றி கேள்வி மதிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்படும்.

04. கேள்வி விண்ணப்பங்கள் 2024.06.24 முதல் 2024.07.15 வரை மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை லபுதுவ, தக்ஷினபாய கல்வி அமைச்சின் (தரைமாடி) இல் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு அமைச்சின் இந்த இலக்கத்திற்கு வேலை நாட்களில் அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம் - 091 - 2030700

05. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2024.07.16 பி.ப 2.00 இற்கு முன் கிடைக்குமாறு செயலாளர், தென் மாகாண கல்வியமைச்சு, தக்ஷினபாய, லபுதுவ, காலி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து பிரதம கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம், தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

06. கேள்விகள் திறத்தல் 2024.07.16 பி.ப. 2.30 இற்கு தென் மாகாண கல்வியமைச்சின் பெறுகைக் குழு தலைவரின் தலைமையில் அமைச்சில் இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

07. கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணையை இலங்கை வர்த்தக வங்கியின் மூலம் தென் மாகாண கல்வியமைச்சின் செயலாளரின் பெயருக்கு பெற்றுக் கொண்ட 2024.07.16 முதல் 2024.10.29 வரை செல்லுபடியாகும் கேள்விப் பிணையொன்றை அல்லது கல்வியமைச்சின் கணக்குப் பிரிவிற்கு காசு செலுத்திய பின்பு வழங்கப்படும் காசு பற்றுச்சீட்டின் பிரதியை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கிப் பிணைமுறியாகச் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைமுறி நிராகரிக்கப்படும்.

08. கேள்வி செல்லுபடியாகும் காலம் 77 நாட்களாகும்.

09. சமர்ப்பிக்கப்படும் வேலையுடன் சம்பந்தப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் உள்ளடக்கப்படுமாறு "செலோடேப்" ஒட்டி இருத்தல் வேண்டும். அதன் மூலப்பிரதியில் "மூலப்பிரதி" என்று குறிப்பிட வேண்டியதுடன் நகல் பிரதியில் "நகல்பிரதி" என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வேறுவேறு உறைகளில் இட்டு முத்திரையிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அவ் உறையை முத்திரையிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

10. கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிப்பதற்கு முன்பு குறித்த வேலைத்தளத்தை பரீட்சித்து இருத்தல் முக்கியம் ஆவதால் வேலைத்தளத்தை பரீட்சித்து கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. குறைபாடுடனான கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். இப்பெறுகை பற்றிய பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் என்பதை கவனித்தல் வேண்டும்.

**ரஞ்சித் யாப்பா,**
**பெறுகைக் குழுத் தலைவர்,**
**தென் மாகாண கல்வியமைச்சு,**
**முதலாம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி,**
2024.06.19

**தொ.பே. இலக்கம் : 091 - 2030700**
**மின்னஞ்சல் : acc.moesp@gmail.com**

# கொழும்பு மாவட்ட நீதிமன்றில்

ஐக்கிய இராச்சியம் W2 6NN, புரும்பீல்ட் விலாஸ் லண்டன், இல. 61 லப்வோ்த் கோட் வோவிக் எஸ்டேட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற திலக் ஏரங்க குணரத்ன என்பவரின் இறுதி விருப்பாவனம் மற்றும் மரண சாசனப்பத்திரம் தொடர்பான உயிலை மீள் முத்திரை இடுவதற்காக (1977ஆம் ஆண்டின் 20ம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறாக) சிவில் நடவடிக் கோவையின் பிரிவு 554U வின் கீழான விண்ணப்ப விவகாரம் தொடர்பாக

**மரணித்தவர்**

**வழக்கு இல.**: |DTS/00136/2024
**தன்மை**: மரணசாசனம்
**நடைமுறை**: சாதாரணம்
**பெறுமதி**: ரூபா 21,000,000/-

ஆனந்த கலப்பதி, 51 லப்வோர்த் கோட், வோவிக் எஸ்டேட், புரும்பீல்ட், விலாஸ், லண்டன் W2 6NN, ஐக்கிய இராச்சியம் - தற்பொழுது இல. 25/4, பான்ஸ் பிளேஸ், கொழும்பு -07

**மனுதாரர்**

2004 ஏப்ரல் மாதம் 1ந் திகதியன்று லண்டன் மேல் நீதிமன்ற மாவட்ட பதிவாளரால் வழங்கப்பட்ட, ஐக்கிய இராச்சியம், லண்டன் W2 6NN, புரும்பீல்ட் விலாஸ், லப்வேத் கோட், வோ்விக் எஸ்டேட், இல. 51, எனும் முகவரியைக் கொண்ட காலஞ்சென்ற திலக் ஏரங்க குணரெட்ணவின் இறுதி விருப்பாவனம் மற்றும் மரண சாசனம் தொடர்பான உயிலை மீள் முத்திரையிடுவதற்காக (1977 ஆண்டின் 20ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறாக) சிவில் நடவடிக் கோவை பிரிவு 554(U) வின் கீழாக, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்துக்கு இதிலுள்ள ஆவணம் பிரசுரமாகி (28) இருபத்தெட்டு நாட்கள் காலாவதியாகியதும் விண்ணப்பம் மேற்கொள்ளப்படும் என்று இத்தால் அறிவித்தல் விடப்படுகிறது.

2024ம் ஆண்டு 06 மாதம் 14ந் திகதியாகிய கொழும்பில்

**ஒப்பம்: விளங்கவில்லை**
**மனுதாரர்**

NLDB

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

### புத்தம் புதிய பசும்பாலின் விற்பனை

2024 ஒகஸ்ட் 1 ஆம் திகதியிலிருந்து 2024 ஒக்ரோபர் 31 ஆம் திகதியன்று வரையுமான காலஎல்லைக்கு கீழே குறிப்பிட்டுள்ள பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட புத்தம் புதிய பாலை விற்பனை செய்வதற்காக உள்ளூர் கொள்வனவுக்காரர்/கம்பனிகளிடமிருந்து கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைத் தலைவர் முத்திரைக்குறி பொறியிடப்பட்ட கேள்விகோரல்களை அழைக்கின்றார்.

| பண்ணை | நாளொன்றிற்கான ஆகக்கூடிய பால் (லீட்டர்களில்) | பண்ணை | நாளொன்றிற்கான ஆகக்கூடிய பால் (லீட்டர்களில்) |
|---|---|---|---|
| ரிதியகம பண்ணை, அம்பலாந்தொட்ட | 5,000 | பெலிகம பண்ணை, பெலிகமுவ | 100 |
| மெனிக்பாலம பண்ணை, போப்பத்தலாவ | 2,500 | ருக்கத்தன பண்ணை, பிங்கிரிய | 200 |
| போப்பத்தலாவ பண்ணை, போப்பத்தலாவ | 2,000 | மெல்சிரிபுர பண்ணை, மெல்சிரிபுர | 100 |
| ஆண்டிகம பண்ணை, தம்பதெனிய | 400 | சிரிங்கபாத்த பண்ணை, படல்கம | 100 |
| கல்பொக்குண பண்ணை, உடுபத்தாவ | 100 | நிக்கவரட்டிய பண்ணை, நிக்கவரட்டிய | 100 |
| கவுல்வெவ பண்ணை, நாரம்மல | 400 | ஓயமடுவ பண்ணை, அலயபட்டுவ | 100 |
| நாரங்கல பண்ணை, கித்தலாவ | 100 | ------------------------------------------- | ---------------------- |

ஆர்வமுள்ள கொள்வனவுக்காரர் தேபவிஅச தலைமை அலுவலக சந்தைப்படுத்தல் பிரிவை அல்லது மேலேயுள்ள எந்தவொரு பண்ணை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இது இயையுடைய ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விக்கோரல் ஆவணங்கள் ''தலைவர், பெறுகைக் குழு, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை, இல. 40, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05 என முகவரியிடப்பட்டு 2024 ஜுலை 8 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"Bids for Purchasing Fresh Milk"** என தயவு செய்து குறிப்பிடவும். கேள்விக்கோரல்கள் அதே நாளில் அதே இடத்தில் பி.ப. 2.30 மணிக்கு திறக்கப்படும்.

அனைத்து விபரங்களும் நிபந்தனைகளும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல.: 40, நாராஹேன்பிட்ட வீதி, கொழும்பு-05.**
**011-2501701/2, 0773782127 (சந்தைப்படுத்தல் முகாமையாளர்)**

## போதனா வைத்தியசாலை குளியாப்பிட்டிய

# கட்டிட நிர்மாணங்கள் மற்றும் திருத்த வேலைகளுக்காக விலைமனு கோரல்

01. குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பின்வரும் கட்டிட நிர்மாணங்கள் மற்றும் திருத்தவேலைகளுக்காக குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுவினால் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024-07-16ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ இல. | குறிப்பீட்டிலக்கம் | ஒப்பந்த விபரம் | ICTAD தரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மதிப்பீட்டுப் பெறுமதி (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|
| 01 | THKUL/ACC/ FM09/ Cons/36/2024 | Renovation of “L” Building | C6 and C5 | 3,500.00 | 195,000.00 | 13.01 |
| 02 | THKUL/ACC/ FM09/ Cons/37/2024 | Painting of Five Story Building | C6 and C5 | 3,500.00 | 200,000.00 | 10.6 |
| 03 | THKUL/ACC/ FM09/ Cons/38/2024 | Renovation of Administration Building | C6 and C5 | 4,000.00 | 320,000.00 | 16 |
| 04 | THKUL/ACC/ FM09/ Cons/39/2024 | Renovation of Clinic Pharmacy | C8 and C7 | 3,000.00 | 440,000.00 | 2.22 |

02. தகைமை வாய்ந்த ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்குச் சமனான மீளளிக்கப்படாத கட்டணத்தை சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் 2024-06-25ஆம் திகதி முதல் 2024-07-15ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

03. 01, 02 மற்றும் 03ஆம் தொடரிலக்க வேலை விடயத்திற்காக சமர்ப்பிக்கப்படும் சகல விலைமனுக்களுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கான இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியொன்று மற்றும் 4ஆம் தொடரிலக்க வேலை விடயங்களுக்காக சமர்ப்பிக்கப்படும் சகல விலைமனுக்களுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கான இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது இலங்கை காப்புறுதி சபையினால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியொன்று சமர்ப்பித்தல் கட்டாயமாகும். அது 2024-11-15ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் அது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய எனும் பெயரில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை ‘‘மூலப்பிரதி’’ ‘‘நகல்பிரதி’’ எனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அதை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையொன்றில் இட்டு அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயரைக் குறிப்பிட்டு 2024-07-16ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

05. விலைக்கோரல் ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. மேற்படி அட்டவணையின் 01, 02 மற்றும் 03ஆம் இலக்க வேலை விடயத்திற்கு 2024-07-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் பணிப்பாளரின் அலுவலகத்தில் இடம்பெறும்.

07. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைக்கோரல் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

08. 2024-07-16ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலை அலுவலகக் கட்டிடத்தின் கூட்ட அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் அன்றைய தினத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

09. இந்த விலைக்கோரல் தொடர்பிலான மேலதிக விபரங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு 037-2281261 நீடிப்பு 295/309 அல்லது 037-2284597 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொண்டு குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் விசாரித்தறியலாம்.

**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**போதனா வைத்தியசாலை,**
**குளியாப்பிட்டிய.**
**2024 ஜூன் 24.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## BID FOR THE SUPPLY OF ROLLER BEARINGS, BALL BEARINGS AND NEEDLE BEARINGS FOR SRI LANKA TRANSPORT BOARD (SLTB)

### Procurement No.: MT/04/09/04/MT/601

1. 2024.07.16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் 30 நாட்கள் கடன் அடிப்படையில் Roller bearings, Ball bearings and Needle bearings ஐ இபோச இற்கு வழங்கலுக்காக தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இபோச பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார். கேள்விமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கள் நடைமுறை மூலம் நடத்தப்படும். 2024.06.25 ஆம் திகதியிலிருந்து 2024.07.15 ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 50,000 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-05, கிருள வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகைக் குழுவின் செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| விளக்கம் | விலைமனு பாதுகாப்பு பெறுமதி (ரூ) |
|---|---|
| Supply of Roller, Ball bearings and Needle bearings for SLTB for a year on 30 days credit basis | For Bids offerings Spare Parts to a total value of<br>Rs.200,000,000 or less 2.0 Mn<br>Rs.200,000,001 to 300,000,000 3.0 Mn<br>Over Rs.300,000.001 4.5 Mn |

2. இயையுடைய வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக இறக்குமதி செய்வதற்கான உற்பத்தியாளர்களின் அங்கீகாரம் மற்றும் சான்றுள்ள வெளிநாட்டு உதிரிப் பாகங்களின் உற்பத்தியாளர்களின் ஏகநியமிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகள்/தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மாத்திரமே கேள்விகோரல்களை சமர்ப்பிப்பதற்கு உரித்தாவர்.
3. உரித்தான வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியான இறக்குமதிக்கான உற்பத்தியாளர்களின் அதிகாரம் மற்றும் சாட்சியமில்லாத முன்வைப்புக்கள் அல்லது உள்ளூர் உற்பத்தியாளர்கள் உற்பத்தியாளரொருவராக பதிவில்லாமல் இருப்பின் முன்வைக்கப்பட்ட வணிக உரிமைப் பெயரானது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. இதற்காக தகைமை பெற்றுள்ள கேள்விதாரர்களுக்கு உள்ளூர் முன்னுரிமை வழங்கப்படும்.
4. 2024.07.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைப் பிரிவில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
5. ஒவ்வொரு கேள்விதாரரும் மற்றும் முகவரொருவராக அல்லது பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக கேள்விதாரருக்கு அல்லது எந்தவொரு கேள்விதாரரின் சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்வி கோரல்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக தன்னை 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்தல் வேண்டும். பதிவின் மூலப்பிரதியானது கேள்விகோரலுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் கேள்விதாரர்களின் கேள்விகோரல்கள் நிராகரிக்கப்படும்.
6. கேள்வி கோரல்கள் 2024.11.16 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் கோரப்பட்ட விலைகள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து ஒரு (01) வருடத்திற்கு நிலையாகவிருத்தல் வேண்டும்.
7. மேலே குறிப்பிட்டுள்ளவாறு உரித்தான விலைமனு பாதுகாப்பு பெறுமதி/ பெறுமதிகளுடன் இணைக்கப்பட்ட ஒன்று அல்லது அனைத்து உதிரிகளுக்கும் கேள்விதாரர்கள் சமர்ப்பிக்கலாமென்பதுடன் 2024.11.16 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தலும் வேண்டுமென்பதுடன் இபோச இனால் விண்ணப்பிக்கும் எழுத்து மூலமான முதலாவது கோரிக்கையின் பேரில் மாற்ற இயலாததும் நிபந்தனையற்ற தன்மையில் மாற்றக் கூடியதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவினால் பதிவு பெற்றதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனு பாதுகாப்பு பெறுமதியில்லாமல் இணைக்கப்படும் எந்தவொரு கேள்விகோரலும் நிராகரிக்கப்படும்.
8. கேள்விகோரல் ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் கேள்விதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது இலட்சினை பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. கேள்வி கோரல்கள் 2024.07.16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் ஒன்றில் கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை இபோச பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்தில் பேணப்படும் விலைமனுப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் கிடைக்கும் தன்மையில் அனுப்பப்படல் வேண்டும். முத்திரைக்குறி பொறிக்கப்பட்டு விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“Supply of Roller bearings, Ball bearings and Needle bearings for SLTB”** என குறிப்பிடப்படல் வேண்டும்.
10. கேள்வி கோரல்கள் அவற்றை மூடிய பின்னர் பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ‘செத்சிரிபாய’ 7 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பெறுகைப் பிரிவில் உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விகோரல்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7 ஆம் மாடி, ‘செத்சிரிபாய’, II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**
**விசாரணைகள்: பிரதான பெறுகை முகாமையாளர், இபோச பெறுகை பிரிவு,**
**தொலைபேசி: 011 2588457, 011 7706110, 0771056204**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
## போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகார சபை – சப்ரகமுவ

# விலைமனுக் கோரலுக்கான அழைப்பு

**அஸ்போல்ட் வழங்குதல்**

| ஒப்பந்த இலக்கம் | நிர்மாண ஒப்பந்தம் | காலம் | அளவு MT | விலைக் கோரல் பிணை முறி (ரு |
|---|---|---|---|---|
| SAB/RDA/PD/TEN/SUP/2024/10 | கொழும்பு - இரத்தினபுரி - வெள்ளவாய - மட்டக்களப்பு வீதிக்கு அஸ்போல்ட் வழங்குதல் 84+000 - 91+000 | 01 மாதம் | 1000 | 243,000.00 |
| SAB/RDA/PD/TEN/SUP/2024/11 | கொழும்பு - இரத்தினபுரி - வெள்ளவாய - மட்டக்களப்பு வீதிக்கு அஸ்போல்ட் வழங்குதல் 91+000 - 98+000 | 01 மாதம் | 1000 | 243,000.00 |
| SAB/RDA/PD/TEN/SUP/2024/12 | கொழும்பு - இரத்தினபுரி - வெள்ளவாய - மட்டக்களப்பு வீதிக்கு அஸ்போல்ட் வழங்குதல் 68+500 - 71+000 | 01 மாதம் | 1000 | 243,000.00 |
| SAB/RDA/PD/TEN/SUP/2024/13 | கொழும்பு - இரத்தினபுரி - வெள்ளவாய - மட்டக்களப்பு வீதிக்கு அஸ்போல்ட் வழங்குதல் 71+000 - 75+000 | 01 மாதம் | 1000 | 243,000.00 |
| SAB/RDA/PD/TEN/SUP/2024/14 | பாணந்துறை - தம்பபான - இரத்தினபுரி வீதிக்கு அஸ்போல்ட் வழங்குதல் 37+000 - 45+000 | 01 மாதம் | 1000 | 236,000.00 |
| SAB/RDA/PD/TEN/SUP/2024/15 | பாணந்துறை - தம்பபான - இரத்தினபுரி வீதிக்கு அஸ்போல்ட் வழங்குதல் 45+000 - 52+000 | 01 மாதம் | 1000 | 236,000.00 |

**அஸ்போல்ட் பரப்புதல்**

| ஒப்பந்த இலக்கம் | நிர்மாண ஒப்பந்தம் | காலம் | அளவு TON |
|---|---|---|---|
| RAD/SAB/PD/TEN/CON/2024/07 | கொழும்பு - இரத்தினபுரி - வெள்ளவாய - மட்டக்களப்பு வீதி மற்றும் பாணந்துறை - தம்பபான - இரத்தினபுரி வீதிகளுக்கு பேவர் இயந்திரத்தைப் பயன்படுத்தி அஸ்போல்ட் பரப்புதல் மற்றும் கனப்படுத்துதல் | 03 மாதங்கள் | 6000 |

இரத்தினபுரி மாவட்டத்தில் மேற்கூறிய வீதிப் பராமரிப்புகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 ஜூன் மாதம் 24ஆம் திகதி முதல் 2024 ஜுலை மாதம் 07ஆம் திகதி வரையில் பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாகாணப் பொறுப்பு பணிப்பாளர் அலுவலகம் (சப்ரகமுவ),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**இரத்தினபுரி. தொ.பே. 045-2222608**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்
### நீர்ப்பாசன அமைச்சு
## நீர்ப்பாசனத் திணைக்களம்
### மொனராகலை பிராந்தியம்

1. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சிவில் வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மொனராகலை, நீர்ப்பாசனத் திணைக்களம், நீர்ப்பாசனப் பணிப்பாளரின் சார்பில் பிராந்திய பெறுகைக்குழுத் (RPC) தலைவர் கோருகின்றார்.
2. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் விலைமனுக்கள் கோரப்படும். 04/2016(iii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) வேலைகளின் மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத்தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.

| ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தத்தின் தலைப்பு | ஆகக் குறைந்த CIDA தரம் | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி / செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|
| மொனராகலை வரம்பு, வெள்ளவாய பிரிவு, தெட்டகமுவ திட்டத்தில் தெட்டகமுவ அணைக்கட்டின் Spill tail கால்வாயில் 0+592 இடம் முதல் 0+777 இடம் வரை மேம்படுத்துதல் விலைக்கோரல் இல. **ID/MON/NCB/2024/01** | C6 மற்றும் C5 நீர்ப்பாசனம் | 225,000.00 2024-10-28ஆம் திகதி வரை | 3,000.00 |
| மொனராகலை வரம்பு, வெள்ளவாய பிரிவு, ஹந்தபான்கல திட்டத்தில் Spill tail கால்வாயில் Causeway நிர்மாணித்தல் விலைக்கோரல் இல. **ID/MON/NCB/2024/02** | C7 மற்றும் C6 நீர்ப்பாசனம் | 75,000.00 2024-10-28ஆம் திகதி வரை | 3,000.00 |
| மொனராகலை வரம்பு, வெள்ளவாய பிரிவு, ஹந்தபான்கல திட்டத்தில் பலுகஸ் ஆர Feeder Canal Spill மேம்படுத்துதல் விலைக்கோரல் இல. **ID/MON/NCB/2024/03** | C7 மற்றும் C6 நீர்ப்பாசனம் | 75,000.00 2024-10-28ஆம் திகதி வரை | 3,000.00 |
| மொனராகலை வரம்பு, வெளிஓயா பிரிவு, ஹம்பேகமுவ Spill இல் Spill tail கால்வாயை அகலப்படுத்துதல் விலைக்கோரல் இல. **ID/MON/NCB/2024/04** | C6 மற்றும் C5 நீர்ப்பாசனம் | 195,000.00 2024-10-28ஆம் திகதி வரை | 3,000.00 |
| மொனராகலை வரம்பு, பிபிலை பிரிவில் கல்ஓயா ஆற்றின் இடதுகரை அணைக்கட்டுக்கு அருகிலுள்ள துனுமெவ பாலத்திற்கு மரக் குவியல்கள் (Timber piles) வழங்குதல் மற்றும் கேபியன் பெட்டிகளை நிர்மாணிப்பதன் மூலம் ஆற்றங் கரையைப் பாதுகாத்தல் மற்றும் சேர்த்துள்ள பொருட்களை அப்புறப்படுத்துதல் விலைக்கோரல் இல. **ID/MON/NCB/2024/05** | C6 மற்றும் C5 நீர்ப்பாசனம் | 195,000.00 2024-10-28ஆம் திகதி வரை | 3,000.00 |
| மொனராகலை வரம்பு, மொனராகலை பிரிவில் உள்ள கும்புக்கன திட்டத்தில் வலதுகரை பக்கத்தில் மகுள்ஆர ஓடையில் 0+540 கி. மீற்றரில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் விலைக்கோரல் இல. **ID/MON/NCB/2024/06** | C6 மற்றும் C5 நீர்ப்பாசனம் | 240,000.00 2024-10-28ஆம் திகதி வரை | 3,000.00 |
| மொனராகலை வரம்பு, மொனராகலை பிரிவில் உள்ள கும்புக்கன திட்டத்தில் அணைக்கட்டு தளத்தில் escape கட்டமைப்பிற்கு அணுகல் கால்வாயின் வலதுகரையில் 47 மீற்றர் நீளமான தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் விலைக்கோரல் இல. **ID/MON/NCB/2024/07** | C5 மற்றும் C4 நீர்ப்பாசனம் | 390,000.00 2024-10-28ஆம் திகதி வரை | 3,000.00 |

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் மேற்கூறிய CIDA பதிவு மற்றும் பட்டியல்படுத்தப்பட்டுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள. மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் 5ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
4. பிராந்தியப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் உறுதியானதுமாகும். எந்தவொரு அல்லது சகல விலைமனுக்களையும் தமது சொந்த விருப்பின் பேரில் நிராகரிக்கும் அதிகாரத்தை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மொனராகலை, ஹுலந்தாவ சந்தி, நீர்ப்பாசனத் திணைக்களம், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.இல. 055-2276018) மற்றும் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் ஒரு தொகுதிக்காக செலுத்தியதன் பின் 2024-06-24ஆம் திகதி முதல் 2024-07-15ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மொனராகலை, ஹுலந்தாவ சந்தி, நீர்ப்பாசனத் திணைக்களம், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனப் பணிப்பாளரிற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும். விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-07-08ஆம் திகதி மு.ப. 09.30 மணிக்கு மொனராகலை, ஹுலந்தாவ சந்தி, நீர்ப்பாசனத் திணைக்களம், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
7. விலைமனுக்களை 2024-07-15ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனத் திணைக்களம், ஹுலந்தாவ சந்தி, மொனராகலை எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024-09-30ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் என்பதுடன் விலைமனுக்களுடன் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ள வடிவத்திலான நிபந்தனையற்ற விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**ஹுலந்தாவ சந்தி,**
**மொனராகலை.**
2024-06-24.

## டி20 உலகக் கிண்ணம்:

# அவுஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சி கொடுத்த ஆப்கான் அரையிறுதியை தக்கவைத்தது

சர்வதேச கிரிக்கெட்டில் முதல்முறையாக அவுஸ்திரேலிய அணியை விழ்த்தி வரலாற்று வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி டி20 உலகக் கிண்ணத்தின் அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை தக்கவைத்துக் கொண்டது.

செயின்ட் வின்சன்ட் மைதானத்தில் இலங்கை நேரப்படி நேற்று (23) நடைபெற்ற இந்தப் போட்டியில் துடுப்பெடுத்தாட கடினமான ஆடுகளத்தில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட ஆப்கான் அணி 20 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப வீரர்களான ரஹ்மானுல்லா குர்பாஸ் (60) மற்றும் இப்ராஹிம் சத்ரான் (51) இணைப்பாட்டமாக 118 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டது இந்த ஓட்டங்களை பெற ஆப்கான் அணிக்கு உதவியது.

இதன்போது அடுத்தடுத்து இரண்டாவது போட்டியிலும் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பட் கம்மின்ஸ் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தினார். சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இவ்வாறான சாதனையை படைக்கும் முதல் வீரர் கம்மின்ஸ் ஆவார்.

பதிலெடுத்தாட வந்த அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பத்திலேயே 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தி நெருக்கடி கொடுக்க ஆப்கான் அணியால் முடிந்தது. எனினும் கிளன் மெக்ஸ்வெல் 35 பந்துகளில் அரைச் சதம் பெற்று ஆஸி. அணியை மீட்கப் போராடினார்.

எனினும் குல்புத்தீன் நயிப் மார்கஸ் ஸ்டொயினிஸ் மற்றும் டிம் டேவிட்டின் விக்கெட்டை வீழ்த்தி தொடர்ந்து மெக்ஸ்வெல்லின் விக்கெட்டையும் சாய்த்ததால் ஆப்கான் கை ஓங்கியது.

இறுதியில் ஆப்கான் அணி 19.2 ஓவர்களில் 127 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. நயிப் 4 ஓவர்களுக்கும் 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.



இதன்மூலம் 21 ஓட்டங்களால் வெற்றியீட்டி ஆப்கான் அணி சர்வதேச கிரிக்கெட்டில் அவுஸ்திரேலியாவை ஆறு முயற்சிகளுக்குப் பின்னர் முதல் முறை தோற்கடித்தது. நான்கு ஒருநாள் சர்வதேச போட்டிகள் உட்பட அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக இதற்கு முன்னர் ஆடிய அனைத்துப் போட்டிகளிலும் ஆப்கான் அணி தோல்வியையே சந்தித்தது.

'நாம் நீண்ட காலமாக காத்திருந்தோம், இது எனக்கும், எனது நாட்டுக்கும், எனது மக்களுக்கும் சிறந்த ஒரு தருணமாகும்' என்று ஆட்ட நாயகன் விருதை வென்ற குல்புத்தீன் நயிப் தெரிவித்தார். முன்னதாக நேற்று முன்தினம் நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணி 50 ஓட்டங்களால் இலகு வெற்றியீட்டியது.

இதன்மூலம் சுப்பர் 8 சுற்றின் குழு ஒன்றின் அரையிறுதி வாய்ப்புக்கு தொடர்ந்து நான்கு அணிகளும் போராட வேண்டியுள்ளது. இன்று செயின்ட் லூசியாவில் நடைபெறும் இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான போட்டியில் வெற்றிபெறும் அணி அரையிறுதிக்கு முன்னேறும் என்பதோடு தோற்கும் அணி இலங்கை நேரப்படி நாளை நடைபெறும் ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான போட்டியின் முடிவு அடிப்படையில் அரையிறுதி வாய்ப்பை பெறும்.

# இலங்கை மகளிர் குழாம் அறிவிப்பு

மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணிக்கு எதிராக இன்று (24) ஆரம்பமாகும் மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடருக்கான 16 பேர் கொண்ட இலங்கை மகளிர் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.



சமரி அத்தபத்து தலைமையிலான இந்த அணியில் அனுபவ வேகப்பந்து வீராங்கனை உதேஷிகா பிரபோதனி மற்றும் சுழற்பந்து வீராங்கனை இனோகா ரணவீர ஆகியோர் இடம்பெறாதது குறிப்பிடத்தக்கது. எனினும் அனுபவ சுழற்பந்து வீராங்கனை ஓஷதி ரணசிங்க 16 பேர் குழாத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரை வென்ற இலங்கை மகளிர்கள் ஆடும் டி20 தொடரின் கடைசி இரு போட்டிகளும் ஜூன் 26, 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதோடு அனைத்து ஆட்டங்களும் ஹம்பாந்தோட்டையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை குழாம்: சமரி அத்தபத்து (தலைவி), விஷ்மி குணரத்ன, ஹர்ஷிதா சமரவிக்ரம, ஹசினி பெரேரா, நிலக்ஷி டி சில்வா, கவிஷ டில்ஹாரி, ஓஷதி ரணசிங்க, இனோஷி பெர்னாண்டோ, சுகந்திகா குமாரி, அமா காஞ்சன, ரஷ்மிகா செவ்வந்தி, இமேஷா துலானி, ஷஷினி கிஹானி, காவ்யா கவிந்தி, சச்சினி நிசன்சலா, கௌஷினி நுத்யங்கனா.



## சர்வதேச செய்திகள்

# வடக்கு காசாவில் இஸ்ரேலின் கடுமையான தாக்குதல்களில் 50க்கும் மேற்பட்டோர் பலி

## நெதன்யாகு அரசுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம்

வடக்கு காசாவில் இஸ்ரேல் நடத்திய உக்கிர தாக்குதல்களில் 50க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட நிலையில் இடிபாடுகளில் புதையுண்ட உடல்களை மீட்பதில் மீட்பாளர்கள் போராடி வருகின்றனர். காசாவின் தெற்கு நகரான ரபா உட்பட பிற பகுதிகளிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

வடக்கு காசாவில் உள்ள காசா நகரிலேயே இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருப்பதாக காசா அரச ஊடக அலுவலகத்தின் பணிப்பாளர் இஸ்மைல் அல் தவப்தா தெரிவித்துள்ளார். காசாவில் இருக்கும் எட்டு வரலாற்று அகதி முகாம்களில் ஒன்றான அல் சட்டியில் உள்ள வீடுகள் மீது இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் 24 பேர் கொல்லப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அல் துவப்பா பகுதியில் உள்ள வீடுகள் மீது நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் மேலும் 18 பேர் கொல்லப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

காசா பகுதியில் உள்ள ஹமாஸ் படைத் தளங்கள் இரண்டின் மீது போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை காசா நகரில் அல் சப்ரா பகுதியில் வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் எட்டு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் பலர் கயமடைந்ததாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

ஆக்கிரமிப்பு போர் விமானங்கள் மத்திய காசாவின் நுஸைரத் அகதி முகாமில் பலஸ்தீனர்களை இலக்கு வைத்து நடத்திய தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரின் மேற்கு மற்றும் தெற்கு பகுதியில் இஸ்ரேலிய பீரங்கிகள் சரமாரி தாக்குதல்களை நடத்தியதாகவும் அங்குள்ள பிரேசில் பகுதியில் பல வீடுகளையும் இஸ்ரேலிய படை குண்டு வைத்து தகர்த்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் எட்டு மாதங்களுக்கு மேலாக இஸ்ரேலின் தாக்குதல்கள் இடைவிடாது தொடரும் நிலையில் அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் 37,500ஐ தாண்டியுள்ளதோடு காயமடைந்தவர்கள் எண்ணிக்கை 86,000ஐ நெருங்கியுள்ளது.

**'குற்றவாளிப் பிரதமர்'**

காசாவில் தொடரும் போர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசுக்கு இஸ்ரேலுக்குள் அழுத்தத்தை அதிகரித்து வருகிறது. இந்நிலையில் இஸ்ரேலின் மிகப்பெரிய நகரான டெல் அவிவில் கடந்த சனிக்கிழமை இரவு ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் இஸ்ரேலிய தேசியக் கொடியை அசைத்தவாறு நெதன்யாகு அரசுக்கு எதிராக கோசம் எழுப்பினர். காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலியர்களை மீட்பது மற்றும் இஸ்ரேலில் புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

இதில் பல ஆர்ப்பாட்டக்காரர்களும் 'குற்றவாளிப் பிரதமர்' மற்றும் 'போரை நிறுத்து' என்ற பதாகைகளை சுமந்திருந்தனர்.

'எனது பேரக் குழுந்தைகளின் எதிர்காலம் பற்றிய பயத்தினாலேயே நான் இங்கு வந்திருக்கிறேன். நாம் வெளியே வந்து இந்த பயங்கர அரசை வெளியேற்றாத பட்சத்தில் அவர்களுக்கு எதிர்காலம் ஒன்று இருக்காது' என்று 66 வயதான ஒப்பந்ததாரர் ஒருவரான ஷய் எரெல் என்பவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் 150,000க்கும் அதிகமானோர் பங்கேற்றிருந்ததாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இது காசாவில் போர் வெடித்த பின்னர் இடம்பெற்ற மிகப் பெரிய அரச எதிர்ப்பு போராட்டம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முன்வைத்த திட்டம் ஒன்று ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும் அங்கீகாரம் பெற்றது. இதற்கு இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்பில் இன்னும் உடன்பாடு எட்டப்படவில்லை.

எனினும் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம்




பெற்று வருவதாக கட்டார் பிரதமர் அல்தானி தெரிவித்துள்ளார். காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவரவும் பிராந்தியத்தில் வன்முறைகள் பரவுவதை தடுப்பதற்கும் பிராந்திய மற்றும் சர்வதேச பங்குதாரர்களுடன் இணைந்து தமது அரசு தொடர்ந்து முயன்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

காசா போர் நிறுத்த முயற்சியில் எகிப்து மற்றும் அமெரிக்காவுடன் இணைந்து கட்டாரும் மத்தியஸ்தத்தில் ஈடுபட்டு வருகிறது.

'போர் நிறுத்தம் மற்றும் கைதிகள் பரிமாற்றம் தொடர்பான ஒப்பந்தத்தை நோக்கி கட்டார் செயல்பட்டு வருகிறது. தற்போது அனைத்து தரப்பினரின் பதில்களையும் மறுபரிசீலனை செய்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பங்காளிகளுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகிறோம்' என்று கட்டார் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

**பிராந்திய பதற்றம்**

காசா போரை ஒட்டி பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்திருக்கும் சூழலில் லெபனான் எல்லையில் இஸ்ரேல் மற்றும் பலம்மிக்க ஹிஸ்புல்லா இடையில் அண்மைய நாட்களில் மோதல்கள் தீவிரமடைந்திருக்கும் சூழலில் அது முழு அளவிலான போராக வெடிக்கும் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது.

இஸ்ரேலிய தாக்குதல் ஒன்றில் இஸ்லாமியவாத தளபதி ஒருவர் கொல்லப்பட்ட நிலையில் அதற்கு பதிலடியாக ஆளில்லா விமானம் மூலம் வடக்கு இஸ்ரேலில் இராணுவ நிலை ஒன்றை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாக லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு நேற்று தெரிவித்தது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே கிட்டத்தட்ட தினசரி பரஸ்பரம் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் லெபானனின் கிழக்கு பக்கா பகுதியில் இஸ்ரேல் கடந்த சனிக்கிழமை நடத்திய தாக்குதல் ஒன்றில் ஜமா இஸ்மைலியா குழுவின் தளபதிகளில் ஒருவரான ஐமன் கொட்மா கொல்லப்பட்டாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மறுபுறம் இஸ்ரேலுடன் முழு அளவில் போர் வெடித்தால் ஹிஸ்புல்லாவுடன் இணைவதற்கு மத்திய கிழக்கில் உள்ள ஆயிரக்கணக்கான ஈரான் ஆதரவு குழுக்களின் போராளிகள் தயாராகி வருவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிராக செங்கடலில் செல்லும் இஸ்ரேலுடன் தொடர்புபட்ட கப்பல்கள் மீது யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். ஹூத்திக்களால் அனுப்பப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஆளில்லா விமானம் ஒன்று நேற்று செங்கடலில் உள்ள கப்பல் ஒன்றை தாக்கி சேதப்படுத்தி இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹூத்திக்களின் தாக்குதல்களை சமாளிக்கும் வகையில் அமெரிக்கா அனுப்பிய யு.எஸ்.எஸ். டிவைட் டி. ஐசன்ஹோவர் கப்பல் எட்டு மாதங்கள் செங்கடல் புகுதியில் நிலை நிறுத்தப்பட்டு அங்கிருந்து திரும்பிய நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டில் இருக்கும் ஹுதைதா துறைமுக நகர கடற்கரைக்கு அப்பால் இருந்து அதிகாலையில் அனுப்பப்பட்ட ஆளில்லா விமானமே இந்தத் தாக்குதலை நடத்தி இருப்பதாக பிரிட்டன் இராணுவத்தின் ஐக்கிய இராச்சிய கடல்சார் வர்த்தக நடவடிக்கை மையம் தெரிவித்துள்ளது. இதில் கப்பலுக்கு சேதங்கள் ஏற்பட்டபோதும் அங்கிருப்பவர்கள் பாதுகாப்பாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹூத்திக்களின் இந்தத் தாக்குதல்களால் ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய சந்தைகளுக்கான கப்பல் பாதையில் பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திபெத் தொடர்பில் சட்டம் நிறைவேற்றம்

சீனாவுக்கும் திபெத்துக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவி வரும் சர்ச்சையை அமைதியான வழியில் தீர்த்து வைக்கவென அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.



ஓரிகான் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜெஃப் மெர்க்லியால் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட திபெத் சீன தகராறு சட்டமூலம் 391/26 என்ற வித்தியாசத்தில் நிறைவேறியுள்ளது. இது ஏற்கனவே அமெரிக்க செனட் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இந்நிலையில் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள இச்சட்டமூலம் ஜனாதிபதி ஜோ பைடனின் கையெழுத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்க பிரதிநிதிகள் சபைப் பிரதிநிதிகள் திபெத் ஆன்மீகத் தலைவரை கடந்த வார நடுப்பகுதியில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

# காயமடைந்த பலஸ்தீனரை வாகனத்தில் கட்டி அழைத்துச் சென்ற இஸ்ரேல் படை

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகரில் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட இஸ்ரேலியப் படை காயமடைந்த பலஸ்தீனர் ஒருவரை தனது இராணுவ வாகனத்தின் முன் பக்கமாகக் கட்டி மனிதக் கேடயமாக பயன்படுத்தியுள்ளது.

கடந்த சனிக்கிழமை (22) இணையத்தில் வெளியாகி சர்வதேச ஊடகங்களால் உறுதி செய்யப்பட்ட வீடியோ ஒன்றில் ஜெனினைச் சேர்ந்த பலஸ்தீன குடியிருப்பாளரான முஜாஹித் அஸ்மி என்பவரை இராணுவ ஜீப் வண்டியில் முன்னால் கட்டி அழைத்துச் செல்லப்படுவது தெரிகிறது. அப்போது அந்த வண்டி இரு அம்புலன்ஸ்களையும் கடந்து செல்கிறது.

ஜெனின் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட அவரை இவ்வாறு இஸ்ரேலியப் படை அழைத்துச் சென்றதாக அஸ்மியின் குடும்பத்தினர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் குறிப்பிட்டனர். அப்போது அவர் காயமடைந்த நிலையில் இருந்துள்ளார்.

குடும்பத்தினர் அம்புலன்ஸ் வண்டியை கேட்டபோது, இராணுவத்தினர் அஸ்மியை ஜீப் வண்டியின் முன் பக்கத்தில் கட்டி அங்கிருந்து சென்றுள்ளனர்.

அஸ்மியை தம்மிடம் தருவதற்கு இஸ்ரேலிய படையினர் மறுத்ததாக பலஸ்தீன அம்புலன்ஸ் ஓட்டுநர் ஒருவரான அப்துல்ரவூப் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சண்டையில் காயமடைந்தவரை பிடித்ததாக இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. படையினர் இராணுவ நெறிமுறைகளை மீறி இருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்றும் அது கூறியது. காசாவில் போர் நீடிக்கும் நிலையில் மேற்குக் கரையிலும் வன்முறை அதிகரித்திருக்கும் சூழலிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேற்குக் கரை நகரங்கள் மற்றும் கிராமங்களில் இஸ்ரேலியப் படை அடிக்கடி சுற்றிவளைப்புகளை நடத்துவதோடு யூதக் குடியேறிகள் பலஸ்தீன கிராமங்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 24ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.